# சதங்கை

காலாண்டு இதழ்

இலக்கிய வாசகனின் நண்பன்




ஆசிரியர் : வனமாலிகை

இதழ் 11

1997 ஏப்ரல் மே ஜூன்

ரூ. 10

padippakam


# nalli

*Famous For*

**LATEST DESIGN**
**BEST QUALITY**
**SILK SAREES**

Phone : 4344115 (7 LINES)
Telex : 041-23299

*Nalli* **CHINNASAMI CHETTY**

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

Opposite Panagal Park,
9, Nageswaran Road, T. Nagar, Madras - 600 017.

AIR CONDITIONED


படிப்பகம்

padippakam


# சதங்கை

இதழ் 11

1997 ஏப்ரல், மே, ஜூன்

ஆசிரியர்

வனமாலிகை

உதவி ஆசிரியர்

எம். சிவசுப்ரமணியம்

ஆசிரியர் குழு

புதுவை. ரா. ரஜனி

எஸ்.எஸ். நாயகம்

தனி இதழ் ரூ. 10

ஆண்டு சந்தா ரூ. 40

இரண்டு ஆண்டு சந்தா ரூ. 60

வெளிநாடு சந்தா ரூ. 200

சந்தா தொகையை Sathangai, Nagercoil என்ற பெயரில் பண விடையாகவோ, வரைவோலையாகவோ அனுப்பலாம். காசோலை அனுப்புகிறவர்கள் ரூ. 12 சேர்த்து அனுப்பவும்.

சதங்கை

53/2, பாண்டியன் தெரு,

கவிமணி நகர்,

நாகர்கோவில் - 629 002.


★ ஏற்காத படைப்புகளைத் திருப்பியனுப்ப இயலாது.

★ புத்தக வங்கிக்கு நூலின் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

★ அஞ்சலட்டையில் வரும் கவிதைகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.




## சிறுகதைகள்

ஆர். சூடாமணி

அனுராதா

சரஸ்வதிராம்நாத்

கழனியூரன்

## கட்டுரைகள்

ராஜமார்த்தா

ஜெயமோகன்

மனுஷ்ய புத்தி

சிவக்குமார்

## கவிதைகள்

கலாப்ரியா

பாட்டாளி

ஆர். ரத்தின

சோவி. பர

எஸ். செந்தி

வத்சலகுமார

ஏஸ். அப்பா

கே.வி. ரா

குமரி அமுத

## நேர்காணல்

டாக்டர். க. பஞ்சாங்கம்

## பிறபகுதிகள்

ஆசிரியர் பக்கம்

புத்தக வங்கி

சிம்மக்குரலோனுக்கு அஞ்சலி

எதிர்வினை

தேவதேவனின் கடிதம்

புத்தக உலகம்


அடுத்த இதழில் . . .

ஞானி

எம்.எஸ்.



படிப்பகம்

padippakam

# ஆசிரியர் பக்கம்

சதங்கை காலாண்டு இதழாக வெளிவந்தபின், வெளியாகும் மூன்றாவது இலக்கியச் சிறப்பு மலர் இது.

சதங்கை வெளியீட்டிற்கு பொது நிறுவனங்களின் உதவி இல்லை. சதங்கையின் தொடக்க காலத்திலிருந்து அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் அவர்கள் தொடர் விளம்பரங்கள் தந்து சதங்கை வெளியீட்டிற்கு உதவி செய்கிறார்கள். சதங்கைமீது அவர்களின் ஈடுபாட்டிற்கு இதயம் நிறைந்த நன்றி. அதுபோல லலிதா ஜூவல்லரி நிர்வாக இயக்குநர் திரு. சுகுமாரன் அவர்கள், நாகர்கோவில் அலி ஜூவலர்ஸ், இருளப்பபுரம் டாக்டர் எஸ். சதாசிவம், நல்லி குப்புசாமி செட்டி, தொழிலதிபர் எம். சி. பாலன், நாஞ்சில் பெனிபிட் பண்ட்ஸ், என்.எஸ்.கே. பாலிடெக்னிக், கன்னிகா ஜூவல்லரி, சிலம்பு சுரேஷ், புதுவை மாஸ் ஹோட்டல், சுதர்சன், எம்.எஸ். ஸ்டீல் ஹவுஸ் நெஞ்சில் . . . ஈரம் சுரந்தவர்கள் - நவீனத் தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்காக விளம்பரம் மூலம் உதவிய இவர்களுக்கு நன்றி.

யதார்த்த படைப்பாளிகள், முற்போக்கு சிந்தனையாளர்கள், சதங்கை களத்தில் உரிமையோடு பேனா முனையைப் பதிவு செய்கிறார்கள். அவர்களின் பேனா முனையின் கூர்மையை நாங்கள் மழுங்கடிப்பதில்லை. படைப்பாளிகளின் கருத்துக்கள் சதங்கைக்கு உடன்பாடில்லை என்றாலும், இலக்கியத்தின் கருத்துக்காக பதிவு செய்கிறோம். இந்த மலரில் சில கவிஞர்களின் முகங்களைக் காட்டியுள்ளோம். எழுத்தில் முதிர்ச்சி ஏற்படும் என்பதை அவர்களின் 'சொல்லேர்கள்' உறுதி செய்கின்றன.

புது தில்லியிலுள்ள கதா நிறுவனம் ஆண்டு தோறும் இந்திய மொழிகளிலுள்ள சிறந்த சிறுகதை, பத்திரிகை ஆகியவைகளுக்கு பரிசும், விருதும் வழங்கி பெருமைப்படுத்துகிறது. 1996 -ல் புதுவை. ரா. ரஜினி எழுதிய சாபங்கள் சிறந்த சிறுகதையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அது வெளியான சதங்கைக்கும் பாராட்டும் விருதும் வழங்கப்பட்டன.

1997 மார்ச் 10,11,12 தேதிகளில் புதுதில்லியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. சதங்கையின் சார்பாக உதவி ஆசிரியர் எம். சிவசுப்ரமணியம் கலந்து கொண்டார்.

கதா நிறுவனம் எங்களுக்குப் பரிசும், விருதும் வழங்கியது என்றால் அதற்கு 'ரிஷிமூலம்' நீங்கள் தான். சதங்கை இன்னும் பல பரிசுகள், விருதுகள் பெற உங்கள் ஆதரவு தேவை. கதா அமைப்பு சதங்கைக்கு வழங்கிய விருது. இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறது. கதா நிறுவனத்திற்கு எங்கள் நன்றி.

இலக்கியச் சிறப்பு மலர் பற்றி உங்கள் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் புதிய பகுதியொன்றினைத் துவக்க நினைத்துள்ளேன்.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் சதங்கை பேசப்பட வாய்ப்பினை ஏற்படுத்துங்கள்.

**வனமாலிகை**



படிப்பகம்

padippakam


# சுதர்சன்

**பட்டுச்சேலையகம்**

மணிமேடை,

**நாகர்கோவில்**

பொன்விழா ஆண்டு

**1946 - 1996**

இக்கடை 1946-ல் ஒரு மழை நாளில் திறக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம். நாழி அரிசி நான்கு அணாவுக்கு விற்றுக் கொண்டிருந்த காலம் . . .




படிப்பகம்

padippakam

# அனு அழுகிறாள் . . .

ஆர். சூடாமணி

அந்த கருப்பு நாய் போனது சபேசன் வீட்டில் எல்லாருக்குமே நிம்மதி தான்.

நடுத்தர சைஸில் இருந்தது. அளவு மீறி வளர்ந்த குட்டி அல்லது வளர்ச்சி குன்றிய பெரிசு. அதன் குரலும் அப்படித்தான். வள். . . வள் . . . என்று குரைக்கிறதா? கீச் . . . கீச் . . . என்று கத்துகிறதா? நாயா நாய்க்குட்டியா? பட்டிமன்றம் நடத்தலாம்.

எங்கிருந்து வந்தது? கண்திறக்காத குட்டியாயிருந்த போது யாராவது 'வேண்டாம்' என்று இங்கெங்காவது கொண்டு வந்து போட்டிருப்பார்களா? அப்படிப் போட அது மனிதப் பெண் சிசு இல்லையே. தவிர, அதைக் கண்திறக்காத குட்டி நிலையில் பார்த்ததாய் அந்த வட்டாரத்தில் யாருக்கும் நினைவில்லை. இப்போதுள்ள குட்டி/பெரிசு வடிவிலேயே அது திடீரென்று ஒரு நாள் விடியல் வேளையில் சபேசனின் தாயார் வாசலில் கோலம் போட வந்தபோது எதிரே ஃபோட்டோவுக்கு போஸ் கொடுப்பது போல் அழகாய் உட்கார்ந்து அவளை நிமிர்ந்த பார்த்து 'ஹாய், ஆண்டி!' (குட்டியாயிருந்தால்) அல்லது 'சௌக்கியமா மாமி? (பெரிசாயிருந்தால்) என்பது போல் செல்லமாய்க் குரைத்தன் மூலம் தன் இருப்பை அறிவித்தது. அன்று முதல் - கர்மம்! கர்மம்! இந்த வீட்டையே சுற்றுகிறது. இத்தனைக்கும் ஒரு பருக்கைச் சோறு கூட இங்கே அதற்குப் போட்டதில்லை.



யாருடைய நாய்? உரிமை கோரி யாரும் வரவில்லை. உடம்பெல்லாம் தேமல் வந்தது போல் வறண்ட ரத்தக் காயங்கள். வீட்டில் யார் பார்த்தாலும் தடியை எடுத்துக் கொண்டு துரத்தினார்கள். தெருப்பையன்கள் கல்லெறிந்தார்கள். வீல் வீல் என்று கத்திக்கொண்டு அது ஓடும். ஆனாலும் மனிதனுக்கு மரணத்திடம் ஓர் ஆழ்மனக் கவர்ச்சி இருக்குமாமே? அது போன்ற ஏதோ கவர்ச்சியாயிருக்கலாம்.

சற்று அஜாக்கிரதையாய் இருந்து விட்டால் போதும், வீட்டுக்குள் நுழைந்து கருப்பு மின்னலாய்ப் பாய்ந்து ஒரு பீரோவுக்குப் பின்னால் பதுங்கிக் கொள்ளும். எளிதில் அசைந்து விட முடியாது. மனிதர் நுழைய முடியாத குறுகல் இடமாதலால் கம்பை நுழைத்துத் தான் அதை நெம்பித் தள்ள வேண்டும். அது இரும்பில் காந்தம் பதிவது போல் தரையில் கால்களை ஆழ ஊன்றிப் பிடிவாதமாய் நகர மறுக்கும். பல்லைக் காட்டி உறுமும். எங்கேயாவது மேலே விழுந்து பிடுங்கிவிடுமோ என்று 'தடி'யர்களுக்கு எப்போதும் பயம் தான். கர்மம், தப்பித் தவறிப் பல்லைப் பதித்துவிட்டால் உடனே ஆன்ட்டி



படிப்பகம்

padippakam

டெட்டெனெஸ் ஊசிக்காக ஆஸ்பத்திரிக்கு அல்லவா ஓடவேண்டும்? அது டிஸ்போஸபிள் ஊசி பயன்படுத்தும் ஆஸ்பத்திரியாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேறெந்த ரத்தம் வந்து சேருமோ, எய்ட்ஸ் நோயில் முடியுமோ . . .

நிம்மதியாய் டிவி. பார்க்க உட்கார்ந்து ரிமோட்டை அழுத்தினால் சின்னத்திரையில் குபீரென்று கிளம்பும் நடன கோரஸ் இரைச்சலைக் கேட்டு அலறிக்கொண்டு கறுப்பு நாய் டி.வி. பெட்டிக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டு ஓடும். தபால்காரர் குரல் கேட்டு வாசல் கதவைத் திறந்தால், கதவுக்குப் பின்னேயே கையெழுத்துப் போட்டுத் திரும்புவதற்குள் வீட்டுக்குள் பாய்ந்த எங்கேயாவது ஒளிந்துகொள்ளும். கையில் தடியுடன் வீடு முழுக்கத் தேடவேண்டும்.

சபேசனின் எட்டு மாதப் பெண் குழந்தை அனுபேபி சிவந்த நிறமும் சுருட்டை முடியும் நட்சத்திரக் கண்களுமாய் கொலுசுக் கால்கள் மாற்றிப் போட்டு வீடெல்லாம் தவழ்ந்து வருவாள். நாயைக் கண்டதும் சனியன், பீடை, பிரம்மஹத்தி, பிராரப்த கர்மம் என்று அர்ச்சனை தொடங்காத ஒரே ஜீவன் அந்த வீட்டில் அவள்தான்.

அனுபேபிக்கு அழத் தெரியாது. எப்போதும் சிரிப்பு, பூரிப்பு. உலகத்தில் எல்லாமே வாடாமல் வேளை பார்த்துப் பாலோ ஸெரலாக்கோ தரும் அவள் தாய் ஒரு சமயம் சற்றுத் தாமதித்து வந்தபோது கூட அனுபேபி பசித்து அழாமல் மாமரத் தடியில் ஒரு கொட்டையை முன்பற்களால் கொறித்துக் கொண்டிருந்த அணிலைப் பார்த்தபடி சிரித்த முகமாய் உட்கார்ந்திருந்தாள். அவள் பிறந்தபோது கூட டாக்டரம்மாள் குழந்தையைத் தலைகீழாய்ப் பிடித்துப் பின்னால் தட்டியபோது அவள் அழுவதற்குப் பதில் சிரித்துத் தன் உயிர்ப்பை வெளிப்படுத்தினாள் என்று ஒரு வதந்தி உண்டு.

கறுப்பு நாயைக் கண்டால் அனுபேபி கண்கள் விரியும். ஒரு சுவாரஸ்யம் அவற்றில் புகுந்து கொள்ளும். தவழ்கிறவள் நிமிர்ந்து கால்களை மடித்துப் பொட்டலம் போல் உட்கார்ந்து கொண்டு நாயைப் பார்வையால் ஆராய்வாள். புன்னகை செய்வாள். சின்ன விரல் நீட்டி அதை மெதுவாய்த் தொடுவாள். நாயும் சமர்த்தாய் எதிரே உட்கார்ந்து நீரோட்டமான பெரிய பழுப்பு நிறக் கண்களால் அவளை நோக்கும். வாலை லேசாய் ஆட்டும். அவள் தீண்டலுக்குச் சந்தோஷமாய் உட்படுவதுபோல் அச்சமயங்களில் மெல்லிய முனகலாய் அது வெளிப்படுத்தும் ஒலிகள் அதன் மொழியில் கொஞ்சலாக இருக்கலாம்.

கறுப்பு நாயும் வெள்ளை அனுவும் எதிரெதிராய் அமர்ந்திருக்கும் போது ஒரே உயரத்தில் இருப்பார்கள். இருவருக்கும் நடுவில் பாலம் போல் இணக்க அலைகள் ஓடிக்கொண்டிருக்கும். யாரோ பிரபஞ்ச ஓவியன் ஒரு பெரும் தத்துவம் எதற்கோ சிறு குறியீடாக இந்தக் காட்சியைத் தீட்டியிருப்பதுபோல் தோற்றமளிப்பார்கள்.

''அய்யோ, அய்யோ அந்த சனியன் குழந்தைகிட்ட வந்துடுத்தே! குதறிடப்போகிறதே!' '

''என்ன சீக்குப் புடிச்சதோ என்ன எழவோ! குழந்தைக்கு ஒட்டிக்கப் போறதே!''

தாய், தந்தை, பாட்டி, தாத்தா நால்வரில் ஒருவர் ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக் கொள்ள, இன்னொருவர் கையில் கம்புடன்


படிப்பகம்

padippakam


*With Best Compliments From*

ARC

SERVICE SAFETY SAVINGS

**M/s. ARC RETREADING COMPANY PRIVATE LIMITED**

(ABT UNIT)

10A/1, Trivandrum High Road,
Post Box No. 5,
Tirunelveli - 627 002
✆ : 578403

*Registered Office* : 472, Dr. Nanjappa Road,
Post Box No : 3813,
Coimbatore - 641 018
✆ : 234500

We are proudly announcing that we have been awarded with GOLD MEDAL by the Transworld Trade Fair Service Award Committee, Delhi




படிப்பகம்

padippakam

# பசுவய்யா கவிதைகள்

ராஜமார்த்தாண்டன்

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய சுந்தர ராமசாமியின் முதல் கவிதை 'உன் கை நகம்', 'எழுத்து' மூன்றாவது இதழில் (மார்ச் 1959) வெளிவந்தது. கவிதைகளைப் பசுவய்யா என்னும் புனைப்பெயரில் எழுதினார் சுந்தர ராமசாமி.

'உன் கை நகம்' என்கிற கவிதை அவசியமான ஒரு இன்றைய சோதனை முயற்சி (எழுத்து - ஏப். 1959) என்று க.நா. சுப்ரமண்யம் போன்றோர் பாராட்டினாலும், அந்த கவிதை வெளியானதும் வாசகர்களில் சிலர் அதிர்ச்சியும் கோபமும் அடைந்து கடிதம் எழுதியதாக 'எழுத்து' ஆசிரியர் சி.சு. செல்லப்பா ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். காரணம், பசுவய்யா தன் கவிதைக்காக எடுத்துக்கொண்ட விஷயமும் அதை வெளிப்படுத்தியிருந்த விதமும் அன்றைய கவிதை வாசகர்களில் சிலருக்குப் புதுமையாகவும் ஜீரணிக்க முடியாததாகவும் இருந்ததுதான்.

இந்தப் புதுமையின் தொடர்ச்சியாக ஆழ்ந்த வாழ்க்கைப் பார்வை, செறிவான-கச்சிதமான கவிதை அமைப்பு, கேலியும் கிண்டலும் கலந்த அங்கதம், நுட்பமும் கூர்மையும் செம்மையும் கொண்ட கவிதை மொழி, அழகிலேயே முதன்மைப்படுத்திய போதிலும் அறிவுபூர்வமான வாழ்க்கை விசாரத்தைப் புறக்கணிக்காத போக்கு, தன்னை முன்னிறுத்திக் கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி மனித வாழ்வின் உண்மையைப் பனிமூட்டத்தினிடையே தேடும் முயற்சி, காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு இந்த வாழ்க்கையைப் பல கோணங்களில் ஆழமாக அணுகும் போக்கு, குறிப்பிட்ட ஒரு தரத்துக்குக் கீழே எந்தக் கவிதையும் இறங்கி விடலாகாது என்னும் தீவிரமான இலக்கியப் பிரக்ஞை இவற்றுடன் கடந்த நாற்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாகக் கவிதை எழுதி வருகிறார் பசுவய்யா.

1959 முதல் 1966 வரை 'எழுத்து'விலும் 'இலக்கிய வட்டம்', 'தீபம்' இதழ்களிலும் வெளிவந்த கவிதைகளில் தத்துவ விசாரமும் கிண்டலும் கேலியும் கலந்த அங்கதப் பார்வையுடன் வாழ்க்கையை விமர்சிக்கும் போக்கு தூக்கலாக இருப்பதைக் காணலாம். அங்கதத்தை, நக்கலான கிண்டலுடன் மட்டுமல்லாமல் ஆழ்ந்த பார்வையில் கவிதைகளில் வெளிப்படுத்தியவர் பசுவய்யா.

ஆரம்ப காலக் கவிதைகள் பலவும் யாரேனும் ஒருவரை முன்னிறுத்திச் சொல்லப்படும் பாவனையில் அமைந்தவை. எனினும் இக்காலக் கவிதைகளிலும், பின்னாளில் இவர் கவிதைகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் 'நான்' புகுந்துவிட்டதைக் காணலாம். பசுவய்யா கவிதைகளில் வரும் 'நான்' பெரும்பாலும் ஒரு கவிஞனாகவே இருக்கிறான் என்பதற்காக, இந்த 'நானை'ப் பசுவய்யாவாகவே எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஒரு கவிஞனின் கூற்றாகவே எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு இல்லாமல் பசுவய்யா என்னும் கவிஞராகவே அந்த நானை எடுத்துக் கொண்டு கவிதையை அணுகினாலும், கவிதைகள் எந்தவிதமான எதிர்விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. காரணம், கவிதைகள் தனிப்பட்ட ஒருவரின் சுய அனுபவ வெளிப்பாடுகளாக



படிப்பகம்

padippakam

அல்லாமல், ஒரு கலைப்படைப்பிற்குரிய - கவிதைக்குரிய - பொதுப்பண்புகளைப் பெற்று, பல்வேறு அனுபவ உணர்வுகளைப் படிப்பவர்கள் மனத்தில் கிளர்விப்பதுதான்.

தன்னை முன்னிறுத்தி அல்லது தனக்குள் தானே பல்வேறு கோணங்களில் இந்த வாழ்க்கை குறித்து கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி, வாழ்க்கையின் அவலங்களை, சிதைவுகளை, பொய்ம்மைகளை, எப்போதேனும் வெளிப்படும் மேன்மைகளை வெளிப்படுத்தி, வாழ்வின் உண்மை நிலையைக் கண்டறிய முனையும் தேடல்களாகப் பசுவய்யாவின் அடுத்த கட்டக் (1972-க்குப் பின்) கவிதைகள் அமைந்துள்ளன. எனினும் இப்போக்கில் கூறுகளை 1963-ல் இவர் எழுதிய 'தேடல்' கவிதையிலேயே நாம் காணலாம்.

1966-முதல் ஓர் ஆறாண்டுக்காலம் சுந்தர ராமசாமி கவிதை, சிறுகதை என்று எதுவுமே எழுதாமல் மௌனமாக இருந்துவிட்டு, 1972-ல் எழுதிய கவிதை 'சவால்', இவரது மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்று இது.

கவிதை ஒரு கனவு. கவிஞனின் லட்சியக் கனவு. யதார்த்த விஸ்தரிப்போ, உணர்ச்சிகளின் குவியல்களோ, மேலான சிந்தனைகளோ மட்டுமே கவிதை ஆகாது. மனித வாழ்வின் உண்மையை, பேரானந்த நிலையைக் கண்டடையும் முயற்சியே கவிதை. மனித வாழ்வின் தரிசனங்களை வெளிப்படுத்த காவியங்கள் முனைகையில், அதன் கூறுகளை மின்னலாய் வெளிப்படுத்துகின்றன கவிதைகள்.

கச்சிதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைதகளும் படிமங்கள் குறியீடுகளும் கவிதையின் புறம்சார்ந்த அம்சங்கள்தான். செய்நேர்த்தி கைகூடிய ஒரு படைப்பாளியினால் சாத்தியமாகக் கூடியவையே இவை. ஆனால் கவிதை இன்னொரு தளத்தில் - தர்க்கபூர்வமான மனத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் - இயங்குவது. வாழ்வின் தூசு படர்ந்த உண்மைகள் மீது ஒளி பாய்ச்சுவது அர்த்தபூர்வமான அமைப்பைக் கொண்டிருந்தாலும், அதையும் மீறிய உத்வேகத்தில் இயங்குவது. இப்படித்தான் என்று வார்த்தைகளால் பிடித்து வைத்து விட முடியாதது. தனது சிறுகதைகளைப் பற்றி விமர்சகர்களுக்குப் புதுமைப்பித்தன் எச்சரிக்கை விடுத்தது போல - 'வேதாந்திகளின் கைகளுக்குள் சிக்காத கடவுள் மாதிரி' தான் கவிதைகளும்.

கவிதை ஒரு வாசிப்பில் வாசகனுக்கு ஒருவித அனுபவத்தை உணர்த்தும். இன்னொரு வாசிப்பில், ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குப் பின், வேறுவேறு அனுபவங்களை உணர்த்துவதாக அமையும். என்றும் புதுமையாக நிற்கும் நல்ல கவிதைகளின் தன்மை இது. இத்தகைய கவிதைகளில் ஒன்று 'சவால்'.

நோவெடுத்துச் சிரம் இறங்கும் வேளை
துடைகள் பிணைத்துக் கட்ட
கயிறுண்டு உன் கையில்

என்று தொடங்குகிறது கவிதை. வன்முறையிலேயே மிகவும் கொடூரமான வன்முறையை, காட்சிப் படிமம் மூலம் அற்புதமாகச் சித்தரித்துக் காட்டி விடுகிறார் கவிஞர்.

வாளுண்டு என் கையில்
வானமற்ற வெளியில் நின்று



படிப்பகம்

padippakam

மின்னலை விழுங்கிச் சூலுறும்
மனவலியுண்டு

என்று வன்முறைக்கு எதிரான குரல் எழுகிறது. இதில் சித்தரிக்கப்படும் படிமத்தின் மூலம், எந்த வன்முறையும் ஒடுக்கப்பட்டுவிடும் என்னும் நம்பிக்கை எழுப்பப்படுகிறது. இந்தப் படிமங்களும், இதன் பின்வரும் படிமங்களும் வாசகர்களின் மனநிலை, அனுபவங்களுக்கேற்ப பன்மக அனுபவ உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகும். பசுவய்யாவின் இந்தக் கவிதையைப் போல வேறு எந்தக் கவிதையும் இத்தனை அதீத நம்பிக்கையுடனும் வேகத்துடனும் வெளிப்பட்டதில்லை என்றே சொல்லலாம்.

ஓய்ந்தேன் என மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின்வாங்கல் அல்ல பதுங்கல்

என்னும் வரிகள், தனித்துப் படிக்கும்போது பசுவய்யா என்னும் தனிமனிதரின் குரலாக வெளிப்பட்டதுபோல் தோன்றினாலும், மொத்தக் கவிதைப் போக்கில் எந்தவித நெருடலையும் ஏற்படுத்தவில்லை.

மரம் செடிகள், பறவைகள் மற்றும் கடல், காற்று இவற்றின்மீது பசுவய்யாவிற்கு எப்போதுமே நேசிப்பு, வியப்பு. இன்றைய கவிஞர்கள் சிலரைப் பேன்ற, காலத்தின் தேவைக்கேற்ற பாசாங்கான நேசிப்பு அல்ல பசுவய்யாவினுடையது. சருகுடன் தளிரையும் உதிர்க்கும் காற்று ஒரு மூட ஜன்மம்தான். இருந்தபோதிலும், 'குருவிகளை முத்தமிடும் அதிர்ஷ்டம் கொண்டது' என்ற ஏக்கமும் 'மரங்கள் போல வாழ்வு என்று கிடைக்கும்' என்ற ஏக்கமும் இவரிடம் கவிதைகளாகின்றன. 'காற்று' 'விருட்ச மனிதர்கள்' என்னும் இந்த இரண்டு கவிதைகளுமே பசுவய்யாவின் சிறந்த கவிதைகளாகும்.

மனிதனுக்காக ஜீவன்கள் அழிந்துகொண்டிருக்கும் வரையிலும்
'என்னை சந்தோஷமாக வை' என்று
மனிதன் எப்படி யாரிடம் கேட்க முடியும்?

என்று கேட்கிறார் கவிஞர். நியாயமான கேள்விதான். ஆனால், இன்றைய உலகில் சாத்தியமானதுதானா என்ற கேள்வியும் எழக்கூடும். காலம் காலமாக நமது மகான்கள் நமக்கு அறிவுறுத்தியது இது. இங்கு கவிஞரின் லட்சியக் கனவாக வெளிப்படுகிறது.

சங்க இலக்கியத்தில், 'புலிக்கணத் தன்ன நாய்' (கபிலர் அகம் : 158) என்று கம்பீரமாக வர்ணிக்கப்பட்ட நாய், இன்றைய கவிதை, கதைகளில் வெறும் தெருப்பொறுக்கிகளாக சித்தரிக்கப்படுகின்றன. 'ஞமலி போல் வாழேல்' என்று அறிவுறுத்திய பாரதியார், அந்தக் காலத்துப் போலீஸாரைப் 'பாயும் கடிநாய்ப் போலீசு' என்று சாடியுள்ளார். பசுவய்யா எழுதியுள்ள 'நடுநிசி நாய்கள்', 'நான் கண்ட நாய்கள்' கவிதகளை நாய்களைப் பற்றிய கவிதைகளாகவே கொண்டாலும், அந்த வகையில் அவற்றில் வெளிப்படும் காட்சிப்படிமங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. அவ்வாறல்லாமல், நாய்களைப் போன்ற மனிதர்கள் சிலரைப் பற்றிய கவிதைகள் என்று கொண்டாலும் - நாய்களைச் சில கீழான மனிதர்களுக்குக் குறியீடாகக் கொண்டாலும் - கவிதை வெளிப்படத்தும்



படிப்பகம்

padippakam

அனுபவ உணர்வு மனத்தை ஈர்த்து சிந்திக்க வைப்பதாகவே உள்ளது.

பசுவய்யாவின் 'எனது தேவைகள்' கவிதையைப் பாரதியின் 'காணிநிலம்' கவிதையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது, இருவேறு காலகட்ட இலக்கிய மனப்போக்கை அறிந்து கொள்ள முடியும்.

காணிநிலம் வேண்டும், அதில் ஓர் அழகிய மாளிகை கட்டித் தரவேண்டும். அதன் பக்கத்தில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் வேண்டும், அங்கே நிலவொளி வீச வேண்டும், குயில்கள் கூவ வேண்டும், இளந்தென்றல் இனிமையாக வீச வேண்டும். அதுமட்டுமல்லாமல்,

பாட்டுக் கலந்திடவே -அங்கேயொரு
    பத்தினிப் பெண் வேணும் -எங்கள்
கூட்டுக் களியினிலே -கவிதைகள்
    கொண்டு தரவேணும் -அந்தக்
காட்டு வெளியினிலே -அம்மா நின்றன்
    காவலுற வேணும் -என்றன்
பாட்டுத் திறத்தாலே -இவ்வையத்தைப்
    பாலித்திட வேண்டும்.

என்று அன்னை பராசக்தியை வேண்டுகிறார் பாரதி. எல்லாமே பராசக்தி தானே பாரதிக்கு. அத்துடன், தனது பாட்டுத் திறத்தால் இந்த வையத்தையே பாலித்திடவேண்டும் என்ற பேராசையும் லட்சியமும் அவருக்கிருந்தது.

ஆனால் பசுவய்யாவிற்கோ அத்தகைய நம்பிக்கைகள் ஏதுமில்லை. அவரது தேவைகளும் வேறுவிதமானவை. தனக்குத் தானே கேட்டுக் கொள்வதுபோல, தனது தேவைகளைப் பின்வருமாறு முன்வைக்கிறார் :

கொஞ்சம் முகம் பார்த்துத் தலைசீவ ஒரு சந்திரன்
லோஷன் மணக்கும் பாத்ரூம்
என் மனக்குதிரைகள் நின்று அசைபோட ஒரு லாயம்
என் கையெழுத்துப் பிரதியில் கண்ணோட
முகங்கொள்ளும் ஆனந்தச் சலனங்கள்
நான் காண ஒரு பெண்
சிந்திக்கையில் கோத ஒரு வெண்தாடி
சாந்த சூரியன்
லேசான குளிர்
அடிமனத்தில் கவிதையின் நீரோடை.

காலமாறுதலுடன், கவிதைப் போக்கின், கவிஞரின் மனப்போக்கையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

'கன்னியாகுமரியில்' என்றோர் கவிதை. இதில் சொல்லப்படும் விஷயம் ஒன்றும் புதுமையானதல்ல. நமது சித்தாந்தங்களில் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுவது தான். 'நான்' என்னும் அகந்தையின் பிடிவாதத்தையும் அதனால் ஏற்படும் இழப்பையும்தான் இந்தக் கவிதை சொல்கிறது.

அன்றைய மாலைப் பொழுதில் அபூர்வமாக மிகப்பெரிய சூரியனைக்


படிப்பகம்

padippakam

காணும் பேறு கிடைக்கிறத. கடலுள் மூழ்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது அது. கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன். அப்போத அவன் முன் ஒரு ஆட்டுக்குட்டி வந்து நின்று சூரிய அஸ்தமனத்தை மறைக்கிறது. 'அசடு, அபோதம்' என்று, அதைத் திட்டும் அவன், சற்று விலகி நின்றால் அபூர்வமான சூரியஸ்தமனக் காட்சியைக் கண்டு களிக்கலாம். ஆனால்,

இடம் பெயர்வதா
என்ற நிலையில் நிற்பதா?

என்னும் அகங்காரத்தில் விளைவான தர்க்கத்தினால் ஒரு பேரானந்தத்தை அவன் இழக்கிறான். தர்க்கம் அறுபட்டு சுயநினைவுக்கு வரும்போது சூரியன் மறைந்து விடுகிறது. நமக்குப் பரிச்சயமான இந்தக் கருத்துருவம், புதிய படிமங்கள், புதிய பார்வை, புதிய மெருகுடன், நம் மனத்தில் ஒரு புதிய அனுபவம் போல் பதிய வைக்கப்பட்டு விடுவதே இந்தக் கவிதையின் சிறப்பு.

பசுவய்யா என்னும் கவிஞரின் நம்பிக்கைகள் வித்தியாசமானவை. ஒருவகையில் இவரது லட்சியக் கனவுகள் அவை. நடைமுறை வாழ்க்கையில் இவரது லட்சியக் கனவுதானா என்ற கேள்வியை எழுப்பக் கூடியவை. மரங்களைப் போன்ற கவலை இல்லாத வாழ்வு மனிதனுக்குக் கைகூட வேண்டும் என்பதே பசுவய்யாவின் விருப்பம்.

மரங்கள் உன்னதமானவை
கம்பீரமான எளிமை
நிர்மலமான இதயம்
மேலே மேலே என்று செல்லும் அவா
சூரியக் கிரணங்களில் குளிப்பதில் மோகம்
மண்ணை எப்போதும் மறக்காத தன்மை
மௌனம்.
மனிதர்கள் மரங்கள் போல் வாழும் காலம் வரும்

என்று நம்புகிறார்.

இவ்வாறு நம்பும் கவிஞர், மனிதர்கள் மீண்டும் குழந்தைகளாகும் கனவு நிறைவேறவேண்டும் என்றும் விரும்புகிறார். ஆனால், 'ஒரு சீதளம் ஓராயிரம் வெப்பங்கள்' என்றிருக்கும் இந்த வாழ்க்கையில், கவிஞரின் நம்பிக்கைகளும் கனவுகளும் என்றேனும் சாத்தியம்தானா? இப்படிக் கேள்வி எழுப்பவிடாமல் தன்னுடைய கவித்துவ ஆற்றலால், ஒரு புதிய கற்பனை உலகிற்கு நம்மையும் இட்டுச் சென்று விடுகிறார் கவிஞர்.

இப்படிக் கனவுகளையும் நம்பிக்கைகளையும் அவ்வப்போது பசுவய்யா வெளிப்படுத்துகிற போதிலும், இன்றைய நடைமுறை வாழ்க்கை அவருக்குச் சற்றும் உவப்பானதாக இல்லை என்பதையும் தம் கவிதைகள் பலவற்றில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

'உறவு' என்றொரு கவிதை, மனித உறவுகளின் சந்தோஷங்கள், பொய்ம்மைகள், வக்கிரங்கள், மேன்மைகளை இயல்பாக, நேரடியாகச் சித்தரிக்கும் கவிதை.


படிப்பகம்

padippakam

உறவு அது அப்படித்தான்
கவர்ந்திழுக்கும் அத்தர் நெடியடிக்கும்
அணைத்தப் பிசையும் பூப்பூவாய்ப் பூக்கும்
மனங்கள் இணைந்து ஆக்கங்கள் மலரும்
காலடியில் அடிவானங்கள் குவியும்
அதன்பின் எகிறிக் குதித்து இரத்தம் கசியும்
துருவின் துகள்கள் புற்றுப்போல் குவிந்து
பார்வைகள் திரியும்
கசப்பு மண்டி அடித்தொண்டை அடைத்து
மலக்கிடங்கில் விழுந்து சாகும்
மீண்டும் உயிர்தெழுந்து வாசம் பரப்பி
வளைய வரத் தொடங்கும்

*பசுவய்யாவின் சிறந்த கவிதைகளில் ஒன்றாக இதைச் சொல்ல முடியாவிட்டாலும், தமிழில் நான் படித்தவரையில் மனித உறவின் சிக்கல்கள் இத்தனைச் சிறப்பாக வேறெந்தக் கவிதையிலும் வெளிப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.*

*இந்த வாழ்க்கையில் சக மனிதர்களிடையே உண்மையான அன்பில்லை. உறவுகளிடையே இணக்கமும் பாசமும் இல்லை; எங்கும் பொய்மையின் வேஷங்கள் - இப்படிப்பட்ட வாழ்க்கையில் எப்படித்தான் நடந்து கொள்வது? வாழ்வது? எல்லாமே குழப்பமாக இருக்கிறது என்பதை 'இந்த வாழ்க்கை' கவிதை கூறுகிறது :*

காலை வைக்க வேண்டிய படி எது?
குலுக்க வேண்டிய கை
அணைக்க வேண்டிய தோள்
படிக்க வேண்டிய நூல்?
பணியாற்ற வேண்டிய இடம் எது
என்று தெரியாமல் இருக்கிறது வாழ்க்கை.

*வழிகாட்டுவதற்குத் தகுதியானவர்களும் தெளிவான வாழ்க்கை முறைகளும் இல்லாது போன இப்படிப்பட்ட வாழ்க்கையில், சற்றே சிந்திக்கக்கூடிய, உணர்வுபூர்வமான, நேர்மையாக வாழ விரும்பும் ஒருவனின் வாழ்க்கை, இங்கு வாழ்வதற்காகச் செய்யும் வெறும் ஆயத்தங்களிலேயே கரைந்து போய் விடுகிறது என்பதை 'வருத்தம்' கவிதையில் சித்தரித்துக் காட்டுகிறார் பசுவய்யா.*

வேட்டையாடத்தான் வந்தேன்
வேட்டைக்கலையின் சாகச நுட்பங்களை
தாய்ப்பாலில் உறிஞ்சத் தொடங்கினேன்
பின் வில் வித்தை
பின் வாள் வீச்சு
பின் குதிரை ஏற்றம்
பின் மற்போர்
நாளை நாளை என வேட்டை பின்னகர
ஆயத்தங்களில் கழிகிறது என் காலம்
திறந்து வைத்த கற்பூரம் போல



படிப்பகம்

padippakam

ஆயுளின் கடைசித் தேசல் இப்போது
இனி ஆயத்தங்களைத் தின்று சாகும் என் முதுமை
பின்னும் உயிர் வாழும் கானல்.

பசுவய்யாவின் சிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்று.

தமிழில் புதுக்கவிதை தோன்றியவுடன், மரபான செய்யுள் வடிவத்தைத் துறந்து, உரைநடையின் கூறுகளை மேற்கொண்டது. வழக்கொழிந்த வார்த்தைகளை ஒதுக்கித் தள்ளியது. புதிய சொல், புதிய பொருள், புதிய பார்வை, புதிய வடிவம் என்றானது நவீன கவிதை. ஆனாலும் சில விஷயங்களை அதனால் ஒதுக்கிவிட முடியவில்லை. வாள், வில், நாண், கேடயம் போன்ற சொற்கள் புதுக்கவிதையில் தாராளமாகவே பயன்படத்தப்பட்டன. எந்த நவீன கவிஞரும் அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. காரணம், அந்த வார்த்தைகளின் பின்னே ஒரு கலாசாரப் பாரம்பரியப் பின்னணி அழுத்தமாகப் படிந்திருந்தது. இதிகாசச் சம்பவங்கள் எவற்றையும் தம் கவிதைகளில் கையாளாத பசுவய்யாவால் கூட (விதிவிலக்கு 'தனுவச்சபுரம்') இந்த வார்த்தைகளை ஒதுக்கிவிட முடியவில்லை.

பசுவய்யாவின் பிற்காலக் கவிதைகளில் சில முதுமையைப் பற்றியவை. முதுமைக் காலத்தின் பிரச்சினைகளை - ஏக்கங்கள், சோகங்கள், நிறைவேறாத கனவுகள், விருப்பங்களை - சித்திரிக்கும் கவிதைகள். முதுமைக் காலத்தின் இந்த ஏக்கங்களும் சோகங்களும் வாழ்க்கை முழுவதையும் அவஸ்தைப்படுவதாக இருக்கின்றன. அந்த அவஸ்தையிலேயே வாழ்க்கையும் முடிந்து போகிறது. முதுமைபற்றிய பசுவய்யாவின் இந்தக் கவிதைகளில் வரும் 'நான்' பெரும்பாலும் ஒரு கவிஞன் தங்கி இளைப்பாற, தன் மன அவசங்களைக் கொட்டித்தீர்த்து ஆறுதல் பெற, தன்னைப் போன்றதொரு ஜீவனுக்காக அலைந்து கொண்டிருப்பவன். காத்துக் கொண்டிருப்பவன். 'யாரோ ஒருவனுக்காக' கவிதையின் ஒரு பகுதி.

யாரோ ஒருவன் வரக்கூடும் என்று
இன்று வரையிலும் வராத அவனுக்காகக்
காத்துக் கொண்டிருக்கிறேன்.
அந்த யாரோ ஒருவன் வராத நேரத்திலும்
எனக்கு நானே பேசிக்கொள்வதில்
தவறில்லை என்று நினைக்கிறேன்.

கவிஞனின் காத்திருத்தல் - எதிர்பார்த்தல் - எத்தகையது என்பதை இந்த வரிகள் தெளிவாக உணர்த்தும்.

முதுமைக் காலத்தில் தன் மரணத்திற்குப்பின் கவிஞன் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப விரும்புகிறான். ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல் எதுவும் தன் மரணத்தில் இல்லை என்பதையும் அவன் அறிவான்.

உலகெங்கும் கணந்தோறும்
இழப்பின் துக்கங்களில்
ஒருகோடிக் கண்கள் கலங்குகின்றன

என்பதையும் அறிவான். என்றபோதும் அவன் ஒரு கவிஞன்; உணர்வுப்


படிப்பகம்

padippakam

பூர்வமாக வாழ்பவன். தன் நண்பனிடம் சொல்கிறான் :

இருப்பினும்
நண்ப
ஒன்று மட்டும் செய்
என்னை அறியாத உன் நண்பனிடம்
ஓடோடிச் சென்று
கவிதையை எழுப்ப முயன்றுகொண்டிருந்தவன்
மறைந்துவிட்டான் என்று மட்டும் சொல்
இவ்வார்த்தைகளை நீ கூறும்போது
உன் கண்ணீர்
ஒரு சொட்டு
இந்த மண்ணில் உதிரும் என்றால்
போதும் எனக்கு.

பசுவய்யாவின் சிறந்த கவிதைகளில் ஒன்றல்ல இது. ஆனால், கவிதை என்ற பெயரில் வெற்று வார்த்தைக் குவியல்களை எழுதி, கவிஞர்கள் என்று டாம்பீகமாக உலாவரும் சிலரைப் போல, அமைதியான ஒரிடத்தில், பன்னீர் மரங்கள் எப்போதுமே பூச்சொரிய, ரோஜாச் செடிகளின் நடுவே, பளிங்குக் கல்லறை வேண்டுமென்று கவிஞன் இங்கே கேட்கவில்லை என்பது ஆறுதலான விஷயம். 'கவிதையை எழுப்ப முயன்று கொண்டிருந்தவன் மறைந்து விட்டான் என்று மட்டும் சொல்' என்னும் வரிகளில் கவிதை மீதான கவிஞனின் தீவிர ஈடுபாடு வெளிப்படுகிறது.

சிலரால் நியாயப்படுத்தப்படும் போராளிகளின் வன்முறைக்கு, தனிநபர் சர்வாதிகாரத்திற்கு எதிரான கேள்விகளையும் சந்தேகங்களையும் அடுக்கடுக்காக- மறைமுகமாக - எழுப்புகிறது. 'மனிதாபிமான ஃபாசிஸ்டின் ஜனநாயகக் குரல்' கவிதை. நியாயமான கோரிக்கைகளுக்காக ஜனநாயக முறையில் நடத்தப்படும் அமைதியான போராட்டங்கள், அரச பயங்கரவாதத்தால் கடுமையாக ஆயுதபலம் கொண்டு ஒடுக்கப்படும்போது, ஜனநாயகத்தில் நம்பிக்கையிழந்த மக்கள் ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் - துரதிருஷ்டவசமாக - ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிறது. இத்தகைய போராட் டத்தில் நாளடைவில் வன்முறையும் அடக்குமுறையும் தவிர்க்க முடியாததாகிறது. இத்தகைய போராட்டத்தில் நாளடைவில் வன்முறையும் அடக்குமுறையும் தவிர்க்கமுடியாததாகிறது. இத்தகைய போராட்டத்தில் நாளடைவில் வன்முறையும் அடக்குமுறையும் தவிர்க்க முடியாத தேவைகளாகிவிடுகின்றன. 'மாறுபடும் சிந்தனைகளை எப்போதும் ஏந்திப்பிடிக்கும் வக்கிரபுத்தியும் சுதந்திரப்போக்கும் கொண்ட கோணல் கலைஞர்களுக்கு' இது உவப்பானதாக இருப்பதில்லை. ஆயுதப்போராட்டத்தின் நியாயத்தைப் பேசிய கலைஞன், அதன் வழிமுறைகளை விமர்சனம் செய்யும்போது அப்போராளிகள் கூட்டத்தால் ஒதுக்கப்படுகிறான் அல்லது ஒடுக்கப்படுகிறான். மிகவும் சிக்கலான இந்தப் பிரச்சினையில் சுதந்திரமாகக் குரல் எழுப்பும் கலைஞனின் சார்பாகப் பேசுகிறது இந்தக் கவிதை.

'ஒரு படைத்தலைவர் மேலதிகாரிக்கு மனதில் எழுதும் சொற்கள்' கவிதையும் ஒரு வகையில் முன் கவிதையைப் போன்றதுதான் யுத்தங்களிலும் ஆயுதம் தாங்கிய போராட்டங்களிலும் மனித உயிர்கள் அழிவதும் அழிக்கப்படுவதும்



படிப்பகம்

padippakam

சாதாரணமான சம்பவங்களாகி விடுகின்றன. காலங்காலமான நிகழ்வுதான் இது புதிதல்ல. அரசனின் வெற்றிக்காகக் காளிதேவியின் முன் வீரர்கள் தம் தலைகளைக் கொய்து காணிக்கை செலுத்திய வீர வழிபாட்டையும் நம் இலக்கியத்தில் காண்கிறோம். எதிரிகளின் படைக்கலன்களை அழிக்க தற்கொலைப் படைப்பிரிவு இன்றைய போராளிகளிடையே சகஜமாகி விட்டதையும் காண்கிறோம். இத்தகையோர் மாபெரும் வீரர்களாகவும் தியாகிகளாகவும் மதிக்கப்படுகின்றனர். யுத்தங்களில் நியாயமாகவும் தியாகமாகவும் ஆக்கப்பட்டு விட்ட இந்தப்போக்கு குறித்து எதிர்மறையான கேள்விகளை எழுப்புகிறது 'ஒரு படைத்தலைவர் மேலதிகாரிக்கு மனதில் எழுதும் சொற்கள்' கவிதை.

இந்தக் கவிதைகள் இரண்டையும் பசுவய்யாவின் சிறந்த கவிதைகள் வரிசையில் சேர்க்க முடியாதுதான் என்றாலும் கலைஞனின் சுதந்திரம், சம்பிரதாயமான சில நியாயங்கள் மீதான எதிர் கேள்விகள் என்ற வகையில் கவனத்திற்குரிய கவிதைகளாகின்றன.

'அழிவின் உடன்பாடு' என்றொரு கவிதை. இன்றைய சமுதாயத்தின் சீரழிவுகளை, அதன் வன்முறைப்போக்கை, மக்களின் அடிமைப்புத்தியை ஆவேசமாகச் சுட்டிக்காட்டி, இனி எப்படிப் பொறுக்க முடியும் என்று ஒரு இளைஞனும் இளம்பெண்ணும் ஆவேசமாகக் கேட்கின்றனர். அவர்கள் சொன்னதையெல்லாம் ஆமோதித்து பின் அமைதியாகக் கலைந்து செல்கிறது கூட்டம். சினிமா பார்த்து விட்டுச் செல்லும் கூட்டத்தினரின் எதிர்வினைதான் அதிலும் காணப்படுகிறது. இன்றைய வாழ்க்கையில் அரசியல் உள்பட சகல துறைகளிலும் மக்கள் கொண்டிருக்கும் அசிரத்தையான போக்கைக் கவிதை கிண்டலுடன் சித்திரித்துக் காட்டுகிறது. அந்தக் கிண்டலின் பின்னணியில் ஒரு ஆழ்ந்த சோகமும் இழையோடுவது இக்கவிதையின் சிறப்பு.

'நீ யார்' 'வித்தியாசமான மியாவ்' - இரண்டும் பசுவய்யாவின் பிற்காலக் கவிதைகளில் வித்தியாசமானவை. அவரது ஆரம்பக்கால கவிதைகளில் வெளிப்படும் கிண்டலான தொனியை இக்கவிதைகளிலும் காணலாம்.

'பறக்கத் துடி' 'தனித்தனியே' - இரண்டும் சோம்பிக் கிடக்கும் மனித ஜீவன்களுக்குப் புத்துயிரூட்டி, அனுபவபூர்வமாகச் சிந்திக்கத் தூண்டும் சிறந்த கவிதைகள். பசுவய்யாவின் மிகச்சிறந்த கவிதைகளில் இவையும் அடங்கும்.

'பறக்கத் துடி' கவிதையைப் பார்ப்போம். அற்புதமான சிலை அது. ஒரு பறவையின் லட்சணம் சிறிதும் குறைவுபடாதது. கைதேர்ந்த ஒரு கலைஞனின் கை வண்ணத்தில் உருவானது. உயிர்த்துடிப்பு இல்லாததுதான் அதைச் சிலை என்று சொல்ல வைக்கும். பறக்கும் நிலையில் வடிக்கப்பட்டிருக்கும் அந்தச் சிலையின் முன் தினமும் பறவைகள் பறந்து திரிகின்றன. ஆனால் சிலைப் பறவை அப்படியே நின்று கொண்டிருக்கிறது. இதைப் பார்க்கும் கவிஞன் மனத்துள் பொங்கி எழுகிறது ஆவேசம். 'இன்னுமா நீ பறக்கவில்லை?' என்று கவலையுடன் கேட்கிறான்.

உள்துடிப்பில் இருந்துதானே பற்றிற்று
உயிரின் பொறி
கல்தானே கனலாயிற்று



படிப்பகம்

padippakam

அமைந்துள்ளன எனலாம்.

இத்தகை கவிதைகள் எந்த வகையில் ஒரு பொதுவான கவிதை வாசகனுக்குள் கலாரசனையை ஏற்படுத்தும் என்று கேட்கக் கூடும். சிலருடைய கவிதைகள் அப்படி பொதுத்தன்மைபெறாமல், சுய அனுபவ வெளிப்பாடாக மட்டுமே அமைந்து விடுவதும் உண்டு. ஆனால் பசுவய்யாவின் கவிதைகள் அத்தகையன அல்ல. நம்மில் ஒவ்வொருவனுக்கும் நம் வாழ்க்கையில், நமக்கு மிகவும் உவப்பான-நம்பிக்கைக்குரிய ஒரு துணைக்காக ஏங்கும் சந்தர்ப்பங்கள் சில ஏற்படுவதுண்டு. அவ்வகையில் இத்தகைய கவிதைகள் அவற்றைப் படிக்கும் அனைவருக்குள்ளும் ஏதோவொரு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன எனலாம்.

இதுவரையில் பசுவய்யாவின் 107 கவிதைகளில், சில கவிதைகளை மட்டும் எடுத்துக் கொண்டு. அவற்றில் வெளிப்பட்ட அனுபவ உணர்வுகளைப் பார்த்தோம். பசுவய்யாவின் மொத்தக் கவிதைகளையும் திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்கையில், இருபதுக்கும் மேற்பட்ட கவிதைகளையாவது சிறந்த கவிதைகளாகச் சொல்ல முடியும். மற்றும் பல கவிதைகளும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் தரமானவையே. இவரது மொத்தக் கவிதைகளில் மட்டுமல்லாமல், பிச்சமூர்த்தி தொடங்கி இன்று வரையிலான கவிஞர்களின் கவிதைகளை மொத்தமாகக் கணக்கிலெடுத்துப் பார்த்து சிறந்த கவிதைகளைத் தொகுத்தாலும் பசுவய்யாவின் இந்த இருபது கவிதைகளையும் நாம் சிறந்த கவிதைகளாகவே கொள்ள முடியும். தமிழ்க் கவிஞர்களைப் பொறுத்த வரையில் இதனை ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகவே கருதலாம்.

இதற்குக் காரணம்-இந்த வாழ்க்கை குறித்த பசுவய்யாவின் பல கோணங்களிலமைந்த ஆழ்ந்த பார்வை வெளிப்பாடு, வாழ்க்கை குறித்து பலவிதமான கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி, தூசுபடர்ந்து கிடக்கும் மனித வாழ்வின் உண்மைகளைக் கண்டறிய முயலும் தீவிரமான தேடல். அத்துடன் இவற்றையெல்லாம் வாசகர் மனத்தில் அழுத்தமாக பதியச் செய்யும் கூர்மையான கவிதைமொழி.

ஆரம்பத்தில் கிண்டலும் கேலியும் வேகமும் கலந்த புதுமைப்பித்தன் பாணி கவிதை நடை. பின்னர் போகப் போக சமநிலைபெற்று, உணர்வுபூர்வமாக மட்டுமல்லாமல் அறிவுப்பூர்வமாகவும்-அதே சமயம் அழகியலை முதன்மைப்படுத்துவதுமான கவிதைமொழி கைகூடியது. இன்றைய கவிதைக்கான மொழிநடை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதில் மிகத் தெளிவான பிரக்ஞை கொண்டவர் பசுவய்யா. இன்றைய காலகட்டத்தின் நடைமுறை வழக்கமான உரைநடையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக, அதே சமயம் க.நா.சு.,வின் கவிதைநடைபோல் உரைநடையும் ஆகிவிடாத, மெல்லிய தாள, சப்த நயம் கொண்ட கவிதை நடை இவருடையது. இன்றைய பேச்சுமொழி மற்றும் எழுத்து மொழியின் சாயல் கொண்டதாக அமைந்த போதிலும், அவற்றையும் கடந்து இன்னொரு தளத்தில் இயங்கும் கவித்துவமான ஒரு கவிதை நடை பசுவய்யாவிற்கு எளிதாகவும் இயல்பாகவும் கைகூடியிருப்பதும் கவிதைக் கலையில் இவரது வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

அடுத்து குறிப்பிடத்தகுந்தது கச்சிதமான செறிவான கவிதை அமைப்பு.


படிப்பகம்

padippakam

ஆரம்ப காலத்தில் புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, க.நா. சுப்ரமண்யம், தி.சோ. வேணுகோபாலன் போன்றோரின் கவிதை வடிவத்தைப் போன்று கவிதைகள் எழுதிவந்த பசுவய்யா, 'சவால்' கவிதைக்குப் பின் தனக்கென ஒரு கவிதை அமைப்புத் தேர்வு செய்து கொண்டார். தேவையில்லாதது என்று வார்த்தைகளை உருவிவிட முடியாத வகையில் கச்சிதமாக அமைந்தவை பசுவய்யாவின்' கவிதைகள். விதிவிலக்குகளும் இல்லாமல் இல்லை. உதாரணத்திற்குத் 'தேடல்' கவிதையின் கடைசி நான்கு வரிகள்.

மற்றொன்று செய்ய
மார்க்க அறியேன்
மன்னிக்க வேணும்
மன்னிக்க வேணும்

என்ற வரிகள் இல்லாமலேயே கவிதை சொல்ல வந்த அனுபவத்தைத் தெளிவாகவே உணர்த்தி விடுகிறது.

தமிழில் வெளிவந்துள்ள கவிஞர்கள் பலரின் கவிதைத் தொகுதிகளிலும் நல்ல கவிதைக்குப் பக்கத்தில் செய்திக் குறிப்போ, நமது வாழ்க்கைக்கு என்றும் உத்தரவாதமளிக்கும் அறிவுரைச் சூத்திரங்களோ கவிதை என்ற பெயரில் குந்திக் கொண்டிருக்கும். ஆனால் பசுவய்யாவின் கவிதைத் தொகுதியில் அப்படி எதுவும் இல்லை. மிகச் சாதாரணமான கவிதைகளை விட்டுவிட்டுத் தரமான கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார் என்று சொல்ல முடியாது. காரணம், பசுவய்யா எழுதியவற்றில் மூன்றோ, நான்கோ தவிர ஏனைய கவிதைகள் அனைத்தும் இந்தத் தொகுதியில் காலவரிசைப்படி இடம் பெற்றுள்ளன. கவிதைகள் ஒரு குறிப்பிட்ட தரத்திற்குக் கீழே சென்று விடலாகாது என்றும் ஒன்றை விடவும் இன்னொன்று தரத்தில் மேலே மேலே உயர வேண்டும் என்றும் தீவிரமான இலக்கியப் பிரக்ஞை கொண்டவராகத் தெரிகிறார் பசுவய்யா.

தமிழில் ந. பிச்சமூர்த்தி, எஸ். வைதீஸ்வரன், ஞானக்கூத்தன், கலாப்ரியா என்று சிலரின் முழுமையான கவிதைகள் அடங்கிய தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவர்களின் கவிதைகளைப் படிக்கும்போதெல்லாம், ஆரம்பத்தில் வெளிப்பட்ட உத்வேகமும் தரமும் போகப்போகக் குறைந்து, பின்னாளில் கவிதைகள் பலவும் செய்நேர்த்தியின் காரணமாக மட்டுமே படிக்கக் கூடியனவாக அமைந்திருப்பதைக் காணலாம். தமிழின் மிக முக்கியமான கவிஞரான பிரேமிளிடம் கூட எண்பதுகளுக்கு பின் பல்வேறு காரணங்களினால் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்தப் போக்கிற்கு ஒரே விதிவிலக்கு பசுவய்யா. காரணம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மனோபாவமும் மேலே மேலே என்னும் அயராத முனைப்பும். இதனால் பசுவய்யாவின் கவிதைகளில் மட்டுமல்லாமல் நாவல், சிறுகதைகளிலும் இந்தப் போக்கைக் காணலாம். இதன் காரணமாகவே, சிறுகதை, நாவல்களில் போல, இன்றைய காலகட்டத்தின் முதன்மையான கவிஞரெனவும் பசுவய்யா என்னும் சுந்தர ராமசாமியைக் குறிப்பிடுவது பொருத்தமாகவேத் தோன்றுகிறது.

107 கவிதைகள் : பசுவய்யா; காலச்சுவடு பதிப்பகம், 151, கே.பி. சாலை, நாகர்கோவில் -629 001, பக்கம் 160, விலை ரூ.60



படிப்பகம்

padippakam



## வைரமுத்துவின் திரைப்படப் பாடல்களில் கற்பனை வளம்

ஆசிரியர் : தங்க. செந்தில் குமார்

வெளியீடு : **செழியன் பதிப்பகம்**
110, நிர்மலா நகர்
புதுக்கோட்டை சாலை,
தஞ்சை - 7

விலை : ரூ. 20

நூலாசிரியரின் எம்.பில் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுதான் நூலாக வெளிவந்திருக்கிறது. பொதுவாகவே கல்லூரி ஆய்வேடுகளில் காணப்பெறும் உள்ளடக்கம் ஏதோ பொத்தாம் பொதுவில் சத்திரத்தில் கொடுக்கப் படும் சத்தற்ற உணவைப் போல ருசியற்று இருக்கும். நடையில் ஒருவகை நீர்த்தத் தன்மையும், விசயத்தில் ஆழமின்மையுமான ஆய்வுகளைத் தான் மிக அதிகமாக காணமுடியும். ஆனால் தங்க. செந்தில்குமார். இவற்றுக்கு முரணாக ''செக்கு மாட்டுச் சிந்தனையும் செத்துப்போன சந்தங்களையும் வைத்தே உழன்று கொண்டிருந்தது தமிழ்த் திரைப்படப்பாடல் துறை'' என்று நடையில் மெல்லிய காந்தத் தன்மையால் நம்மை மிகவும் கவருகிறார்.

வளர்த்துவரும் விஞ்ஞான யுகத்தில் கலை எங்கே காணாமல் போய் விடுமோ என்ற கவலையில் அவசர அவசரமாக பாரதிராஜாவும், இளைய ராஜாவும் தங்களது அக்கறை கொண்ட ஆளுமைகளால் தமிழ் சினிமாவில் தமக்கானதொரு முத்தி

**கன்னிகா ஜுவல்லர்ஸ்**
அலெக்சந்திரா பிரஸ் ரோடு
வேப்பமூடு,
நாகர்கோவில் - 629 001.
22ct தங்க நகைகள் மற்றும் வெள்ளி நகைகள்
வாங்க நம்பிக்கையான நிறுவனம்
கன்னிகா ஜுவல்லர்ஸ்.
உரிமை : துளசிமணிமார்பன்



படிப்பகம்

padippakam

ரையைப் பதித்து, செத்துப்போக விருந்த கலைக்கு ரத்ததானம் செய்தார்கள். எல்லாத்துறையிலும் புதியவர்கள் தேவைப்பட்டார்கள். அப்போதுதான் காட்டாற்று வெள்ளம் போல் கட்டற்ற கவித்திறம் கொண்ட பாட்டரசன் கண்ணதாசன் எல்லோரது இதயங்களிலும் துக்கத் தேமலைத் தக்கவைத்து விட்டுத் தமிழன்னையின் ஆஸ்தான கவிஞனாகப் பூமி வாழ்வைப் பூர்த்தி செய்தான். இனி யார் அவரது வெற்றி யென்னும் வெற்றிடத்தைப் பற்றி நிரப்புவது? வினாக்களில் தமிழ் சினிமா விக்கித் தவிக்கையில் . . .

இந்த விக்கலை நிற்க வைக்கும் விந்தையை நான் வைத்திருக் கிறேனென்று அங்குலம் நழுவாது தன் எழுத்துக்களால் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் வைரமுத்து.

மரபின் சந்தக்கட்டுக்களை, ஹார்மோனியத்தின் இசை மெட்டுக்கேற்றவாறு இணைத்துப் புதியதொரு இலக்கிய வேள்வியைத் தொடங்கினார். பெரிய பெரிய இலக்கிய ஜாம்பவான்களாலும் வெல்ல முடியாத செல்வாக்கைத் தனது ஆர்வத்தாலும், போதிய திறமையாலும் மிகக் குறுகிய காலத்திலேயே பெற்றார் என்றால் மிகையில்லை. மதுரபாஸ்கரதாஸ் தொடங்கி மற்ற எவரும் எட்டிப் பிடிக்காத தேசிய விருதை மூன்று முறை தமிழுக்காகப் பெற்றுத் தந்தவர் வைரமுத்து. எந்தப்பாடல் திறத்தால் இன்று பலராலும் பேசப்படுகிறாரோ அந்தப் பாடல் திறத்தின் கற்பனை வளத்தைப் பற்றிய நூல் இது.

எப்போதுமே தமிழ்ச்சூழலில் ஆய்வாளன் அல்லது விமர்சகன் (ஆய்வாளன் வேறு, விமர்சகன் வேறு) நீதிபதி போலவும், ஆய்வுக்கு உட்படுத்தப்படும் படைப்பும், படைப்பாளனும் குற்றவாளி போலும் கருதப்படுவது நாடறிந்த நடப்பு. அந்த நடப்பை உடைத்து, நொறுக்கி உண்மையான இந்நூல் அமைந்திருக்கிறது.

''திரைத்துறையின் தவிர்க்க முடியாத சூழல்களால் தரமற்ற பாடல்கள் இவராலும் இயற்றப்பட்டிருக்கின்றன.''

இவை போதாதா நூலாசிரியரின் நேர்மையான ஆய்வுக்கு அத்தாட்சி? எனினும்-

விழியில் விழுந்து<br>
இதயம் நுழைந்து<br>
உயிரில் கலந்த உறவே

போன்ற பாடல் வரிகள் காதலுக்கான சூத்திரமில்லையா? வெவ்வேறு கவிஞர்கள் வெவ்வேறு உத்திகளில் காதலைச் சொல்லி இருந்தாலும் இந்த வார்த்தைகளுக்குள் தேங்கிக்கிடக்கும் நிஜத்தை யாரால் நிராகரிக்க முடியும்.

எடுத்துக்கொண்ட தலைப்பில் அணுவும் பிசகாது . . . அழைத்துச் செல்லும் நடையில் துளியும் தொய்வில்லாது, படைக்ககப் பெற்றிருக்கும் இந்நூல் வடிவமைப்பிலும் சிறப்பாக காணப்பெறுகிறது. அவற்றுக்காக பதிப்பாளர் செழியனை எவ்வளவு மெச்சினாலும் தகும். எம்.பில் பட்டத்திற்காகச் செய்யப் பட்ட ஆய்வைப் பல இடையூறைக் கடந்து நூல் வடிவமாகக் கொண்டு வர வேண்டும் என துணிந்ததே அவரது செயலுக்குக் கிடைத்த முதல் வெற்றி. அது நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் பளிச்சிடுகிறது.

வைரமுத்து என்கிற பாடலாசிரியனைத் தினந்தோறும் செவிவழி செல்லும் ராக எழுத்துக்களால் நுகர்ந்து கவரப்பட்ட ஒவ்வொருவரும் ஒருமுறையேனும் இந்நூலை வாங்கி வாசிப்பது நலம். ஓரிரு ஒற்றுப்



படிப்பகம்

padippakam

பிழைகளைத் தவிர களையென்று எதுமில்லை.

யுகபாரதி

## திளாப்பு

ஆசிரியர் : ஜே.ஆர்.வி. எட்வர்ட்

வெயியீடு : 'சிந்தனை' பிலாவிளை, அண்டுகோடு -629 163

விலை : ரூபாய் 16

ஜே.ஆர்.வி எட்வர்டின் 'திளாப்பு' என்னும் சிறுகதைத் தொகுப்பு கயிறு, துக்கம், குடை, விடிவு, தகர்வு. பூந்தோட்டம், திளாப்பு, ஏழைகள், துருவங்கள், சுகக்கேடு, கள்ளிச் செத்தை, கை என பன்னிரெண்டு சிறுகதைகளை உட்கொண்டுள்ளது.

உள்ளார்த்தமான சினேகத்தின் வெளிப்பாடுகளும், தீர்க்கமுடியாத துக்கங்களின் இறுக்கங்களும், பட்டங்கள் பெற்ற பின்பும் கானல் நீராகிப் போன வேலைவாய்ப்பு இன்மையினால் உற்ற உறவுகள் கூட உதறித் தள்ளும் உண்மைச் சம்பவங்களும், ஆணாதிக்க அடாவடித் தனத்தை உடைத்தெறிந்து சரிநிகர் சமம் என சமத்துவம் பேசும் பெண்மையின் ஒங்கி ஒலிக்கும் குரல்களும், பெற்றோரின் உதிரத்தை உறிந்து பட்டங்கள் பெற்று விட்டு அரசாங்க உத்தியோகமும், அழ்கான மனைவியும் அமைந்து விட்டதால் உற்பத்திக்கு உத்திரவாதம் அளித்த உதிர உறவுகளைக் கூட உதாசீனப் படுத்தும் கொடூர நெஞ்சங்ளையும், சொத்து சுகத்திற்காய் சொந்த சகோதரனையும், 'சத்தியமாய் இவன் எனக்கு உறவு இல்லை' என நாலு பேர் முன்னிலையில் நாக்கூசாமல் கூறும் நய வஞ்சகர்களையும் அஞ்சா நெஞ்சுடன் ஆழ்ந்த சிந்தையுடன் கதைக் கருவாய் அமைந்துள்ளார் ஆசிரியர்.

நிகழ் காலத்தில் தோன்றும் கதைகளில் மண்ணின் மணத்தை உலகிற்கு பரப்புகிறோம் என்ற வக்கிரபுத்தியால் மூன்றாம் தர மக்களால் கூட ஜீரணிக்க முடியாத வார்த்தைகளையெல்லாம் கதைகளில் கற்பித்து, மொழியை வைத்தே மண்ணின் மைந்தர்களுக்கு கரும் புள்ளி குத்தும் அளவுக்குச் சொல்லாமல் ஆசிரியர் நேரடியாகச் சொல்லும் மொழி நடையும், பாத்திரங்கள் வாயிலாகப் பேசும் மொழி நடையும் இலக்கிய நாகரீகத்தை எள்ளளவும் சிதைக்காத அளவிலேயே உள்ளது.

''உங்க பேரை, புகழை, மகிமையைப் பிரஸ்தாபிக்க நாங்கள் தான் பலிகடா ஆகணுமா?'' இது 'ஏழைகள்' என்ற கதையில் ஒரு பணக்காரனைப் பார்த்து ஓர் ஏழை எளியவன் கூறும் கூற்றாக ஆசிரியர் அமைத்துள்ள உரையாடல். ஒரு சாதாரண ஏழையின் பேச்சைக் கூட இவ்வளவு நாகரீகமாக ஆசிரியர் படைத்துள்ளார் என்றால் இவரது மொழி நடை நாககீமானது என்பதற்கு வேறொரு சான்று தேவையில்லை.

'சுகக்கேடு' என்ற கதையில் ''மனுஷனுக்குக் சுகக்கேடு வரக் கூடாது prestigious கேன்சரும் அட்டாக்கும் என்றில்லை. இதில் Prestigious என்ற வார்த்தையை அப்படியே ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதியுள்ளார். ஆனால் 'அட்டாக்' என்ற ஆங்கில வார்த்தையை தமிழில் எழுதியுள்ளார். அதைப் போன்று Disease என்ற வார்த்தையையும் ஆங்கிலத்தில் அப்படியே எழுதியுள்ளார். இது தமிழ் தவிர ஆங்கிலம் தெரியாத பாமர மக்களுக்கு இவர்



படிப்பகம்

padippakam

செய்யும் பாதகமாகவே அமைந் துள்ளது.

யார் பரந்து விரிந்து பிரச்னை களையே மையமாகக் கொண்டுள்ள இந்த சமுதாயத்தை கழுகுப் பார்வை யால் உற்றுப் பார்க்கிறார்களோ அவர்களால் மட்டுமே இலக்கியத்தை இலக்கியமாகப் படைக்க முடியும். ஒரு விளையாட்டு மைதானமாகவே காட் சியளிக்கும்.

''இந்த கொலையைச் செய்தது பண்ணையார் தான். சுந்தரத்தோட பையனுக்கும், பண்ணையாரோட மூன்றாவது மக மல்லிக்கும் கொஞ்சம் 'இது'. பண்ணையாருக்கு இது புடிக் கல்லையாம். அதுதான் ஆள் செட் டப்பண்ணி பயலை தீர்த்துட்டார்...'' என ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்கும் இடையே நடக்கும் காத லுக்கு கிடைக்கும் பரிசு கசாப்புத்தான் என்பதை ஆசிரியர் வெளிப்படுத்து கிறார்.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர் களாக இருந்தாலும் ஒருவன் படித்து பட்டங்கள் பெற்று, அரசாங்க உத்தி யோகம் கிடைத்து சமுதாயத்தில் அந்தஸ்தான இடத்தில் இருந்தால் வாழ்க்கையில் அடி மட்டத்தில் இருக்கும் உடன் பிறப்புகளை கண்டு கொள்ளாதது மட்டுமின்றி அவர்களை தீண்டத்தகாதவர்களாகவே நினைக் கின்றனர்.

'திளாப்பு' என்ற கதையை ஆசிரியர் படைத்துள்ளார்.

''இந்த எழுத்து ஒன்னயும் அவுங்க வீட்டுல கொடுத்துருவீங்களா?'' - என போஸ்ட்மேன் கேட்க, ஹென்றியின் கண்கள் உருண்டு திரண்டன. 'அந்த் பனையேறிப் பய வீட்ல . . . ' போஸ்ட்மேன் முகத்தில் வேர்வை மொட்டுக்கள் முறைத்தன. உதட்டைக் குவித்துக் கொண்டு 'நான் எழுத்துக் கொடுக்கவா?'' என்று முடித்தான் ஹென்றி.

உடன் பிறந்தவனாக இருந்த பிறகு அவன் பனையேறி என்பதால் ஒதுக்கித் தள்ளும் கொடூர மனப்ப ான்மையை எவ்வளவு நுட்பமாக படைத்துள்ளார் கதாசிரியர் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

'தகர்வு' கதையில் ஒரு பெண்ணை வருணிக்கும் போது ''கையில்லாத ரவிக்கை அணிந்த உரித்த கோழி போன்ற அவளது தோற்றம் இவனை கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை தான்'' என ஆசிரியர் இன்றைய பெண்களின் அரைகுறை ஆடைக்கு உவமை மூலம் சவுக்கடி கொடுப்பது மனதில் ஆழ பதிவதாக உள்ளது.

கிராமத்துப் பெண்கள் எப்போ தாவது ஒரு முறை பஸ்களில்


# வேர்கள் இலக்கிய இயக்கம்

எஃப் 15, டி.எம்.எஸ். மணி சாலை,
வட்டம் 8: நெய்வேலி -607 801

*வேர்களின் இவ்வாண்டு வெளியீடுகள் :*

நுண்வெளி கிரணங்கள் (நாவல்) - சு. வேணுகோபால் | கமலாதாஸ் கதைகள் : தமிழில் : நிர்மால்யா

*விற்பனையில் :*

பாரபாஸ் : *நோபல் பரிசு பெற்ற ஸ்விடிஷ் நாவல்* ரூ.45.00 தமிழில் :க.நா.சு.
புன்னகை புரியும் இளவரசி : *இந்திய சிறுகதைகள்* ரூ.45.00 தமிழில் : சா. தேவதாஸ்
தேடல் - *வங்க மொழிச் சிறுகதைகள்* - ரூ. 50.00 தமிழில் : சு. கிருஷ்ணமூர்த்தி

ரூ.1000-வேர்களில் வைப்பு நிதியாக செலுத்தி ஆண்டுக்கு ரூ.200 மதிப்புள்ள விரும்பும் நூல்களை பெறலாம். ஐந்தாம் ஆண்டு முடிவில் ரூ.1000 திரும்ப பெறலாம். அல்லது திட்டத்தில் தொடரலாம்.



படிப்பகம்

padippakam

பயணித்து அவர்கள் பஸ்ஸை விட்டு இறங்கும் போது அவர்களுக்கு ஏற்படும் உணர்வை பூந்தோட்டம் கதையில் இப்படிக் கூறுகிறார். ''கண்டக்டர் இடத்தைச் சொல்லி இறங்கு இறங்கு என்று கத்துவது எரிச்சலை ஊட்டும்; ஓர் குழந்தையைத் தாயை விட்டு பலவந்தமாய் பிரிக்கும் பாதகியைப் போல் அவன் தெரிவான்'' என கிராமத்துப் பெண்களின் உணர்வுகளை உவமை மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இதைப் போன்றே பழமொழிகளையும் கையாளுகிறார்கள்.

'சுகக்கேடு' என்ற கதையில் தனது நோயைப் பற்றியே சதா கவலையோடு இருக்கும் வேலுச்சாமியைப் பார்த்து டாக்டர் 'மருந்து பாதி மனசு பாதி, நம்பிக்கையோடிரும்'' என்ற பழமொழியைக் கூறியது அவருக்கு புது தெம்மை அளித்தது.

இப்படி அநேகம் கதைகளின் இடையிடையே உவமைகளையும் படிமொழிகளையும் அமைந்துள்ளது கதைக்கு பெரும் வலுவைச் சேர்த்துள்ளது.

எவ்வளவு தான் கைதேர்ந்த கதாசிரியர்களாக இருந்தாலும் சில கதைகளில் அவர்களின் கற்பனைத் திறத்திலோ அல்லது கதை அமைப்பிலோ சறுக்குதலும், குழப்பங்களும் ஏற்படுவது உண்டு.

அந்த குழப்ப நிலை இந்த கதாசிரியரின் கதைகளான குடை, துருவங்கள், கை ஆகிய கதைகளிலும் காணப்படுகிறது. இந்த கதைகளை இன்னும் முழுக்கமுழுக்க ஆசிரியரின் கற்பனைத் திறத்தில் இருந்து மாற்றி வாசகர்களுக்கு புரியும் விதத்தில் அமைந்திருக்க வேண்டும்.

கமல. செல்வராஜ்

## ஆதங்கம்

*ஆசிரியர்* : அன்பின் செபா

*வெளியீடு* : தமிழருவி இலக்கியச் சோலை

*முகவரி* : கடையாலுமூடு, களியல் - 629 101.

சமூகத்தின் அங்கமாகப் பங்கேற்கும் ஒவ்வொருவருக்கும் அனுபவ எதிர் கொள்ளலில் ஆதங்கம் நிகழ்வதுண்டு. 'அன்பின் செபா'வின் 'ஆதங்கம்' ஐம்பது பக்கப் புயலாக மையம் கொண்டிருக்கிறது.

'சந்தேகம்' என்ற தலைப்புடன் நூலின் துவக்கம் இது :

ஆடம்பரமாக வாழ்பவர்கள்  
எளிமையையும்  
சமத்துவத்தையும்  
அன்பையும்  
போதிக்கிறார்கள்  
? ? ? ?

நான்கு கேள்விக் குறிகளுடன் துவங்கிய தொகுப்பு முழுக்கக் கேள்விகள் . . . கேள்விகள் . . .

''அப்ப நம்ம பாதிரியாரும், கன்னியாஸ்திரிகளும்?'' என்ற கடைசிப்பக்கக் கேள்வி வரை,

'பணவரவும் பாவமன்னிப்பும்' என்ற தலைப்பில் ஒரு கேள்வி :

திருச்சபைக்கு எதிரான  
சகல பாவங்களும்  
குற்றங்குறைகளும்  
மன்னிக்கப்படும்!  
ஒழுங்கா வரிகொடுத்து  
நல்ல ஒரு தொகையும்  
நன்கொடை கொடுத்தால்!  
சரிதானா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்



படிப்பகம்

padippakam

லும் பொறுப்பைச் சம்பந்தப்பட்டவர்களிடம் விட்டுவிட்டு அடுத்த பக்கத்திற்குப் போகலாம்.

அங்கே 'மோனும் அப்பனும்' (மகனும் தந்தையும்) பேசிக்கொள்கிறார்கள் :

**மோன் :**

"சாமியாரு பூசையிலே
எல்லோரும் மின்னே நின்னு
ஒயின் குடிச்சுதாரு
ஆரும் கேக்கல்ல
இப்ப மது ஒழிக்கப் போறாராம்"

**அப்பன் :**

"லேய் . . . அது கிறிஸ்துவின் ரத்தம் பெல"

இந்த வரிகளில் பலருக்கு ரத்தம் கொதிக்கக் கூடும். 'உள்ளதைச் சொன்னா உடம்பு எரியத்தான் செய்யும்' என்று முன்னுரையாக வாக்குமூலம் தருகிறார் ஆசிரியர்.

ஸ்டெப் கட்டிங்
கூலிங் கிளாஸ்
தொப்பி
டீ ஷர்ட்
ஜீன்ஸ்
ஹீரோ ஹோண்டா . . .
இது யாரு ஸ்டைலா போறாது?
தெரியாதா? இது நம்ம பங்கு சாமியாரு!

என்ற வரிகளுடன்,

அன்று
மைனர், ஜமீன்தார்கள் செய்ததை
இன்று
மதவாதிகள்

என்னும் இன்னொரு பக்க வரிகள் தொடர்பு கொள்வது.

'அன்பின் செபா'வின் பார்வையில் 'ஒரு தந்தையின் வேண்டுகோள்' கூட கிண்டலாகவே படிகிறது.

"மகனே!
நன்றாகப் படி!
பாதிரியாய்ப் போ!
நீயே எனக்குத்
தந்தையாகி விடும்
அதிசயம் பார்!"

'கன்வென்சன்' எனும் தலைப்பில்

ஆயிரம் ரூபாய் செலவில்
அல்லேலூயா
குழல்விளக்கொளியில்
கர்த்தர் அதோ வருகிறார்,
இதோ வருகிறார்,
ஏசு அழைக்கிறார் . . .
காட்டுக் கத்தலில்
செவிப்பறை கிழிய
மக்கள் மனதில் மதவெறி
வன்முறையைத் திணிக்க . . .

வன்முறையின் ஆணிவேர் இங்கே அடையாளம் காட்டப்படுகிறதா? என்ற கேள்விக்கு விடையை மத நல்லிணக்கச்சான்றோர்களிடம் விட்டுவிடுவதே தக்கது.

பைபிள் ஒரு கதைப்புத்தகம்
நல்ல ஓர் இலக்கியம்
அருமையான படைப்பு

மூத்த பாதிரியார் ஒருவர் கூறுவ தாக வரும் இவ்வரிகளைத் தொடர்ந்து-

அப்படியானால்
ஏசு கிறிஸ்து ஒரு மாயாஜாலக்காரன்
அல்லது மந்திரவாதி என்று
சொல்லலாமா?

என்ற வரிகளின் எதிரொலி. 'சதங்கை' யின் அடுத்த இதழ்களில் சர்ச்சையாக எழக்கூடும்.

'வந்தவர்கள்' என்ற தலைப்பில் -
ஆடு வளர்த்தார்கள்
மாடு வளர்த்தார்கள்
கோழி, குருவி, புறா வளர்த்தார்கள்
பிரிவினையை வளர்த்தார்கள்
மனிதத்தை மட்டும் வளர்க்க மறந்து
விட்டார்கள்.

- இந்தக் கடைசி வரியை அன்பின்


படிப்பகம்

padippakam

செபாவின் 'ஆதங்க' வெளிப்பாட்டின் ஒரு வரிச் சுருக்கமாகக் கொள்ளலாம்.

அன்பின் செபாவின் எழுத்துக்களில் அழகியல் இருக்கிறதா, இலக்கியம் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்தால் எதுவும் இல்லை.

இந்தத் தொகுப்பைப் படித்துவிட்டுக் கோபத்தில் கொதிப்பவர்க்கு எதிரே,

'ஏதேனும் குறைகாணும் அன்பர்கள் எனது அனுபவமின்மைக்காக மன்னிக்கவும்!' என்ற அன்பின் செபாவின் முதல் பக்க வாக்குமூலம் எந்த அளவுக்குக் கேடயமாய் நிற்கும் என்ற கேள்விக்குறி.

ஆக-

'இது ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பு' என்ற விளக்கத்துடன் கூடிய இந்த 'ஆதங்கம்' தொகுப்பு -

கேலிகளின் தொகுப்பு!
கேள்விகளின் தொகுப்பு!

'இந்த கேள்விகளுக்கு எங்கே பதில் கிடைக்கும்?' என்பது இன்னொரு கேள்விக்குறி!

ஞாலன்

---


## தெறி (கவிதைகள்)

என்.டி. ராஜ்குமார்
விலை ரூ.25
கலைஇலக்கியப் பெருமன்றம்
நாகர்கோவில் கிளை

## மௌனப் புறாக்கள்

(கவிதைகள்)
சு. விஸ்வநாதன்
விலை ரூ.25
கீதாஞ்சலி படைப்பகம்
32, அருள்தாஸ்புரம்,
கத்தனேரி, மதுரை - 18

## குருஜி (சிறுகதைகள்)

நெ. சுந்தரமகாலிங்கம்
விலை ரூ.20
ரேவதி எண்டர் பிரைஸஸ்
6/882-1B ஆசாரிகாலனி
சாட்சியாபுரம் - சிவகாசி

## முள்ளின் நுனியிலும் ஆகாயம்

(கவிதைகள்)
சகாரா
விலை ரூ.10
இராணி மெய்யம்மை
இளம் அரிமா சங்கம்,
மேல்நிலைப்பள்ளி
புலியூர் 629 114

## விமர்சன மீட்சிகள்

(கட்டுரைகள்)
பிரேமிள்
விலை ரூ.15
லயம் வெளியீடு
நகலூர், அந்தியூர் 638 501

## என் கவிதை

(கவிதைகள்)
ராஜமார்த்தாண்டன்
விலை ரூ.12
திலீப் குமார்
25-3-வது டிரஸ்ட் கிராஸ் தெரு,
சென்னை - 600 028




படிப்பகம்

padippakam


# வசந்தம் ரோலிங் ஷட்டர்ஸ்

நீண்ட கால உழைப்பிற்கும் உறுதிக்கும்

ISI முத்திரையிட்ட

## VASANTHAM

**Rolling Shutters & Grills**




## VASANTHAM ENGINEERING WORKS

19, Industrial Estate, Konam,
Nagercoil - 4, K.K. Dist. h : 33375, 33386
Grams : "Shutters", Telex : 0436-212;
Telefax : 04652-25800

*Founder :* **M.C. BALAN**, B.A., B.L., Ex. M.P.,




படிப்பகம்

padippakam

# இருள்

அனுராதா


என்னவோ . . . மனசுக்குள்ள புழுக்கமா. . .

எதையெதையோ . . . இல்ல . . . எல்லாத்தையுமே மறக்கணும் போல...

கால்முட்டிய மடக்கி, சாய்வா முகத்தை அழுந்தி, பின் நிமிர்ந்து கழுத்தைப் பின்னுக்கு சாய்க்கறா சசி.

அடைச்சு நிக்கிற அறைசுவர்கள். அவற்றை வெறிச்ச மேனிக்கு மேல படுத்திருக்கிற கூரை.

ச்சே . . . கண்ணை இறுக்கி – திறந்து. . . பிறகு நிதானமாக பார்வைய ஜன்னல் பக்கமா வீசறா. . .



வானம்.

இப்படி . . . எங்கயாவது விசாலமான. . . தங்குதடையில்லாத வெளியில சிறகு விரிச்சு மிதக்கணும்.

கண்ணுக்குத் தெரியாத இந்த கட்டுகளையும் சகிக்க முடியாத இந்த ஒப்பனைகளையும் கலைச்சி எறிஞ்சிட்டு . . . இயல்பா . . . சுதந்திரமா... விட்டு விடுதலையாகி . . . ஒரு சிட்டுப் போல . . .

சசி ஆயாசத்தோடு ஜன்னலுக்கு நகர்றா.

ஏற்கனவே வந்திறங்கி. வாசல்ல காத்துக் கிடக்கிற அந்தி மங்கல். அதோட மெல்லிய விரிப்பில் வாரிகொட்டினது போல மயங்கிச் சிரிக்கிற வெளிச்சப்புள்ளிகள். லேசான மினு மினுப்போடு நீண்டு ஒடுகிற தார்ச்சாலை. மேலே பறக்கிற ஒரிரு பறவைகளின் சிறகடிப்பைத் தவிர வேற சலனமறியாத அதன் மௌனம்.

மனசு ஒரு நொடி அந்த தனிச்சு ஒடுற நீணட் தார்ச்சாலையோட மௌனத்துக்குள்ள சிக்கிப்போகுது. இதென்ன . . . இந்நிலை சலனங்களற்றுக் கிடப்பதா? இல்லை . . . சலனங்களால் அறையப்பட்டு கிடப்பதா?

நெஞ்சுக்குள் நீர்குட்டையாய் தேங்கிப் போன சில அபூர்வமான நிமிடங்கள். . . பாசி படர்ந்த பளபளப்பான கூழாங்கற்களைப் போல அடி மனசில் தங்கிப் போய் விட்ட அதன் நினைவுகள் . . .

இதோ தார்ச்சாலையின் மண்துகள்கள் உள்ளங்காலை உறுத்த, அந்த மரமரப்பை ரசித்தபடி துள்ளித் திரிந்தது . . . மழை ஈரத்தில் செல்ல சலசலப்பை ரொம்ப அனுபவமாக இழுத்து நெஞ்சுக் குழி நிரப்பி நடந்தது . . . கையளவு பள்ளங்களில் பதுங்கிக் கிடக்கிற நீரில் வெய்யில் முகம் பார்க்கும் அழகைக் கண்டு அதிசயித்து நின்றது . . .

எல்லாமே ஒரு வயசுக்கு மேல காணாமப் போன விஷயமா . . .



படிப்பகம்

padippakam

கனவுகளில் மட்டுமே தரிசிக்கக்கூடிய அழகா . . . வாழ்க்கை, அதன் அற்புதங்களைக் கண்டு பிரமிச்சு நிக்கிற வயசில, ஒரு பெண்ணோட கண்ணுக்கும் காலுக்கும் கடிவாளம் போட்டுடுதே . . .

என்னதான் மனசு அங்குமிங்கும் அலைந்தாலும் கூட, உடம்பு சோர்வு தட்ட, சசி மெல்ல வாசல் கதவைத் தள்ளிக் கொண்டு வெளி வராண்டா வில் வந்து நின்றாள்.

ஏழரை இருக்கும்னு சொல்கிற இருட்டு. அந்த சிறு நகரத்தின் பெருவாரியான வீடுகளிலிருந்து மங்கலான வெளிச்சம் கசிந்து இருளுக்குள் ஒளிந்து கொண்டிருந்தது.

ஜெயந்தனை மண்ணுக்கு இரை யாகக் கொடுத்துவிட்ட அந்த இரண்டரை வருடங்களுக்கு மேலா, இந்த மூன்றாவது மாடியின் இருண்ட மேற்குப் பக்க வராண்டாதான் சசியைத் தாங்கிக் கொள்கிற மடி. அழவிட்டு ஆறுதல் தருகிற ஸ்நேகம். மனசு உரத்துப் பேசுகிற சன்னதம். அமைதியில் நிறைக்கிற போதிமரம்.

சில்லென்று தரை. அழுகின்ற குழந்தையை அள்ளிக் கொள்வதான ஆதங்கத்தோடு அவளை ஏந்திக் கொண்டது.

இதம், பரிவு தரையின் ஸ்பரிசம் அடர்ந்த நீலமா . . . நிர்மலமா . . . வானம். இங்கும் அதே மௌனம்? இதென்ன . . . இந்த பூமிப்பரப்பும் பிரபஞ்சமும் ஒரே போர்வைக்குள் தங்களைப் போர்த்திக் கொண்டதா?...

“தான்நேசித்தும் சொல்ல விரும்பி யதுமான ஒரு பேருண்மையின் முன் வீழ்ந்து வணங்கியபடி மௌனமாகி விட்டதா அது . . .” தேவதேவனின் கவிதை வரிகள் நினைவில் வட்டமிட் டன . . . ஒவ்வொரு நோக்கிலும் தன்னை பல அர்த்தங்களில் வெளிப் படுத்தி, நம்மை அதிர வைக்கிற வரிகள்!

நிலவு இன்னும் முளைத்திருக் வில்லை. காற்று மட்டும் ஒய்யாரமாய் அங்கும் இங்கும் . . .

இந்த வானம் . . . அந்த இருள் . . . அவ்வப்போது பனிப்பூக்களாய் சிரிக்கிற சில நட்சத்திரமொக்குகள். . .

நெஞ்சம் விம்மித் தவிக்கிற போதெல்லாம் இப்படி இருளுக்குள் இருளாய் கரைந்து தணிவதும் . . . மனவெளியின் நிம்மதியான ஒரு மணற்பரப்பில் சஞ்சரிக்கிறபோது, அந்த பேருணர்வை பகிர்ந்துக் கொள்ள இதே இருளுக்குள் நகர் வதும்... சமயங்களில் பயமும் சோர்வுமான ஒரு நிராதரவான மன நிலையில் பதறும் போது, நெடுநேரம் வரைக்கும் இந்த இருள் தனக்கு ஆறுதலா முணுமுணுப்பதும் . . .

எல்லாத்துக்குமே ஈடு கொடுக்கிற இந்த இருள். இதன் அழ்ந்த அமைதி. மனசின் தணுப்புக்கும் சூட்டுக்கும் ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கிற இருள்.

எத்தனை வருஷங்கள் . . . இரவுகள் . . . கணங்கள் . . . அத்தனைக்கும் தனக்கு ஒரு ஆறுதலா... தோழமையா . . . மனசுக்கு நெருக்கமா...

விசுக்குனு ஒரு குளிர்ந்த காற்று. இதென்ன . . . காவேரி ஆறு தனக்குக் காற்றில் எழுதும் இன்றைக்கான கடைசி சேதியா?

சட்டென்று எழுந்து வெளித் திட்டின் சுவர்மீது அமர்ந்தாள். அம்மாவும் அப்பாவும் டி.வி.யில் லயித்தபடி தங்களுக்குள் என்னவோ பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் . . . சசி கண்களை சரித்து நகர்த்தினாள்.



படிப்பகம்

padippakam

உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட ஊர் மேற்கில் ஊர் மையமும் கிழக்கில் காவேரியின் நீண்ட படுகையும் . . . படுகையோரங்களில் . . . திகைத்துப் போய் நிற்கிற மணற்குன்றுகள் சற்று தொலைவில் தளர்வாய் விரிந்து சரிகிற மலைமுகடுகள்.

சில்லென்று இன்னொரு தழுவல். மழை நீர் கழுவிப் போகிற தார்ச்சாலை மாதிரி, மனசின் துயரத்தையெல்லாம் அடித்துப் போகிற காற்று. காற்றின் தழுவல்.

சசி நின்று நிதானமாய் அவதானிக்கிறாள். மெல்லிய பனிபடலத்துக்கு அப்பால் . . . இருளில் மூழ்கிக் கிடக்கிற காவேரி ஆற்றின் மோன தவம் . . . காதல் லயிப்பில் ஆடை விலக நெகிழ்ந்து பூத்துக் கிடக்கிற பெண்மை போல . . .

இந்த அமைதி . . . இந்த அமைதியின் ஆழ்தவம் . . . இந்த மௌனம் . . . இந்த மௌனத்தின் அடிவேரைத் தழுவியபடி லகரியாய் வழிகிற ஒரு இதம் . . . கண்கள் அந்த காட்சிக்குள் கவியக் கவிய, மனசுக்குள் ஒரு புத்துணர்வு . . . ஒரு பரவசம் . . .

உள்ளுக்குள் இறுகிக் கிடந்த கற்றைகள் ஒவ்வொன்றாக இற்று விழ . . . எல்லாற்றையும் உதறியெறிந்து விட்டு கைகளையும் கால்களையும் நீட்டிப்பரப்பி பிரபஞ்சத்தையே அடைத்தபடி வெகு சுதந்திரமாய் படுத்துக் கிடக்கிற ஒரு லயிப்பில் ஆழ்ந்து போனாள்.

பல சமயங்களில் அவள் அப்படியானதொரு ஆஜானுபாகுவான தோற்றக் கற்பனையில் ஆழ்ந்து போகிறது வழக்கம்.

இந்த ஆற்றுப் படுகைக்கு குறுக்காக உடம்பைக் கிடத்தி, அந்தண்டை திமிறித்தெறிக்கிற மலைமுகட்டின் மீது தலைசாய்த்து, இந்தண்டை விரிகிற சரிவுகளின் மீது கால்களை பரப்பி . . . சலனமில்லாமல் நிசப்தமாய் அடர்ந்திருக்கிற இருளின் சாரத்தை வெகு நிதானமாக உள்வாங்கியிருக்க வேண்டும். யுகத்திற்கும் இந்த அமைதி வெள்ளத்தின் மௌள அலையடிப்பில் அமிழ்ந்திருக்க வேண்டும்.

மலைகளோடு மலையாய் அப்படியே மலைத்து மெல்ல ஊர்கிற காற்று தன் பிரமாண்டமான உருவத்தை ஆரத்தழுவி மெல்ல நழுவ, இந்த சுகந்த ரகசியங்களுக்குள் புதைந்திருக்கிற இயற்கை நுட்பங்களை உணர்ந்து நெகிழ வேண்டும். இரவென்னும் கரும்பூவின் ஒவ்வொரு நொடி மவுனத்துடிப்பையும் அதில் வழிகிற நேசத்தையும் சிந்தாது சிதறாது அள்ளிக் கோர்த்துக் கொள்ள வேண்டும்.

மனதிற்குள் கற்பனையின் கனம் கூடக் கூட, பசிக்கு இரை தேடுகிற பாம்பைப்போல இருளின் அடர்த்திக்குள் வேட்கையோடு பதிந்தன அவள் விழிகள்.

இருளின் கோப்பையிலிருந்து வழிகிற கருமை . . . கசிந்து . . . பூமிப்பரப்பெல்லாம் தீட்டலாய் . . . ஈசி . . .

இருள் . . . அடர் இருள். அடர்ந்த கருமை . . . வானக் கருமை. வட்டக் கரிய விழி . . . கண்ணம்மா . . . வானக்கருமையடி . . . வானக்கருமை... இந்த கருமையின் பூரணத்துவத்தை எவ்வளவு நுணுக்கமாய் அனுபவம் செய்திருக்கிறான் அந்த மகாகவி! எத்துணை நுட்பமான அழகுணர்ச்சி! நினைக்க வியப்பில் வசீகரிக்கிற உவமை ! அவனது கண்ணம்மாவின் விழி கருமைக்கு ஈடாக வானக் கருமைய்ய இழுத்து வந்து அவளது



படிப்பகம்

padippakam

காலடியில் கிடத்தி மகிழ்கிறான். இந்த இருளுக்குள் நான் சிறகு விரித்து பறப்பது போல . . . அவன் அவளது விழிக்கருமைக்குள் கிறங்கிப் போய் கிடந்திருப்பானோ . . .

தாயின் கருப்பை வெதுவெதுப்பை சுரக்கிற இந்த கருமை . . . ஆரத்தழுவுகிற ஒரு அந்தரங்கத் தனிமையை வழிய விடுகிற இந்த நீலக் கருமை !

காற்று கலைந்து கலைந்து வீசி கொண்டிருந்தது. சரிந்து விழுகிற சீலை முந்தியைப் போல அசைந்து நெகிழ்கிற மரக் கிளைகள்.

வெள்ளாட்டுக் குட்டிகளை மேய்ச் சலுக்கு ஒட்டிப் போகிற மேய்ப் பனைப் போல, காற்று கூட்டங் கூட் டமாய் மேக மந்தைகளை ஒரு சேர ஒட்டிப் போயிருந்தன.

சசி மெல்ல உடல் பரப்பிப் படுத்திருந்தாள். குளிர் தரை. தென்றல். தனிமை. மனச்சுமை கரைந்து சலனம் வற்றி இருந்தது. இருளுக் குள்ளும் தான்.

''சொல்ல முடியாத வேதனையே இதன் சலனம் . . .''

தேவதேவனின் கவிதை வரிகள் மீண்டும் நினைவில் சஞ்சரித்தது.

தான் நேசித்ததும் சொல்ல விரும்பியதுமான ஒரு பேருண் மையின் முன் வீழ்ந்து வணங்கிய படி அமைதியாகி விட்டதா அது . . . அப்படித்தானா . . .?

இருளைப் பார்க்கிறபோதெல்லாம் மனசுக்கு நெருக்கமான ஒரு துணையைப் பார்க்கிற தெம்பு உள்ளுக்கு . . . இல்லையா பின்னே... அவர்களுக்குள் எத்தனை ரகசியங் களும் சந்தோஷங்களும் வேதனை களும் பகிரப்பட்டுள்ளன . . . பகிர்தல் அல்லவா வாழ்வின் இன்பம்!

இருளுக்கும் அவளுக்குமாய் இருக் கிற பிரி இழைகள் மறைந்து அவளுக் குள் இருளும் இருளுக்குள் அவளுமாய் கசிந்து கொண்டிருக்கும் பொழுது . . .

''இந்த இரவோடு நிறைய பேச வேண்டியிருக்கு . . . ''

இருளும் அவளோடு பேச உசித மாய் நெருங்கி நகர்ந்து காதை உரசி சம்மதம் உச்சரித்துக் கொண்டிருந்தது.

''படார் . . .''

கதவு திறந்து வெளியே வந்தார் பெரியவர். சட்டென்று தலை நிமிர்த்திய சசி அவர் முகத்தில் தெரித்த உக்கிரத்தைக் கண்டு திகைத்துப் போய் தடுமாற . . .

''எவ்வளவு திமிரிருந்தா . . . அப் படி நட்ட நடுராத்திரியில . . . இருட் டுல . . . ஒத்தையில ஒரு பொம்பள இப்படி மல்லாக்கக் கிடப்ப . . . புருசனத் தின்ன பொம்பள . . . இப்படி இருட்டல அலையறியே . . . யாரேனும் பாத்தா நாக்கப் புடுங்கிக்கிட்டு சாவற மாதிரி கேக்க மாட்டாங்க . . . த்தூ...

திடுமென எழுந்த அதிர்வில் ஜீரணிக்கக்கூட முடியாத மனக்கரிப் பில் சடாரென்று ஓடி வந்த இருள் திகைத்துப் போய் ஜன்னலோரம் தவித்தபடி நின்றது.

பழைய கடல்தான்
ஆனால் -
புதிய அலைகள்

குமரி அமுதன்



படிப்பகம்

padippakam

# நேர்காணல் : டாக்டர். க. பஞ்சாங்கம் (பஞ்சு)

ந.க. துறைவன், புதுவை ரா. ரஜனி

டாக்டர். க. பஞ்சாங்கம், தன் குடும்பத்தின் பாதிப்பால் இலக்கிய உலகுக்கு வந்தவர். அவரது கிராமத்தின் முதல் பட்டதாரி அவரே. "வெள்ளச்சீலை உடுத்தியிருந்த அம்மாவினால் இச்சமூகத்தின் மேல் கோபம் வந்தது; தமிழின விடுதலை, மொழிக் கொள்கைகளுக்கு அப்பால் சமுதாயத்தின் வறுமை எனக்கு அவமானமாய் இருந்தது" என்கிறார் அவர்.

திரைப்படத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த மனைவியின் திடீர் மரணம், அந்த இளம் வயதில் அவரை அரவிந்தனின் **சிதம்பரம்** படப்பாத்திரம் மாதிரி மூன்றாண்டுகள் சுற்ற வைத்தது. அதுவே, **ஒட்டுப்புல்** கவிதைத் தொகுதி பிறக்கவும் காரணமாயிற்று. "பிராய்டு சொன்னது போல, 'ஒரு துன்பத்தை இன்னொன்றுக்கு இடப்பெயர்ச்சி செய்வது போல' எழுந்தது தான் வாசகர்களிடம் நன்கு வரவேற்புபெற்ற 'ஒட்டுப்புல்' தொகுதி" என்று கூறும் பஞ்சுவின் இலக்கிய முயற்சி விசால மாகி நாவல், கட்டுரை, விமர்சனம் என்று வளர்ந்தது. இவரது சமீபத்திய இரு படைப்புகள் **பெண்ணெனும் படைப்பு** (மொ. பு. பெண்ணியம் கட்டுரைகள்), **மறுவாசிப்பில் கி. ராஜநாராயணன்.**

தற்போது புதுச்சேரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் தனது அனுபவங்களை, எண்ணங்களை ந.க. துறைவன், புதுவை ரா. ரஜனி ஆகியோரிடம் 06-09-96 அன்று 'சதங்கை' வாசகர்களுக்காகப் பகிர்ந்து கொண்டார்.

**கேள்வி : எழுபதுகளில் வானம்பாடி, புதுக்கவிதைக்குப் புதிய பரிமாணம் தந்து ஒரு வலுவான இலக்கியத்தடம் பதித்தது. பிறகு இவ்வியக்கம் உடைந்ததற்குக் காரணம் அரசியலா? தனிநபரா? வேறு காரணங்கள் உண்டா?**

**பதில் :** வானம்பாடியைப் பற்றி நான் ஞானியிடமும் அக்னிபுத்திரனிடமும் நிறையப் பேசியிருக்கிறேன். எழுபத்தைந்தில் அவசரச் சட்டத்தை இந்திராகாந்தி செயற்படுத்திய பொழுது பல வானம்பாடிக் கவிஞர்கள் மவுனமாயிட்டங்க. பெரும்பாலும் அக்கவிஞர்கள் மாதச் சம்பளம் வாங்கக்கூடிய அரசு ஊழியர்கள், கொள்கை முக்கியத்துவத்தைவிட, எதில் பாதுகாப்புணர்வு இருக்குமோ அதுதான் அவர்களின் முன்னால் நின்றது. எனவே, வாழ்க்கைப் பயம்தான் வானம்பாடி சிதைந்து போக முக்கியக் காரணம். நான் அப்படித்தான் நினைக்கிறேன். நடுத்தர வர்க்கக்குணம் ஒரு மனிதனுக்குரிய ஈகோ ஆகியவை காரணமாய் அமைந்ததே வானம்பாடியின் சரிவு. அரசியல் ரீதியாய் அது வளரவில்லை. நல்ல அரசியல் தளத்தைத் தேர்ந்தெடுத்துச் செயலாற்றாமல் அனைவரும் சிதறி விட்டனர். அதன் பிறகு யாரும் தேறவில்லை. ஆனால் இன்றளவும் ஒரே அரசியலைச் சார்ந்து தனது கொள்கையிலிருந்து மாறாமல் ஒரே கருத்திலிருப்பவர் வானம்பாடி இயக்கத்தில் இருந்த கோவை ஞானி ஒருவர்தான். எனவே, தனிப்பட்ட மனிதப் பலவீனம் தான் அது சிதையக் காரணம்.


படிப்பகம்

padippakam

***உங்களது 'ஒட்டுப்புல்' கவிதைத் தொகுதி மார்க்ஸிய சிந்தனையை அடக்கியிருந்தாலும் அப்படைப்புக்குள் பெரும் சோகம் ஒன்று இருக்க என்ன காரணம்?***

ஒட்டுப்புல் ஒரு தனிப்பட்ட மனிதனின் அப்பட்டமான பொதுமைச் சோகமாக வளரவில்லை' போன்ற கருத்துக்களை எனது நண்பர்கள், விமர்சகர்கள் வெளியிட்டார்கள். அதற்கு எனக்கு அப்போது பதில் கூறத் தெரியவில்லை. இன்றைக்கு 'பலி' எழுதிய தேவிபாரதி இதோ கேள்விக்கான பதிலைத் தந்துள்ளார். ஒரு படைப்பாளி தன் சொந்தச் சோகங்களை ஏன் கவிதையாக்கக் கூடாது? அது கவித்துவமாக இருக்கும் பட்சத்தில் யாருடைய சோகமாக இருப்பினும் அதில் தவறே கிடையாது! மீராவின் கனவுகள்+கற்பனைகள் = காகிதங்கள் அவரது சொந்தக் காதல் சம்பவம் தான்.

எனது தனிப்பட்ட கோபம், சோகம் இரண்டும் கலந்தது ஒட்டுப்புல். அதை நான் நேரிடையாகச் சொன்னதால் தான், அதற்குப்பெரும் வரவேற்பு இருந்தது என்று நினைக்கிறேன்.

***குடும்ப அமைப்பு பாதுகாப்பானது, சிக்கல் நிறைந்தது' என்ற கருத்து முரண்கள் விமர்சகரிடையே நிலவுகின்றன. குடும்ப அமைப்பு தேவையில்லை; அமைப்பையே உடைத்தெறிய வேண்டும் என மற்றொரு சாராரும் சொல்கின்றனர். சமூக அமைப்பில் குடும்ப அமைப்பு தேவையா? தேவையற்றதா?***

நம்முடைய சமுதாயத்தில் குடும்பத்தை உடைக்கணும்னு சொன்னவுடனே என்ன கோபம் வருகிறதென்றால், "அப்போ ஒரு ஆண் பெண் யார் யாரோடும் சேரலாம்; எப்பவும் சேரலாம்; பிரிஞ்சிருக்கலாம்?


**நாஞ்சில் பெனிபிட் பண்ட் லிமிடெட்**

பதிவு எண் 1823500/92 (மத்திய அரசு பதிவு பெற்றது)

**நாகர்கோவில் - 1**

அன்புடையீர் வணக்கம்,

இந்நிறுவனத்தில் மாவட்டத்திலேயே மிகக்குறைந்த வட்டியில் தங்க நகை ஈட்டின் பேரில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை (ரூ.100-க்கு 2ரூ வட்டிக்கு) கடன் வழங்கி வருகிறோம். வைப்புத் தொகைகளுக்கு மிக அதிகமாக 21% வரை வட்டி வழங்குகிறாம்.

*தலைமை அலுவலகம் :*
52, கட்டப்பொம்மன் சந்திப்பு
நாகர்கோவில்
செவ்வாய் விடுமுறை

*கிளைகள்*

பாரத ஸ்டேட் பாங்க் எதிர்புறம், மெயின்ரோடு, ஆரல்வாய்மொழி
வெள்ளி விடுமுறை
போண் : 83550

699, இராமசுப்பிரமணியம் காம்ளக்ஸ், வேப்பமூடு சந்திப்பு, நாகர்கோவில்

மெயின்ரோடு திட்டு விளை
போண் : 33025
செவ்வாய் விடுமுறை




படிப்பகம்

அப்படின்னா மிருகங்களா வாழச் சொல்கிறாயா?'' இப்படித்தான் டக் கென்று வினாக்களைத் தூக்கிப் போடுகிறார்கள். குடும்பம் என்ற அம்சத்துக்குள், ஆணும்பெண்ணும் கொள்கின்ற பாலியல் உறவு மட்டும் தான் இருக்கிறதா? அந்த ஒரு காரியத்தை மட்டும்தான் செய்துகிட்டு இருக்கோமா? குடும்பத்தை உடைக் கணும்னு சொல்றப்போ முற்போக் காளர்கள் கூட மேலே சொன்ன கேள்வியைத்தான் முன் வைக்கி றார்கள்.

வாழ்க்கையென்பது பாதுகாப்பு ,ணர்வு அற்றுதான் இருக்கு. எந்நேரத் திலும் எதுவும் நிகழலாம். குடும்ப மென்பது நமக்காக மட்டும் என்றில் லாமல் அதிகார மனப்பான்மையை வடிவமைக்கும் சேவைசெய்கிற ஒன்றாகவும் செயல்படுகிறது. ஐரோப் பாவில் குடும்பமென்பது உடைந்து விட்டது. ஆனால், மறுபடியும் குடும்ப வாழ்வுக்கு ஐரோப்பாவே வலி யுறுத்தி வருகிறது. பிரான்சில் ஒரு தம்பதியர் குழந்தைகளோடு 75 ஆண்டுகள் பிரியாமல் இருந்தால், இலட்சக்கணக்கான பரிசு தருகி றார்கள். இன்றைக்குப் பிரெஞ்சு காலனி பாண்டிச்சேரியில் இதை நேரிடையாகக் காண்கிறேன். இப்படி ஒரு தம்பதியினர் இருந்ததால் மித்ரன் கூப்பிட்டு பரிசு தந்தார். இது எதற்காக? தன் அதிகார அமைப்பைத் தக்க வைத்துக் கொள்ள மட்டுமே குடும்பம் உடைந்து, தனிமனிதனாகி, எல்லாவற்றுக்கும் அரசை எதிர் நோக்கும் போது, அரசு பயந்துபோய் அவர்களைக் குடும்ப அமைப்புக்குள் தள்ளி எல்லாவற்றிற்கும் அரசை எதிர்நோக்கும்போது, அரசு பயந்து போய் அவர்களைக் குடும்ப அமைப் புக்குள் தள்ளி எல்லாவற்றிற்கும் பெற்றோர்களை நாடும்படிச் செய்து விடுகிறது அந்த அதிகார அமைப்பு. இந்தச் சூழ்நிலையிலே தான் நாம் கேள்வி எழுப்புகிறோம். எனவே, குடும்பம் உடைபடுதல் அவசியமா என்பதை இந்தக் கோணத்தில் தான் அணுக வேண்டும்!

**மாடர்னிசம், போஸ்ட்மாடர் னிசம், மேஜிகல் ரியலிசம், நிகி லிசம், இருப்பியல்வாதம், அமைப்பில் வாதம், பிராய்டிச சிந்தனைகள் போன்றவை தற்கால இலக்கியப் படைப்புகளில் தவறாகப் பிரதிபலிக் கின்றன. இவ்வகை படைப்புகள் எந்தப் பாமர வாசகனையும் சென்ற டைய வில்லையென்ற கருத்து நிலவு கிறது. இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?**

எந்தவொரு உயர்ந்த மாற்றுச் சிந்தனையும் ஒரு குறுகிற வட்டத்தில் தான் உருவாகிறிது. இது பாமரனுக்கு எந்தத் தரத்தில் போகணுமோ அந்தத் தரத்தில்தான் போய்சேரும். காற் றிலே தூவப்படும் அத்தனை வார்த்தைகளும் போய்ச் சேரும். அது பலவிதமான பல வடிவங்களில் போகும். ஆனால், நாம் என்ன நினைக்கிறோம்? அது பாமர மக்களுக்குப் போய்ச் சேராது என்று. அது தவறு. போஸ்ட் மாடர்னிசம் பேசும் கருத்தை எடுத்து, வைரமுத்து தான் எழுதும் இரண்டு வரிகளோடு சேர்க்கலாம். இதையே ஒரு திரைப்பட இயக்குநர் 'சின்னக்கருவாக' எடுக் கலாம். இவர்கள் கொடுக்கும் வடிவம் வேறுவிதங்களில் சென்று, மக்களுக்கு எது எளிமையாக இருக்கிறதோ அப்படிப் போய் சேரும். எப்படி மகாபாரதமும் கம்பராமாயணமும் போய்ச் சேர்ந்தது? அப்படியே வியாசரும் கம்பரும் சொன்னபடியாக வாப் போய்ச் சேர்ந்தது? மக்களிடம் போகும்போது இக்கதைகள் அதற் கான வடிவங்களை எடுத்துக்கிட்டு,

padippakam

பல கிளைகளாய் வளர்ந்து, அவர் களது கற்பனைகளையும் சேர்த்துக் கொள்ளும். எனவே, இந்த விவாதமே தவறு.

**இலக்கியத்தில் யதார்த்த வாதம் குறித்த விமர்சனம் எழும்போ தெல்லாம், அது காலாவதியாகிவிட் டதென்ற எதிர்ப்புக்குரல் பலரிட மிருந்து எழுகிறது. யதார்த்தவாதம் இலக்கியத்தில் முடிந்துவிட்டதென்று கருதுகிறீர்களா? அல்லது மிக அவசியமானது என்று கருதுகிறீர் களா?**

யதார்த்தவாதத்தை பெரும்பாலும் வரியுறுத்திய ரகுநாதனே அது முடிந்து போய் விட்டது என்ற கருத்தை வைக்கிறார். யதார்த்தவாதம் என்ற பெயரில் சமூக அவலங்களைப் பதிவு செய்கிறோம்; பேசுகிறோம். இப்பொழுது இது கூடாது என்ற பிரச்சினை ஏன் வருகிறதென்றால், சமூக அவலங்களைப் பதிவு செய்கிறோம் என்ற பெயரில் யதார்த் தத்தை புதிய தலைமுறைகளிடம் அப்படியே செலுத்தி விடுகிறோம். சின்னக்கவுண்டர் திரைப்படம் யதார்த்தவாதம் என்ற பெயரில் சாதியின் ஆதிக்கத்தைத் தான் புதிய தலைமுறைக்குக் கொடுத்துள்ளது. இந்தச் சாதியை நாம் ஒழிக்கணும்னு இருக்கிறப்போ நம் சந்ததிகள் அப்படத்தைக் காணும்போது மறுபடி சாதிவெறிதான் வளர்கிறது. எனவே, யதார்த்தவாதம் அதைப்பரப்பவே செய்கிறது. எப்படி இதை உடைப்பது? வேறு மொழி வேண்டும். அது தான் மேஜிகல் ரியலிசம். புரான ரீதியாய்த் தோண்டி; புராதன ரீதியாய் உடைப்பது கிட்டத்தட்ட வேறுமொழி யாகி, கதையாகிப் பேசுவது, கோணங்கி பேசுவது போல. ஆனால், இதற்காகத்தான் இன்று தலித்தியம் பேசுபவர்கள் யதார்த்தவாதம் கூடாது என்கின்றனர். ஆனால் யதார்த்த வாதம் அப்படியா இருக்கிறது இன் றைக்கு? தலித்துகளைக் கேவலப் படுத்துவது போல் அவர்களது பிரச்சினையை யதார்த்தவாதத்தில் நாம் மறுபடி மறுபடி எழுதிக் கொண் டிருந்தால் இந்தத் தலைமுறையும் அடுத்த தலைமுறையும் அப்படியே தான் வாசிப்பார்கள். அப்போ நாம் என்ன செய்ய வேண்டும்? இம்மொழி யை மாற்றணும். யதார்த்தவாதத்தை மாற்றணும். நாமொரு கலகக் குரலை எழுப்பணும்.

ஆனால், இன்றைக்கு உலகில் என்ன நடக்கிறது? திரைப்படங்களை எடுத்துக் கொண்டால், முதலில் யதார்த்தவாதமாகச் சென்று கடைசி 'கிளைமாக்ஸில்' அதை உடைச்சிக்கிட்டு தான் போயிடறான். நமது சிலப்பதி காரம் போன்ற காவியங்கள் கூட ஒரு உச்சத்திற்குப் போகும் போது அங்கு யதார்த்தவாதம் இருக்காது. வாழ்க்கை யில் இம்மாதிரி நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதை இல்லை யென்று சொல்ல முடியாது . பகுத்தறி வுக்கு வேண்டுமானால் அது கேள்விக் குறியாய் இருக்கலாம்!

**பெண்கல்வி, பெண் விடுதலை, பெண்ணுரிமை, பெண் ணியம் குறித்த சொல்லாடல் பெரியார் முன்வைத்த காலகட்டத்தில் திராவிட மற்றும் இ.சாரி இயக்கங்கள் மிகுந்த அக்கறை காட்டாமல் போனது ஏன்? சமீபகாலமாகப் பெண்ணியம் குறித்துப் பரவலாகப் பேசப்படு கிறது. தங்களின் 'பெண்ணெனும் படைப்பு' நூலும் பெண்ணியச் சிந்தனைகளை ஓங்கி ஒலிக்கிறது. பெண்ணியச் செயல்பாட்டிற்கான வழிமுறை களென எவற்றை முன் வைக்கிறீர்கள்?**

தமிழகத்தைப் பெறுத்தவரை பெரியார் ஆண், பெண் உறவுகளை



படிப்பகம்

padippakam

தான் வேண்டும்.

**அண்மையில் தாங்கள் எழு திய 'மறுவாசிப்பில் கி. ராஜநாராயணன்' புத்தகத்தைப் பற்றி, கி.ரா. வின் விமர்சனம் என்ன?**

புத்தகமாக வந்தபிறகு படித்து விட்டு, உணர்ச்சிகரமாக, 'ரொம்ப நல்லா வந்திருக்கு பஞ்சு. என்னோட சிந்தனையும் உங்களோட சிந்தனையும் ஒன்று போல ஓடுது. இது எப்படி நிகழுது? ஆச்சரியமாக இருக்கு!'' என்றார். அவரைப் பொறுத்தவரை எப்படியென்றால் புத்தகங்களைப் பற்றியும் சரி; அரசியலைப் பற்றியும் சரி, ரொம்ப வும் சுருக்கமாகத்தான் விமர்சனம் செய்வார்!

**STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT**
**SATHANGAI** (Tamil Quarterly)
Form IV
(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Nagercoil 629 002. |
| 2. Periodicity of Publication | : | Quarterly |
| 3. Printer's Name | : | Tirumathy V. Bhagavathy |
| Nationality | : | Indian |
| 4. Address | : | Rajakkamangalam Road, Chettikulam Jn. Nagercoil - 629 002. |
| 5. Editor's Name | : | Vanamaaligai |
| Nationality | : | Indian |
| Address | : | 53/2, Pandian Street, Kavimony Nager, Nagercoil - 629 002. |
| 6. Name and address of individuals who own the Newspaper and Particulars of Share holders holding more than one Percent of the total capital | : | VANAMAALIGAI |

I, Vanamaaligai hereby declare that the Particulars given above are true to the best of my knowledge and belief.

*Vanamaaligai*
Publisher.

31-03-1997



படிப்பகம்

padippakam


*With Best Compliments from*

# N. MAHALINGAM AND COMPANY

No.468, Dr. Nanjappa Road, Coimbatore - 18.
Phone : 230357/8/9
Fax : 0422 - 235880

**Dealers For**

- ★ Matador Vehicles and Engines
- ★ Tempo Trax
- ★ Kinetic Honda and Luna Mopeds
- ★ T.V.S., I.F.B. BOSCH Washing Machines
- ★ Kurl-On, Titan Watches, Rallis Products
- ★ Indane Domestic Gas, Southern Gas
- ★ Bharat Petrolium Products
- ★ BPL Products

**After Sales Service Facilities can be availed in our Well Equipped Service Stations**

**BRANCHES**

| | | |
|---|---|---|
| Pollachi | Udumalpet | Erode |
| Ooty | Nagercoil | Tirunelveli |
| Tuticorin | Trivandrum | Pondicherry |




படிப்பகம்

padippakam

# உயிர் விளையாட்டு

- மனுஷ்ய புத்திரன்

நான்கு நாட்களுக்கு முன்பு தொலைக்காட்சியில் எதேச்சையாக அந்தச் செய்தியைப் பார்த்தேன். படைப்பிலக்கியத்தை முழுமையாக கைப்பற்றிக் கொள்ள விரும்பும் மனிதன் நெடுநாள் ஆவல் தொடர்பான செய்தி. ஸ்காட்லாந்திலுள்ள - எடின்பரோ அருகே ரோஸலின் இன்ஸ்ட்டியூட்டில் 'டாலி' என்ற ஆட்டுக் குட்டி ஒரு மரபணுவின் மூலம் நூற்றுக் கணக்கான நகல்களை உருவாக்கக் கூடிய 'குளோனிங்' முறையில் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்போது இரண்டு குரங்குகள் உருவாக்கப்பட்டன. மிகப் பெரிய முன்னேற்றம். ஏனெனில் இது மனிதனை உருவாக்குவதற்கு முந்தைய படியாக இருக்கலாம். அமெரிக்காவில் இந்த ஆய்வு கண்டனங்களை எழுப்பியுள்ளது. அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் இதைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து அரசுகள் இந்த ஆய்வுக்கு அளித்து வந்த நிதியுதவியை நிறுத்திக் கொண்டுள்ளன . . .

அந்தக் குரங்குகள் கண்ணாடி அறைக்குள் ஆவேசமாக பாய்ந்தோடிக் கொண்டிருந்தன. எந்த நேரமும் தொலைக்காட்சி திரையை தகர்த்துவிட்டு என் மேல் பாய்ந்து விடலாம் என அச்சமாக இருந்தது. எங்கோ ஒரு பொறியாக கிளம்பிய சங்கட உணர்ச்சி படிப்படியாக வளர்ந்து பெரும் மூட்டமாக கவிந்து கொண்டது. அன்றிரவு பல விநோதக் கனவுகளுக்கும் பிரமைகளுக்கும் ஆளானேன்.

தொப்பியணிந்த ஒரு உயரமான ஆள் ஒரு தள்ளுவண்டியை தள்ளிக் கொண்டு ஏதோ பாடியபடி வருகிறான். வண்டியில் பறவைக் கீச்சொலிகள் காற்றில் தானியங்கள் போல சிந்திக் கொண்டே வருகின்றன. குழந்தைகள் வண்டியைத் துரத்திக் கொண்டு வருகின்றனர். வண்டிக்காரன் அவர்களிடம் நாணயங்களைப் பெற்றுக் கொண்டு மூங்கில் கூடையிலிருந்து இன்குபேட்டர் கோழிக்குஞ்சுகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். அவ்வை ஐஸ்கிரீம் போல சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலமென செயற்கை நிறமேற்றப்பட்டிருந்தன. அவற்றின் மெல்லிய உடம்பின் சூடான இரத்தம் குழந்தைகளை நடுங்க வைத்தது. எல்லா வீடுகளிலும் இன்குபேட்டர் குஞ்சுகள். அவயவங்கள், பாதுகாப்பு பற்றிய தன்னுணர்வின்றி அவை கால்களில் மிதிபடத் தொடங்கின.

தொப்பியணிந்த மனிதன் மீண்டும் மறுநாள் வருகிறான். இந்த முறை அவன் மனித குழந்தைகளைக் கொண்டு வருகிறான். சோதனைக் கூடங்களில் அப்போதுதான் இந்த வேலைப்பாடுகள் முடிந்து கேரண்டி கார்டுடன் அவர்கள் அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தனர். கறுப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் மற்றும் விநோத நிறக் கலவையுள்ள குழந்தைகள். வண்ணங்கள் சாயம் போகாதென வண்டிக்காரன் உறுதியளிக்கிறான். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா வகைக் குழந்தைகள் வெவ்வேறு விலையில் இருந்தன. கூடவே வித்தியாசங்களுடன் கொஞ்சம் பழங்குடியின


படிப்பகம்

padippakam

குழந்தைகளும் இல்லாமல் இல்லை. பெருங்கூட்டம் வண்டிக்காரனைத் தொடர்கிறது.

எல்லா இடத்திலும் சோதனைக் கூடங்களிலிருந்து வந்தவர்கள் வளர்ந்து ஆளாகிறார்கள். எதனாலும் நிரப்பமுடியாத தனிமையில் அவர்கள் அமைதியிழந்து காணப்படுகிறார்கள். தம் மூல அணுக்களில் எங்கோ, மறைந்து போன தம் மூதாதையரை, பூர்வீக நிலத்தை, பூர்வீக தெய்வத்தை தேடி அலைகின்றனர். கருப்பையின் வழியே வந்தவர்களுக்கும் சோத்னைக் குழாய் வழியே வந்தவர்களுக்கும் தீராத முரண்கள் ஏற்பட்டுவிட்டன. கருப்பை மனிதர்கள் தம்மை இயற்கையானவர்கள் என்றும், சோதனைக் கூட மனிதர்கள் தம்மை தர்க்க ரீதியானவர்கள் என்றும் வாதிட்டுக் கொள்கின்றனர். கருப்பை வழியே வந்தவர்களும், சோதனைக் கூடத்தின் வழியே வ்ந்தவர்களும் உறவு கொண்டு ஆற்றலுள்ள புதிய சந்ததிகளை உருவாக்கலாம் என சமூக சீர்திருத்தவாதிகள் போதிக்கத் தொடங்கினர்.

மனமுடைந்து போன பல சோதனைக் கூட மனிதர்கள் அராஜகத்தின் மூலம் நீதியை படைக்க கலகங்களைத் தொடங்குகின்றனர். அவர்களுடன் சில கருப்பை மனிதர்களும் சேர்ந்து கொள்கின்றனர். அமைதியை நிலைநாட்ட சோதனைக் கூடங்களில் அநீத சக்தி படைத்த இராட்சத மனிதர்கள் உருவாக்கப்படுகிறார்கள். எல்லா கலகக்காரர்களையும் நசுக்கி அழிக்கிறார்கள். மனிதர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்ட அல்லது வெளியேற்றப்பட்ட நிலங்களில் பழைய தவறுகள் திருப்பட்ட, புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய சோதனைக் குழாய் மனிதர்கள் கூட்டம் கூட்டமாய் வளர்க்கப்படுகிறார்கள் . . .

திடுக்கிட்டு எழுந்து கொண்டேன். மின்சாரம் எப்போதே நின்றுவிட்டிருந்தது. தொண்டை வரள தலை அனலாய் சுட்டது. எரிந்து அடிப் பாகம் மட்டுமே மிச்சமிருந்த மெழுகு வர்த்தியை பற்ற வைத்தேன். சுவரில் என் நிழல் பெருகிப் பெருகி அச்சுறுத்தும் வண்ணம் அலையத் தொடங்கியது.

“இது போன்ற புனைகதைகள் இதற்கு முன்பு உருவாகியிருக்கின்றன. இன்னும் உருவாகப்போகின்றன. ஆனால் . . . ” வரலாறோ, விஞ்ஞானமோ யாருடைய விருப்பு வெறுப்புகளையும் முன்னூகங்களையும் பொருட்படுத்தி நகர்வதில்லை. மேலும் அது ஒரு புனைகதைக்கான ஒழுங்கமைவினால் ஆனதுமல்ல. ஆனால் எந்த புனைகதையாளனுக்கும் சாத்தியமற்ற சாத்தியங்களை பூமி எவ்வளவோ சந்தித்து விட்டது. ஹிட்லரின் விஷவாயு அறைகளும், ஹிரோஷிமா, நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டுகளும் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் பிரம்மாண்டமான படைப்புகள் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம் இந்த நவீன விஞ்ஞானம் நமக்கு போலியோ சொட்டு மருந்தும் வெறிநாய்க்கடிக்கு ஊசியும் தந்து சமாதானப்படுத்தலாம். ஏன் இதையெல்லாம் திரும்பப் பேச வேண்டியிருக்கிறது என்றால், யாரால் மனிதர்களை பெருமளவு கொன்று குவிக்க முடியுமோ அவர்களாலேயே மனிதர்களை பேரளவில் உற்பத்தி செய்ய முடியும் என்ற கற்பிதமே பெரும் அதிர்ச்சி ஏற்படுத்துகிறது. மனிதன் விஞ்ஞானத்தின் வழிமுறைகளால் இயற்கையை வெறும் கச்சாப் பொருளாக மட்டுமே அணுகி,



படிப்பகம்

பயன்படுத்தி, வெற்றி கொண்டதன் உச்சக்கட்ட விளைவாக அவன் மெல்ல மெல்ல நவீன விஞ் ஞானத்தின் கச்சாப் பொருளாக மாறிக் கொண்டிருக்கிறான்.

இந்தச் சோதனை பற்றி உண்மையான, முழுமையான தகவல் கள் உடனடியாக வெளிவராமல் போகலாம். ஆனால், இந்த நூற்றாண் டில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் தூண்டுதலால் விசுவரூபம் எடுத்த உயிரியல் தொழில் நுட்பத்தால் பூமி யின் உயிரியக்கச் சூழல் பெருமளவு தகர்த்தெறியப்பட்டு விட்டது. தாவரங் கள், கால்நடைகள், கடல்வாழ் உயிரினங்கள் மேல் செலுத்தப்பட்ட இந்த பயங்கர வன்முறையால் மீளவே முடியாதபடி நஞ்சூட்டப்பட்டிருக்கி றோம். ஆனால் இந்த உயிரியல் தொழில் நுட்பத்தின் இறுதியான இலக்கு மனிதனே. அதில் தான் அதன் அசலான வெற்றியும் மமதையும் அடங்கியிருக்கிறது. வல்லரசுகள் அணுக்குண்டுகளைப் போலவே இந்தத் தொழில் நுட்பம் ஒரு இன்றியமையாததாகி விடக்கூடும்.

நாம் நமது புனைகதைக்கு மீண்டும் திரும்புவோம். இப்படி ஒரு சாத்தியப் பாடு உண்மையாகவே எட்டப்பட்டு அதன் 'பலன்கள்' பொது மனித னுக்குக் கிடைக்கத் தொடங்கி விட் டால் என்ன நடக்கும்?

நவீன விஞ்ஞானத்தின் ஒவ் வொரு பாய்ச்சலும் மனித குல 'நன்மையை' முன்னறிவித்தபடித்தான் நடந்திருக்கிறது.

உலகளாவிய அளவில் பொருளா தார நிபுணர்கள் ஒவ்வொரு நாட் டினதும் பொருளாதார வளம், உற்பத்தித்திறன், மனித ஆற்றல் ஆகியவற்றை கணக்கிட்டு அதற் கேற்ப மனிதகுல மறு உற்பத்தியை துல்லியமாகத் திட்டமிடலாம்

இயற்கையின் நிர்பந்தங்களாலும், தற்செயலின் தேர்வுகளாலும் ஆன சந்ததிகளின் உருவாக்கத்திற்கப்பால் முற்றிலும் திட்டமிட்ட ஆரோக்கிய மான, சக்திவாய்ந்த, பிரத்யேக தேவைகளுக்குரிய சுந்தரிகளை உருவாக்கலாம்.

கருத்தடை சாதனங்களும் அள வான குடும்பம் பற்றிய புனைவுகளும் தேவைப்படாதபடி மனித உடல் மாற்றியமைக்கப்பட்டுவிடும். கேஸ், தொலைபேசி இணைப்புகளுடன் குழந்தைகளை பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியலாம்.

போதும் . . . மனித இயற்கை என்பது முற்றிலும் சமூக, பௌதீக தேவைகளின் கூட்டமைப்புதானா? மாறி விடுகிற காலத்தின் கலாச்சார தேவைகளுக்கும் சௌகர்யங்களுக் கும் ஏற்ப இயற்கையின் எல்லா வழி முறைகளையும், உடைத்து விடலாம் எனில் கடைசியில் எஞ்சியிருக்கப் போவது எதுவாக இருக்கக் கூடும்? மனிதனையும் இயற்கையையும் பிணைக்கும் தொப்புள் கொடி ஏதோ ஒரு தருணத்தில் முற்றாக அறுந்து விட் டால் பிறகு அந்தத் தனிமை எவ்வளவு பெரிய பாதாளமாக இருக்கும்?

சில மாதங்களுக்கு முன்பு ஒரு மனிதருக்கு பன்றியின் இதயத்தை பொருத்தி சோதனை செய்ததற்காக ஒரு இந்திய மருத்துவர் கைது செய்யப்பட்டார்.

அந்தச் சோதனையில் பன்றியின் இதயத்துடன் சோதனைக்குள்ளான வர் ஒருவாரம் உயிர் வாழ்ந்ததாகவும் எனவே இது உறுப்பு மாற்று பரிசோதனையில் மிகப்பெரிய வெற்றி என முதலில் செய்திகள் வந்தன. பின்னர் அது மறுக்கப்பட் டது. உண்மையும் பொய்யும் வழக்கம் போல பத்திரிகைகளில் எழுத்துக் குவியலில் கரைந்து போயின.

padippakam

விலங்குகளின் சில உறுப்புகளை மனிதனுக்கு பொருத்துவது தொடர்பான சோதனைகள் உலகெங்கும் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன. இதில் வெற்றியடைந்து விட்டால் மரணத்தை ஒத்திப் போடுவதில் (மனிதர்களின் மரணத்தை மட்டும்) மாபெரும் சாத்தியப் பாடுகள் உருவாகிவிடலாம். ஆனால் அப்புறம் என்ன நடக்கக் கூடும்? மனித இயல்பு, மனித அகந்தை இதை எப்படி உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொள்ளும்? உலகின் எல்லா கலாச்சாரத்திலும் மனிதன் மிருகம் என்ற எதிர்வு மொழியின் முக்கிய குறியீடாக இருக்கிறது. மிருக நிலையை வெற்றி கொண்டு மேலெழும்பியதன் ஞாபகம் அவனது நினைவுகளின் ஆழத்தில் உள்ளது. வரலாறு, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் எல்லா சாட்சியங்களிலும் இந்த நினைவு படிந்திருக்கிறது. என்றேனும் ஒரு நாள் மனித உடலில் மிருக உடல் பொருந்தி விடலாம். ஆனால் இந்த நினைவை எப்படி அழிப்பது? என் உடலில் ஒரு பன்றியின் இதயம் துடிக்கிறது என்பதை எந்த அறவழிமுறையால் புரிந்து கொள்வது? (பன்றியின் மூளையோடு வாழ்வதைவிட அதொன்றும் மோசமல்ல எனவும் வாதாடலாம்.)

மனிதனுக்கு மரணத்திலிருந்தோ நோயிலிருந்தோ தப்பிப்பது மட்டுமே உயிர்வாழ்தலின் குறிக்கோளாக என்றுமே இருந்ததில்லை. ஏதேதோ அற்பத்தனமான, உன்னதமான இலட்சியங்களுக்காக அவன் தன் வாழ்வையும் உயிரையும் பணயம் வைத்திருக்கிறான். அப்படி பணயம் வைத்ததில்தான் அவனது 'மானுட தன்னிலை' உருவாகியிருக்கிறது.

இயற்கை பெருமளவு 'திருத்தப்'பட்டு விட்டது. எஞ்சிய பகுதியையும் மனிதன் விரைவில் தன் வழிக்கு கொண்டு வந்துவிட முடியலாம். ஆனால் விஞ்ஞானத்தின் ஒவ்வொரு இறுதி விளைவையும் தீர்மானிப்பது வர்த்தக உலகில் நியதிகளும், அரசியல் அதிகார கனவுகளும் மட்டுமே.

கண்ணாடி அறையில் குரங்குகள் முட்டி மோதுகின்றன. எப்போதோ பார்த்த என்ற Wrath of God படத்தின் "க்ளைமாக்ஸ்" ஞாபகம் வருகிறது. பழங்குடிகளின் ஒவ்வொரு தீவாக வெற்றி கொண்ட ஆக்ரமிப்பாளர்கள் ஒவ்வொருவராக கொல்லப்பட்டு இறுதியில் படைத்தலைவன் மட்டும் மிஞ்சுகிறான். அவனது காலிப்படகில் அவனைச் சுற்றி ஏராளமான குரங்குகள் நிறைந்து வழிகின்றன. தெய்வத்தின் கோபம் குரங்குகளாக உருமாறிவிடுகிறது.


**திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கியப் பரிசுகள் 1996**

1996-ல் வெளிவந்த சிறந்த நூல்களுக்கானப் பரிசுகள்,

நாவல், சிறுகதை, கவிதை, மொழி பெயர்ப்பு, கட்டுரை, சிறுவர் இலக்கியம்-

**நூலின் மூன்று பிரதிகள் அனுப்ப வேண்டும்**

கடைசி நாள் 30-04-1997

தலைவர், திருப்பூர் தமிழ்ச் சங்கம், 34 கே.பி.என். காலனி, 3வது வீதி, திருப்பூர் 641 601.




படிப்பகம்

padippakam

வண்டியும் குதிரையும் பரஸ்பரம் கட்டப்பட்டிருக்கிறார்கள். கிழவனின் வாழ்க்கையே அவைதான். சுமையும் வரமும், உறவும் அவைதான். அவன் இறந்து போயிருக்கலாம். குதிரை இறந்து போகிறது. அந்த பயணம் அர்த்தமற்றதோர் முடிவிற்கு வந்து விடுகிறது. அவரது பெரும்பாலான கதைகளில் வாழ்க்கை அர்த்தமற்ற பெருஞ்சுமையாக மனிதர்களைத் தொடர்கிறது. மனிதர்கள் அவருடைய குறுநாவலொன்றின் தலைப்பில் பாவண்ணன் 'இது வாழ்க்கையில்லை' என்று குரல் எழுப்புகிறார். அவருடைய பெரும்பாலான கதைகள் மனித வாழ்வின் ஒரு சித்திரத்தைத் தந்து அக்குரலை அழுத்தமாக நம்மில் எதிரொலிக்கச் செய்து முடிவடைகின்றன. அவருடைய முதலிரு நாவல்களும் கூட இதே பாணியில் செயல்படுவதைக் காணலாம். 'வாழ்க்கை ஒரு விசாரணை', 'சிதறல்கள்' என்று அவற்றுக்குத் தலைப்பு வைத்ததன் மூலம் வாழ்க்கைப் பற்றிய தன் தரிசனத்தை பாவண்ணன் முன் வைக்கிறார்.

'வண்டி' என்ற கதையை பாவண்ணனின் இவ்வகைக் கதைகளுக்கு உதாரணமாகக் காட்டியதற்கு இன்னொரு காரணம் கூட உண்டு. இக்கதைகளின் மூலகூற்றை அக்கதை அடையாளம் காட்டுகிறது. செகோவின் மிகப்பிரபலமான வண்டிக்கார கிழவனை நினைவுகூராமல் இக் கதையை நாம் படிக்க முடியாது. சமகால மனிதாபிமான முற்போக்குப் படைப்புகள் பெரும்பாலானவை செகோவ், கார்க்கி ஆகிய இருவருடைய படைப்புகளையே முன்னுதாரணமாகக் கொண்டுள்ளன. சித்தரிப்பின் வழியில் முடிவுகளை நோக்கி வாசகனை பலவந்தப்படுத்திச் செலுத்தும் தன்மை கொண்டவை கார்க்கியின் படைப்புகள். அம்முயற்சியில் படைப்புக்குரிய வடிவ ஒழுங்கை அவை பெரும்பாலும் கோட்டை விடுகின்றன. வாழ்க்கை பற்றிய புரிதலை முறுக்குகின்றன. கதாபாத்திரங்களை பொம்மையுருவங்களாக மாற்றி விடுகின்றன. படைப்பின் பன்முகத் தன்மை இதன் மூலம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. வலியுறுத்தப்படும் கருத்துக்கு எதிராகத் திரும்பும் தன்மை பொதுவாக பெரும்பாலான முதிர்ந்த வாசகர்களிடம் உண்டு. ஆகவே ஏற்கனவே அக்கருத்துக்களை அறிந்து ஏற்றுக் கொண்டிருக்கும் வாசகர்கள் அல்லாத பிற வாசகர்களிடம் இக்கதைகள் எதிர்மறை விளைவுகளையே உண்டுபண்ணுகின்றன. நமது முற்போக்குக் கதைகள் இத்தகையவையே.

செகாவின் கதைகளில் வடிவக் குறைபாடுகள் சிறுகதை என்ற வடிவின் அடிப்படை இயல்புக்கும், அவரது கனிந்த மனிதாபிமானத் திற்கும் இடையேயான முரண்பாட்டின் விளைவுகள். சிறுகதையின் செவ்விய வடிவம் முரண்நிலையை-கதைமுடிச்சு எதிர்பாராதபடித் திருப்பும் தன்மையை வலியுறுத்துவது. செகாவ் ஒருமையையே வாழ்வின் இயல்பாகக் கண்டார். அங்கதம் தவிர்த்த பிறவகைக் கதைகளில் வெற்றிகரமாக இறுதி முடிச்சை சாதிக்க அவரால் முடியவில்லை. ஆனால் அவருடைய கதைகள் முன்முடிவுகள் மூலம் நெருக்கப்படாதவை. இயல்பாக மலரும் தன்மை கொண்டவை. வாசக மனம் அவற்றின் நளினமான இயக்கத்தில் லயித்து உடன் மலர்கிறது. பாவண்ணன் செகாவின் பாதிப்புகள் நிரம்பிய படைப்பாளி. செகாவின் நெகிழ்ந்த மனிதாபிமானமே பாவண்ணன் படைப்புகளுக்கும் சாரம். செகாவைப்



படிப்பகம்

padippakam

போலவே படைப்புகளை அவற்றின் இயல்பான மலர்தலுக்கு அனுமதிக்கக் கூடியவர். உதாரணமாக அவருடைய 'வண்டி' கதையிலேயே கூட ஒரு எதிர்தரப்பை சுரண்டல் அமைப்பை அவர் கோடிட்டுக் காட்டி அக் கதையை முற்போக்குக் கதையாக மாற்றி விட்டிருக்கலாம். இக்கதையில் மட்டுமல்ல எந்தக் கதையிலும் பாவண்ணன் அதை செய்ததில்லை. தமிழ் நாட்டின் கடைக்கோடி மக்களின் துயரமும் கனவும் அவர் படைப்புகளில் குறுக்கீடின்றி பதிவு செய்யப்படுவதனாலேயே அவை முதல் முக்கியத்துவத்தைப் பெறு கின்றன.

● ●

பொதுவாக படைப்பாளியின் படைப்புலகில் நான்கு வகையான படைப்புகள் தென்படும். படைப் பூக்கம் இன்றி எழுதப்பட்டு விட்ட சாதாரண கதைகள்; படைப்பின் வடிவத்தின் உள்ளார்ந்த சாத்தியக் குறைவுகள் காரணமாக தோல்வி யடைந்த முயற்சிகள்; படைப்பின் வடிவச்சாத்தியங்களை போதுமான அளவு பயன்படுத்திக் கொள்ளாமை யினால் தோல்வியடைந்த முயற்சிகள் ; வெற்றிகரமான படைப்புகள்.

ஒரு படைப்பாளியைப் பொறுத்த வரை அவன் அதிகபட்சம் செய்யக் கூடியது முதல்வகைப் படைப்புகளை தவிர்ப்பது மட்டும்தான். வெற்றிகர மான படைப்பு என்பது ஓர் எல்லை யில் படைப்பாளியை மீறிய ஒரு நிகழ்வு ஆகும். தீவிரமான, முழுமூச் சான முயற்சியை மட்டுமே படைப் பாளி செய்ய முடியும். முதல் வகைப் படைப்புகளை தவிர்ப்பதற்குத்தான் திறன் வாய்ந்த விமர்சனமும், தேர்ந்த வாசக எதிர்வினையும் படைப் பாளிக்கு உதவும். துரதிர்ஷ்டவசமாக தமிழில் இலக்கிய விமர்சனம் என்பது சித்தாந்த இறக்குமதி, அரசியல் சார்ந்த நிழற் சண்டை என்ற இரு தளத்துடன் நின்று விடுகிறது. முக்கியமான மூத்தபடைப்பாளிகள் பற்றியே எது வும் எழுதப்படுவதில்லை எனும் போது பிறரைப்பற்றி பேசவே வேண்டியதில்லை. தமிழ் எழுத்தாள னுக்கு வாசக எதிர்வினை என்பது ஒரு வகை கனவு மட்டும் தான். இத்துடன் பாவண்ணனுக்கு தொடர்ந்து எழுதி வாசகர்களிடம் முறியாத தொடர்பு கொண்டிருக்க வேண்டும் எனும் ஆசையும், பிரபல இதழ்களில் எழுதும் முனைப்பும் இருக்கிறது. விளைவாக முதல்வகைப் படைப்புகள் தான் அவருடைய படைப்புலகில் அதிகம். தனது படைப்புச் சூத்திரத்தின் படி அவற்றை ஏராளமாக வார்த்திருக் கிறார்.

இக்கதைகளின் எண்ணிக்கைப் பெருக்கம் அவருடைய பல நல்லகதை களைக் கூட வாசகக் கவனம் பெறாது மறைந்திருக்கிறது என்பது ஓர் உண்மை. வாசகர்களின் கவன மின்மை ஒரு புறமும் விமரிசனம் தன்பணியினை ஆற்றாதது மறுபுற மும் இதற்கு உதவின.

எழுத்தும் வாசிப்பும் மிக அவசர கதியில் நடைபெறும் இக்காலகட் டத்தில் படைப்பெழுச்சியும் பிற உணர்வுகளும் பிரித்தறிய முடியாதபடி கலந்து விடக்கூடும். அனுதாபம் சுயபரிதாபம் முதலிய மனநெகிழ்வு கள், தார்மிக கோபம், சில புதிய கருத்துக்கள் முதலியவை படைப்பூக்க மாக படைப்பாளியால் தவறாக எண்ணப்பட்டு விடக்கூடும். படைப் பாளி தன் படைப்பை தானே மனவிலகலுடன் படித்து மதிப்பீடு செய்வதே இப்போதுள்ள ஒரே வழியாகும். படைப்பூக்கம் என்பது எப்போதும் மொழிசார்ந்த ஒரு இனம் விளங்காத மன எழுச்சியாகவே



படிப்பகம்

துவங்கும் என்றும், படைப்பில் ஆதார மான தரிசனம் படைப்பாக்க நிகழ்வின் மூலமே வெளிப்படும் என்றும் ஒரு விதியாகக் கூறலாம். பாவண்ணன் படைப்புகள் பெரும் பாலானவற்றில் மொழி வழக்கமான ஓர் ஒலியொழுங்கை மட்டுமே கொள் வதைக் காணும்போது எளிய மன நெகிழ்வுகளைச் சார்ந்தே எழுத ஆரம்பிக்கிறார் எனும் ஐயம் ஏற்படுகிறது.

பாவண்ணன் கதைகளில் பொது வாக இலக்கணம் என்று 'நெகிழ்வூட் டும் சம்பவங்கள்' என்ற சொற்களைக் கூறலாம். திரும்பத் திரும்ப வாழ் விலுள்ள கண்ணீர்க் கணங்களை நோக்கியே அவர் பயணம் செய் கிறார். அதற்கேற்ப அவருடைய நடையும் சம்பவ விவரிப்பும் படிந்து போயுள்ளன. பெரும்பாலான சந்தர்ப் பங்களில் இந்தப் பயணம் அவரை வெறும் கண்ணீருக்குத்தான் இட்டுச் செல்கிறது. கத்திரிக்கோல் வாங்க முடியாத தையற்காரன், போணி யாகாத வியாபாரிகள், சம்பாதிக்க முடியாமல் மனைவியிடம் அவமானப் படும் கணவர்கள் - இப்படி இக் கதைகள் படிக்கும் கணத்தில் நம்மை மனநெகிழ்விற்கு இட்டுச் சென்றாலும் கூட பலசமயம் பிறகு மனதிலிருந்து மறைந்து விடுகின்றன., கதையில் யாருடைய வாழ்வு கூறப்பட்டாலும் சரி, வாசகனைப் பொறுத்தவரை அவனுடைய வாழ்வு அதில் பிரதி பலித்தால் மட்டுமே அவனுடைய உள்மனத்தை அது பாதிக்கிறது. போணியாகாத வியாபாரி நமக்கு அனுதாபத்தைத் தரக்கூடும். ஆனால் அவனுடைய அப்பிரச்சினை ஒரு மானுடப் பொதுப் பிரச்சினையாக மாற்றப்பட்டிருந்தால் அதை வாசிக்கும் அனைவரும் அதில் தங்களை கண்டி ருப்பார்கள். பாவண்ணனின் கதை கூறுமுறையின் சிக்கலற்ற சம்பவ விவரிப்புத்தன்மையானது இதற்குத் தடையாக உள்ளது. அவருடைய கணிசமான அளவு கதைகளை அவர் தேர்ந்தெடுத்துள்ள கதைவடிவத்தின் சாத்தியக்கூறுகள் காரணமாக தோல்வியடைந்தவை எனலாம்.

ஆயினும் சில தருணங்களில் அவ் வடிவ எல்லைக்குள் பாவண்ணனின் சிலகதைகள் மானுட வாழ்வின் சாஸ்வத துக்கங்கள் சிலவற்றைச் சொல்வதில் வெற்றியடைந்துள்ளன. அத்தகைய சிறப்பான கதைகள் கூட தமிழ்சூழலில் கவனிக்கப்படாது போனமை துரதிர்ஷ்டவசமே. மிகச் சிறந்த உதாரணம் 'பேசுதல்' என்ற கதை (பாவண்ணன் கதைகள்) கதையின் சித்தரிப்புதளம் எளியது. வழக்கம்போல நேரடியானது. கணவன் மனைவி இருவருக்கும் இடையேயான உறவின் நெருடல் மிக்கத் தருணம் ஒன்று அது. ஆனால் மனிதர்களுக்கு இடையேயான புரிதல் என்ற தீர்க்க முடியாயத புதிரை நம்க்குக் காட்டுகிறது இக்கதை. ஒரு மனம் என்பது ஒரு பிரபஞ்சம். ஆழங்களும், அனந்த வல்லமைகளும், மௌனங் களும், இருளும், ஒளியும் நிரம்பியது. ஒரு பிறமனத்துடன் அது கொள்ளும் உறவு மிகமிகக் குறைந்த அளவிலான ஒரு திறப்பு மட்டுமேயாகும். திறப்பு என்று கூட கூற முடியாது. மனதின் ஒரு தருணத்து தோற்றம் மட்டுமே அது. மிக மிக நெருக்கமான ஓர் உயிருடன் கூட ஒரு மனம் உண்மையான தொடர்பை கொள்ள முடியாது போலும் என்று எண்ண வைக்கிறது இக்கதை. 'பேசுதல்' மனிதர்களுக் கிடையே சாத்தியம்தானா என்ற கேள்வியை திரும்பத்திரும்ப எழுப்பு கிறது.

இத்தகைய அபூர்வமான கதைகள் பாவண்ணனின் படைப்புலகின்

padippakam

சாத்தியங்களை நமக்குக் காட்டுகின்றன. இன்னொரு உதாரணம் 'ராதை' என்ற கதை. ராதை என்ற நர்ஸின் வாழ்க்கை பற்றிய எளிய கோட்டுச்சித்திரம் அது. பொருந்தாத ஒரு மண வாழ்க்கை அதிலிருந்து விடுபட்டு ஓர் 'இலட்சியவாதியுடன்' காதல் மணம். அவனுடைய இலட்சியவாதம் காரியவாதமாக மாறியபிறகு, அவனுடைய இரண்டாம் தாரத்தின் வசதிக்காக, தினம் இரவு நேரப்பணிக்குப் போகும் நிலையில் இருக்கும் வாழ்க்கையை அவள் வறண்ட கண்ணீருடன் கூறுகிறாள். இந்த சிறுதைக்குள் ஒரு பெண் முன் சமகாலவாழ்வு வைத்துள்ள எல்லா சாத்தியங்களையும் பாவண்ணன் மறைமுகமாக பரிசீலித்திருப்பதைக் காணலாம். ராதை இனி என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வியை கதை சொல்லியைப்போல நாமும் எழுப்பிக் கொள்ளும்போது தான் இக்கதை விரிந்து நம் வாழ்வின் மூச்சுத் திணறல் இடுங்கலை நமக்கு உணர்த்துகிறது.

முதல் கதை மனிதமனத்தின் அடிப்படையான இயல்புகளினால் ஒவ்வொருவரும் அகப்பட்டுக் கொண்டு இருக்கும் மீளமுடியாத தனிமை யெனும் தளைபற்றிக் குறிப்பிடுகிறது. இரண்டாவது கதை நாம் உருவாக்கி வைத்திருக்கும் சமூக நியதிகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் தளைகளை போட்டபடி சிக்கியிருப்பதைச் சித்தரிக்கிறது. இவ்விரு தளங்களிலும் மனிதவாழ்க்கை சுதந்திர மற்ற சுழற்சியாகவும், அபூர்வமான தருணங்களில் விடுபடுவதற்கான முயற்சியாகவும், பெரும்பாலும் அர்த்தமற்ற முடிவாகவும் இருப்பதையே பாவண்ணன் தன் படைப்புகள் மூலம் காட்டுகிறார். இவ்விரு கதைகளையும் அவருடைய சிறப்பான படைப்புகளின் இருவகையான முன்னுதாரணங்களாகக் கருதலாம். இத்தகைய கதைகளை வைத்து பாவண்ணனை நாம் மறுமதிப்பீடு செய்யவேண்டும்.

பாவண்ணன் தன் வெற்றிகரமான கதைகளில் கூட பலசாத்தியங்களை தவறவிடுகிறார் என்பதை கூறியாக வேண்டும். குறிப்பாக சிறுகதையின் கவித்துவமான சாத்தியங்களை அவர் கணக்கிலெடுத்துக் கொள்வதேயில்லை. தேர்ந்த சிறுகதையாசிரியன் சிறுகதை என்பது பெரும்பாலும் கவிதையை நோக்கி நகரமுயலும் ஒரு வடிவம் என்பதை அறிந்திருப்பான். ஆகவே சிறுகதையின் குறிப்பமைதியும், உள்ளார்ந்த செறிவும், மொழிநுட்பங்களும் மிக முக்கியம் என்பதை ஒருபோதும் மறக்கமாட்டான். சிறுகதையின் ஒவ்வொரு தகவலையும் படிமமாக ஆக்கக்கூடிய சாத்தியங்களை அவன் மனம் எப்போதும் ஆய்ந்தபடியே இருக்கும். பாவண்ணன் இந்த அம்சத்தை பொருட்படுத்துவதில்லை. ஆகவேதான் அவருடைய கதைகள் மறுவாசிப்பில் புது அர்த்தங்களைத் தராது தொய்வடைகின்றன.

உதாரணமாக 'பேசுதல்', 'ராதை', ஆகிய இருகதைகளையும் பார்க்கலாம். 'பேசுதல்' கதையில் அத்தம்பதியினர் வெளியூர் பயணமொன்றுக்குச் செய்யும் ஏற்பாடுகள் கதைமுழுக்க வருகின்றன. அவை வெறும் தகவல்களாகவே உள்ளன. அத்தகவல்களை சிறிது கூர்மைப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கை (பயணத்தை)யே அவற்றில் பிரதிபலித்துக் காட்டியிருக்கலாம். 'ராதை' கதையில் ராதை எம்ப்ராய்டரி வேலைகள் செய்வது குறிப்பிடப் படுகிறது. அவளுடைய அர்த்தமிழந்து போன வாழ்வின் இயந்திரத்தனத்தை



படிப்பகம்

அதில் காட்டியிருக்கலாம்.

பாவண்ணன் கதைகள் தமிழ் நாட்டின் அடித்தள மக்கள் வாழ்வின் தருணங்களின் ஊடாக வாழ்க்கையை ஆராய்கின்றன என்ற அளவில் பெரிதும் முக்கியத்துவம் உடையவை. மனிதாபிமானம் என்ற கனவின் ஊடாக அவை வெளிப்படும் விதம் கூர்ந்து பரிசோதிக்கப்பட வேண்டிய தாகும். அவர் படைப்புகளுக்கு தீவிரமான எதிர்வினையளிப்பதன் மூலமே அவற்றை நாம் சுயப்படுத்திக் கொள்ள முடியும்.

---


**நவீன விருட்சம்**
(காலாண்டிதழ்)
ஆசிரியர் : **அழகிய சிங்கர்**
இதழ் ரூ.10, ஆண்டுசந்தா ரூ.35
7, ராகவன் காலனி
மேற்கு மாம்பலம்
சென்னை -600 033

**இலக்கு**
(காலாண்டிதழ்)
ஆசிரியர் : **தேவகாந்தன்**
6, டா. ராதாகிருஷ்ணன் நகர்
சூளைமேடு,
சென்னை -600 094

**கல்வெட்டு**
(திங்கள் இதழ்)
ஆசிரியர் : **முகவை முனியாண்டி**
விலை ரூ.5
924ஏ, 29 வது வீதி
பக்தவச்சலம் நகர்
வியாசர்பாடி
சென்னை -600 039

**தீவட்டி**
(மாத இதழ்)
ஆசிரியர் : **அசுரன்**
விலை : ரூ.3
விடியல் இல்லம்
ஆதள விளை
வெள்ளமடம் -629 305

காலச்சுவடுப் பதிப்பகம்
அடுத்துவரும் வெளியீடுகள்

***ஜி. நாகராஜன் படைப்புகள்***
தொகுப்பாசிரியர் : **சி. மோகன்**

***அன்னை இட்ட தீ***
தொகுப்பாசிரியர் :
**அ.இரா. வேங்கடாசலபதி**

***காற்றில் கலந்த பேரோசை***
சுந்தர ராமசாமியின் கட்டுரைகள்

**விரிவும் ஆழமும் தேடி**
சுந்தர ராமசாமியின்
நேர்காணல் கேள்வி, பதில்,
புத்தகவிமர்சனம்
முதலியன.

**151, கே.பி. ரோடு,**
**நாகர்கோவில் -629 001**

**கலை சொல்லி**
(எண் வழிச் சிற்றிதழ்)
ஆசிரியர் : **கி. ராஜநாராயணன்**
நன்கொடை ரூ.15
நெ.1.21-ஆவது தெரு,
அவ்வை நகர்
புதுச்சேரி -605 008
ஆலோசனைக்குழு
முனைவர்.**இரா.கிருஷ்ணமூர்த்தி**
முனைவர்.**க. பஞ்சாங்கம்.**

padippakam






படிப்பகம்

padippakam

# சிம்மக் குரலோனுக்கு ஒரு அஞ்சலி

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் கவிஞர் சேவற்கொடியோனைத் தமிழ் வளர்ந்த மதுரையில் சந்தித்தேன். அன்று விழுந்த நட்பு விதை செடியாகி கோவையில் பூத்துக் குலுங்கியது.

சதங்கையின் இலக்கியத் தரத்திற்கு ஆலோசனை வழங்கிய ஆன்மீகவாதி –

கோவையில் சந்திக்கும் போதெல்லாம், சொந்த அலுவல்களை ஒதுக்கிவிட்டு என்னோடு இனிக்க இனிக்கப் பேசிய பட்டி மண்டப சிம்மக்குரலோன் –

கௌரவ ஆசிரியராக இருந்து நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு வலுவூட்டிய கவிஞர் திலகம் –

சென்ற டிசம்பர் திங்களில் மாபாவி காலன் அவர் உயிரைப் பறித்துக் கொண்டு நம்மையெல்லாம் ஆழாத்துயரில் மூழ்கடித்துவிட்டான்.

சிம்மக் குரலோனைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். அவர் பெருமை பற்றி சதங்கைக்கு வந்த பல கடிதங்களில் ஒன்று இதோ.

**வனமாலிகை**

'சேவற்கொடியோன்' கம்பீரம் மிக்க தோற்றம்; பார்க்க சற்று பயப்படுத்தும் மீசை, குரலில் 'அவ்வளவு கனம்' எவரும் எதிர்பார்த்திராத ஒன்று. பழக நேர்ந்தால் கனிவு, யதார்த்தம், எளிமை, பரிவு . . . . இன்னும் . . . இப்படி நிறையச் சொல்லலாம்.

இப்படியான மனிதத் தன்மை நிறைந்த மனிதர்தான் கவிஞர் சே. சேவற்கொடியோன்.

'ஓர் அவசரத் திருத்தம்' என்ற எனது புதுக்கவிதைத் தொகுப்புக்க முன்னுரை ஒன்று கேட்டுப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒரு அக்டோபர் 2-காந்தி ஜெயந்தி விழாவுக்காக புன்செய்ப்புளியம்பட்டி சர்வோதயசங்கம் நடத்திய பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு நடுவராய் வீற்றிருந்த காட்சிதான் அவரை முதன்முதலாக நான் பார்க்க நேர்ந்தது.

தங்கு தடையின்றி 'கமா' குறிகள் இல்லாத நீண்ட வாக்கியம் போல, சீரான பேச்சு. ஆழமாக, அழுத்தமாக தமது மொழி ஆற்றலை வெறிப்படுத் திய பேச்சு நீண்டது . . . நிகழ்ச்சி முடிந்ததும் தொகுப்புக்கான முன்னுரை வேண்டும் என கேட்டேன். கோவையில் தன்னை சந்திக்கும்படி கூறி முகவரி அட்டையை தந்தார்.

சில வாரங்களுக்குப்பின் கையெழுத்துப் பிரதியுடன் நேரில் பார்க்க சென்றேன்.

சற்றே புழைய கட்டிடம். மரப்பலகையில் மாடிப்படி. அங்கு ஒரு அறை.

"வாங்க . . . உள்ள வாங்க . . . உட்காருங்க" என்றார்.

"நான் ரத்தினசாமி. புளியம்பட்டியில் ஸ்கூல் டீச்சர்" என்றேன்.

"தெரியும். பட்டிமண்டபத்துக்கு வந்தபோது பார்த்திருக்கிறேன். கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை கேட்டீங்க இல்ல . . . . ." என்றேன்.

"ஆம்" என்றேன்.

முன்னுரைக்காக மட்டும் நான் அவரைச் சந்திக்கச் சென்றது பல முறைகள்.

ஆனாலும் எனக்கு வருத்தம் இல்லை.

"உங்க பகுதியில் இளைஞர்கள் என்ன தொழில் செய்யறாங்க.



படிப்பகம்

padippakam

அவர்களுக்கு ஏற்படற பிரச்சனையைப் புரிந்து அதப்பற்றியெல்லாம் கவிதையில கொண்டு வரலாமே ரத்னசாமி" என்றார்.

யதார்த்தமாக எனது கவிதைகளைப் பற்றி என்னிடம் பேசினார்.

"அடுத்த தொகுப்பில் வித்தியாசம் இருக்கனும்-னு மனசில பதிய வச்சுக் குங்க" என்றார்.

"ஒரு மலையாளத்துக் கவிஞன் நம்ம கோயில்ல பூவிக்கிற பெண்ணைப் பற்றி எழுதியிருக்கான் பாருங்க" என்ற தனது மொழிபெயர்ப்புக் கவிதையைக் காட்டினார்.

"எம் மகனுக்கு இந்த பெரிய மார்பில் பால் குடுத்து வளர்த்தேனாக்கும்" என்று மலையாளத்துப் பெண்டிர் பெருமிதமாகக் கூறுவார்கள். நாம் மார்பை எவ்வளவு கொச்சையாகப் பார்க்கிறோம், படம் போடுகிறோம் ...." என்று தனது வேதனையை வெளிப்படுத்தினார்.

"நல்ல புத்தகங்கள் நிறையப் படிக்கனும்; மனுசங்களை புரிஞ்சுக் கனும்; அப்புறம் எழுதனும்" என்றார்.

மாதத்தில் பல நாட்கள் அவருக்கு நிகழ்ச்சிகள் இருந்துகொண்டே இருக்கும்.

காரமடை, தொண்டாமுத்தூர் பகுதி கன்னடமக்கள் மீது தனக்கு ஒரு தனி பிரியம் உண்டு என்று சொல்லியுள்ளார்.

மலையாள அமைப்பின் சார்பில் தனக்கு கெளரவம் தந்து பாராட்டியிருந் ததை மகிழ்வுடன் சொல்வார்.

ஒருமுறை மழையில் நனைந்தபடி சென்றிருந்தேன். திரும்பும்போது குடையுடன்தான் போகனும் என வற்புறுத்தித் தந்து அனுப்பினார்.

எனது புத்தக வெளியீட்டு விழாவுக்கு வந்து கெளரவம் தந்தார். என் மனைவி உடல்நலம் சரியில்லாது ஒரு மாத காலம் கோவையில் தனியார் மருத்துவ மனையில் இருந்த சமயம் வந்து பார்த்து அறுவை சிகிச்சை விவரம் எல்லாம் கேட்டு ஆறுதலும் ஆலோசனைகளும் கூறிச் சென்றார்.

ஆட்டோ டிரைவர், செருப்பு தைக்கும் தொழிலாளி இவர்கள் போன்று சாதாரண, மிகச் சாதாரண மக்கள் மீது அவரது பார்வை பரிவுமிக்கதாய் இருந்தது உண்மை.

தமது அனைத்துப் படைப்பு களையும் ஒரு சேர புத்தகம் ஆக்கணும் என சொன்னபடி இருந்தார். கோவை நகர மக்கள் மீது பெருத்த நம்பிக்கை கொண்டிருந்தார். செல்வந்தர்பால் ஒரு கௌரவம் மிக்க மரியாதையும் அவரிடம் இருந்தது.

ஒவ்வொரு புத்தாண்டு சமயத்திலும் "புத்தாண்டு & பொங்கல் நல்வாழ்த்துக்கள்" அச்சிட்ட கார்டில் அழகிய கையெழுத்துடன் என்னை வந்து சேரும். இந்தப்புத்தாண்டுக்கு வரப்போவதில்லை எனும்போது வருத்தம் தான். ..போன் அழைப்பு மணியாயினும் சரி, நேரில் ஆனாலும் சரி ......" சொல்லுங்க நாந்தான் சேவற்கொடியோன்" என்பார்.

இனி யாரும் அப்படி கணீரென்ற குரலில் தமிழை தடுமாற்றம் இன்றி மேடையில் சொல்லிவிட முடியாது.

என்ன நேர்ந்தது விதிக்கு ..... எதனால் இப்படி இழப்பு எங்களுக் கெல்லாம்?

"எனது கொடி என்றும் தாழ்ந்து போகாது" என்று சொல்லியுள்ளார். இருந்தவரையிலும் அப்படித்தான் இருந்தார். இன்னும்கூட கோவைப் பகுதியில் அவரது குரல் ஒலித்தப்படி தான் இருக்கிறது.

புன்செய்புளியம்பட்டி ஆர். ரத்தினசாமி

## அடுத்த இதழில் . . .

*தொ.மு.சி. ரகுநாதன்*
*சுந்தர ராமசாமி*
*சு. சமுத்திரம்*
*அம்பை*
*சுப்ரபாரதிமணியன்*
*சூத்ரதாலி*
*பொன்னீலன் . . .*



படிப்பகம்

padippakam

# எதிர்வினை

ஒரு சிறிய நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு அருமையான கதை ஒன்றை (வக்கிரம்) படைத்திருக் கிறார் பாவண்ணன். தரமாக இத்தனை கதைகளை இவரால் எப்படித் தொடர்ந்து படைக்க முடிகிறது என்னும் வியப்பைத் தந்து கொண்டிருக்கிறார் பாவண்ணன் அவர்கள்.

தொ.மு.சி. ரகுநாதனின் கட்டுரையில் உள்ள செய்தியின் பொதுமை ஏற்கனவே சுபமங்களாவில் வெளியானதே என்றாலும் புதுமைப்பித்தனைப் பற்றிய சில மோசமான ஐயங்களைப் போக்குவதில் இந்தக் கட்டுரை அழுத்தமாக முனைந்திருப்பது போற்றுதலுக்கு உரியது.

சுப்ரபாரதிமணியனின் கட்டுரை நன்று. தமிழ்க் கட்டுரை இலக்கியத்திற்குப் புது வர்வு தந்து கொண்டிருக்கிறார் ஆர்.பி.எஸ். தமக்கே உரிய இனிய, இலகுவான நடையில் கட்டுரை செய்திருக்கிறார். இத்தகு முயற்சியில் ஆசிரியர் மேன்மேலும் ஈடுபடட்டும்.

தோழர் சு. சமுத்திரம் அவர்களின் கட்டுரையைப் பயின்றபொழுது 'தமிழ் எழுத்தாளப் பெருந்தகைகள் எத்தனை காலம் தான் சாகித்ய அக்காடமியைச் சுற்றி சுற்றி வருவார்களோ, ஞானபீடத்தைக் கோட்டை விட்டுவிட்டு!' என்ற எண்ணம் மேலோங்கியதைத் தவிர்க்க இயல வில்லை. ஞான பீடத்தையும் தமிழ் இலக்கிய முயற்சிகளையும் பற்றி சிந்திக்கும்போது தமிழ் எழுத்தாளர்களின் கேவலமான ஒற்றுமையின்மையும் சோம்பேறித்தனமும் (lethargy) புலனாகின்றன. தரமான பேரெழுத்தாளர் கள், பேரிலக்கியங்கள் இன்றைய தமிழில் இருந்தும், ஞானபீடம் தொடர்ந்து தமிழ் மொழியை உதாசீனப்படுத்தி வருகிறது. இது பற்றி யாருக்கும் சுரணையில்லை இங்கு. புரிந்தும் புரியாமலிருப்பது கவிதைக்கு ஒரு வகை இனம்புரியாத அழகையும் மென்னுணர்வையும் (சமயங்களில்) தரும்தான்! ஆனால் அது புரியாமலே புரிந்து விடக்கூடாது. 'மன ஊனங்கள்' கவிதை வெளிப்படையாகப் புரிகிறது. கல்யாண்ஜியின் கவிதை சூக்குமமாகப் புரிகிறது. 'எடைசுமந்து' என்னும் நாஞ்சில் நாடன் கவிதை புரிந்தும் புரியாமலே போய்விடுகிறது! இவருடைய உரை நடையில் உள்ள கவித்துவம் கவிதையில் இல்லை.

வைதீஸ்வரன் எழுதியிருப்பது கவிதை அல்ல; வேறு ஏதோ ஒன்று!

'எல்லை' ஒரு சிறப்பான குறியீட்டுக் கதையாகத் தோன்றுகிறது. 'பிரமை' என்னும் சிறுகதையின் கரு, பழக்கப்பட்ட ஒன்றுதான் என்றாலும் எழுதியிருக்கம் முறையும் கதைத் திருப்பமும் சுவையும் நயமும் கெழுமியவையாக உள்ளன. சிறந்த கதைகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

மதிப்புரைகள் இரண்டும் அசலான அயனான மதிப்புரைகள். 'இது இப்படித் தான் இருக்க வேண்டும்' என்று ஒப்புக் கொள்ளும் வகையில் சிறப்பாக எழுதப்பெற்றுள்ளன.

சென்னை பா. அமிழ்தன்

தொ.மு.சி. யின் கட்டுரைகளைத் தொடர்ந்து கேட்டு வாங்கி வெளியிடுக. சாகித்திய அகாதெமியின் தவறுகள் களையப்பட வேண்டும்; ஒரு சிலரின் கைப்பாவையாக அந்த அகில இந்திய நிறுவனம் விளங்குமானால், தற்காலத் தமிழ் இலக்கிய வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டதாகவே இருக்கும். இதைச் 'சதங்கை' எழுத்தாளர் களும், வாசகர்களும் விரும்பமாட்டார்கள் என்றே நம்புகிறேன். சமுத்திரத்தின் குரலுடன் இன்னும் பல குரல்கள் சேர்ந்து ஒலித்தால், விரைவில் நல்ல விளைவுகள் ஏற்படக்கூடும். நண்பர் சேவற்கொடியோன் மறைவு, நம் எல்லோருக்கும் பேரிழப்பு ஆகும்; மிக வருந்துகிறேன்.

திருநெல்வேலி - 6 சிவசங்கரன்



படிப்பகம்

padippakam

தேவதேவனின் "அந்தரத்திலே ஓர் இருக்கை" விமர்சனம் கோமாளித்தனமாக உள்ளது. ரசூல் தேவதேவனின் கவிதை களை தீண்டக்கூட தகுதியில்லாதவர்தான் என்பதை நிரூபித்திருக்கிறார். ஜெயமோகன் போன்ற தகுதி வாய்ந்தவர்களிடம் கொடுத்து விமர்சித் திருக்க வேண்டும்.

தூத்துக்குடி முத்துபாண்டி

பாவண்ணனின் "வக்கிரம்" அலிகளின் பரிதாபத்தைத் தோற்றுவிக்காமல் தனிமனித வக்கிரத்தைக் காட்டி பலவீனமாக ஒருத்தி அதைச் சாடுவதைக் காட்டுகிறது. ஆனால் கதை ஏதோ ஒரு பெரிய எதிர்பார்ப்புக்குக் கொண்டு போய் இறுதியில் வெறுமையாக்கி விடுகிறது. கதையின் தளம் பிரமிக்க வைக்கும் வகையில் கட்டப்படுகிறது.

அடுத்து 'பிரமை' நல்லகதை. தனிமனத்தின் ஓட்டங்கள் வெற்றுணர்வு எல்லாம் உந்து சக்தியாகி பிரமையை உண்டாக்கிக் கதை உலகத்தையே நனவுலகமாக ஆக்குவதை நன்கு காட்டி உள்ளார்.

பாரவியின் 'எல்லை' நல்ல கதையாக வந்திருக்க வேண்டியது தவறி விட்டது. சிறந்த குறியீட்டைக் கொண்டிருந்தாலும் இடையில் சில இடங்களில் தொய்வு விழுகிறது. நல்ல முயற்சி.

தமிழ்த் திரைப்பாடல் இசை பற்றிய கட்டுரை ஏமாற்றம். புதிய செய்திகள் இல்லை.

தொ.மு.சியின் பு.பி. பற்றிய கட்டுரை இதழின் மகுடம். அவர் எப்பொழுதும் ஆதாரத்துடன் வாதிடக்கூடியவர் என்ற கருத்தை இக்கட்டுரை மேலும் உறுதிப்படுத்துகிறது.

சுப்ரபாரதிமணியனின் 'கறுப்பு சினிமா' ஒரு நல்ல ஆய்வு. சமுத்திரம் அவர்களின் சாகித்ய அகாடமி பற்றிய கருத்துக்கள் வரவேற்புக்குரியதில்லை. ஆய்வுக்கு உரியன! சில இடங்களில் தன்முனைப்பு அதிகமாக உள்ளதைத் தவிர்த்து இருக்கலாம். இக்கட்டுரையில் மறுபக்கம் தெரிவது மிகவும் அவசியம்! அதையும் வெளியிடுங்கள்! கவிதைகளில் அடையாளங்கள் மகாஊனங்கள் உடனேயும், கல்யாண்ஜி, நாஞ்சில் நாடன் கவிதைகள் மறுவாசிப்பிலும் மனத்தில் ஒண்டிவிடுகின்றன. எதிர்வினையில் பத்திரிகைகளுக்கு (பாரா) இடையில் இடைவெளி அதிகம்.

இதழ் அச்சு அமைப்பு அருமை! தொடர்ந்து தளராத செயல்பாட்டுக்கு பாராட்டுக்கள்.

பாச்சுடர். வளவ. துரையன்
கிருட்டிணாபுரம் எம்.ஏ., பி.எட்,

தொ.மு.சி. எழுதியுள்ள "ஸ்ரீ தேசிகன் பற்றிய உண்மைகள்" ஆதாரபூர்வமாக, விளக்கியுள்ளது வணங்கத்தக்கது. பு.பி. நாம் செய்யும் மரியாதை இத்தொடர் தொடர வேண்டும். சு. சமுத்திரம் சுட்டிக்காட்டிச் சாடுகிற சாகித்திய அகாடமியம், நேஷனல் புக்டிரஸ்ட்டும் தமிழ் வளர்ச்சிக்கு காட்டுகின்ற உரைகல்லாக இருக்காது. அடிவருடிகளின் வெளிப்பாடுகளாக இருப்பது தமிழுக்குக் குறை சேர்ப்பதே. இது களையப்பட வேண்டும். திரை இசை பற்றிய திரு. சொக்கலிங்கம் குறிப்பும் பயனுகுவதே. அவர் இதன் தொடர்ச்சியாக தற்போதைய இசை (ஒலிநாடா வடிவில்) முற்போக்கு, புரட்சி, மொழி, இயக்க) ஒலிநாடா பற்றியும் எழுதினால் சிறப்பாக இருக்கும்.

பொள்ளாச்சி பொள்ளாச்சி நசன்

பாவண்ணனின் வக்கிரம் கல்லுக்கு புடவை கட்டினால் கூட தொட்டு பார்த்து சிலாகிக்கும் காம வெறியர்களை படம் பிடித்திருக்கிறது.

சராசரி வயசாளிகளை ஆயிரம் அர்த்தங்களுடன் விளக்கியது பிரம்மை - நடை கோணி இருந்தது.

"மால்கம் எக்ஸ்" - கறுப்பு சினிமா உண்மைதான். கறுப்பர்களின் இன்னொரு முகம் தெரிந்தது.

padippakam


"எனக்கு கேஸ் கனெக்ஷனே தேவை இல்லை"

MICRO
HOT POINT
KEROSENE TABLE STOVE



அடுப்பறையில் நிவாரணம் தரும் தீச்சுடர்!



இதைக் கேட்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். நான் இவ்வாறு தைரியமாகச் சொல்வேன் ஏனென்றால் என்னிடம் மைக்ரோ ஹாட் பாய்ண்ட் ஸ்டவ் இருக்கிறது என்ற பெருமிதத்தால். ஹாட் பாய்ண்ட் 60% வெப்பத்திறன் கொண்டது. புகை, வாசனை, கரி போன்ற சமாச்சாரங்கள் எதுவும் கிடையாது. பம்ப் செய்யும் போது கையில் கீறல் விழுவது, ஸ்டவ் வெடிப்பது, போன்ற பிரச்சனைகளும் கிடையாது. ஹாட்பாய்ண்ட் எல்பிஜி ஸ்டவ் போன்று வடிவமைப்பு செய்யப்பட்டது, சற்றே விலை கூடியது. இப்போதும்சொல்கிறேன், எனக்கு கேஸ் கனெக்ஷன் தேவையில்லை என்று சொல்வதில் வியப்போதுமில்லையே!

மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்தி
ஒரு கேஸ் ஸ்டவ்வைப் பற்ற வையுங்கள்

*கன்னியாகுமரி மாவட்ட மொத்த விற்பனையாளர் :*

**எஸ்.எம். ஸ்டீல் ஹவுஸ்**

6/38A-A, மெயின் ரோடு, வில்லுக்குறி-629 180.
போன் : (04651) 50121, Resi : 50161. Grams : YESAM. FAX : 04651-50121
கன்னியாகுமரி மாவட்டம்.

*Available in all leading home appliances shops*




படிப்பகம்

padippakam

# சர்வமும் பூர்வமும் சட்டையுரிக்கும் பாம்பும்

'பிராமணன்' ஆகமுடியவில்லை,
அது இங்கே இன்னும்
பிறப்பால் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாலும் ;
ஆகவே 'முற்போக்கு'.

'முற்போக்கு' அறைக்குள்ளும் அதே கூத்தா?
வாங்கடா வெளியே என்று
வந்தாயிற்று 'தலித்' கொட்டாய்க்கு.

கொட்டாய்க்குள்ளும் அது வந்ததுண்டா?
அட, அப்போ பார்த்துக் கிடலாமண்ணே
கொஞ்ச நேரம் நிம்மதியா
இருக்கவிடமாட்டேங்கிறியே என்றவர்
வாடைக் காற்று உடம்புக்கு ஆகாதென்று
தன் கொட்டாய்க்குள் புகுந்து கொண்டார்.

உஸ் உஸ்ஸென்று உறுமி அலைகிறது
காற்றினிலே ஒரு சர்ப்பம்.
வேலியிலே தொங்கிக் கொண்டிருக்கிறது
அதன் பிராமணச் சட்டை.
அதன் அசைவிலும் சிமிட்டலிலும் அதிர்கிறது
யாராலும் எடுத்து அணியமுடியாத அதன் மகத்துவம்

குளித்து முடித்து
தன் முற்போக்குச் சட்டையை எடுக்கத் திரும்பிய
சண்முகனைத் துரத்திற்று, படம் விரித்து
ஜன்னல் கம்பியில் மின்னல்போல் நின்றிருந்த சர்ப்பம்.

கொட்டாய்க்குள் புகுந்து
அங்குள்ளோரையும் அலறியடிக்கச் செய்துவிட்டு
ஒளிரும் கண்களிலும்
நிமிர்ந்து நின்று
தன் இரட்டை நாக்கை நீட்டி இழுத்த
சப்புக் கொட்டலிலும்
வெற்றிகொண்ட கடமைவீரனின்
பெருமிதத்தைக் காட்டிவிட்டு,
வெடுக்கென்று மடங்கி,
விடு விடுவென்று தப்பித்து
சுதர்ம வேகத்துடன்
விரைகிறது அது
தன்னை வழிபடுவோரையும்
தடி எடுத்துக் கொல்ல வருவோரையும்
விட்டு விடு விடு வென்று . . .


படிப்பகம்

padippakam

கண்ணுக்கு மறைந்து
காற்றில் கலந்து
என் உயிர்மெய்யைத் தொட்டு
உலுக்குகிறது அதன் ஸ்பரிசம்.

**தேவதேவன்**

## கூடிமுயங்கப்பெறின் . . .

சாலை ஆரவாரம்
சற்றே ஓய்ந்த முற்பகல்
சாமி படங்கள்,
ஜன்னல்
கதவு
கணவன் கோபமாய்க்
கணவன் கோபமாய்க்
கழற்றியெறிந்த
மூலையலங்கரிக்கும்
கால்ச்சராய்
யாவும்
தூங்கிவிட்ட குழந்தையுடன்
அமைதியாய் . . .

தன் தலைமுறைக்குப்
பழக்கமில்லாத
தாலாட்டுச் சத்தம்
ஏதோவொரு
சினிமாப்பாட்டாய்
மாறிவிட்டதை நினைத்து
முலுவலிப்போடு
அடுப்புச்சோலிக்கு நடுவே
அடுக்களையிலிருந்தே
எட்டிப்பார்ப்பாள்
தொட்டில் சீராக
ஆடுகிறதாவென்று

கனத்த கவிதைப் புத்தகத்தை
இப்போதம்
மனசின்றித் திறந்தபோது
வரிகளைப்படியவிடாது
மூளையைத் தைத்தது
செத்து-பக்கங்களொன்றில்
ஒட்டியிருந்த
கொசு-

**கலாப்ரியா**

## சிலேடை

நாற்றம் என்பதிலே
நாற்றம் சிறிதுமில்லை
நறுமணம்
பொதிந்து கிடக்கிறது
நன்மை என்பதிலே
நன்மை சிறிதும் இல்லை,
நச்சுத் தன்மை
மறைந்துள்ளது
மாற்றம் என்பதிலே
மாற்றம் சிறிதும் இல்லை
மயக்கொழில் மண்டிக்
கிடக்கிறது. மனிதன்
குறைபாடா. . .?
இயற்கைப் பேராற்றலின் மதியிலாகச்
செயலின் கறைபாடா. . . ?

**பா. அமிழ்தன்**

அடிநாளைய
அனுபவங்களிலிருந்து . . .
வெளி நோக்கி
நீள்கிறது கவிதை.
நெஞ்சின்
அனுக்க மனிதர்களோடும்
முகம் மறந்த மனிதர்களின்
எஞ்சிய நினைவுகளோடும்
சுடலைமாடன் தெருவும்
பிச்சை பிள்ளை சாவடியும்
இனி . . .
மாம்பலமும் கூட . . .
(கல்யாண்ஜிக்கு)

**பாட்டாளி**


**போர்வை**
(நாவல்)
**வனமாலிகை**
விலை ரூ.25
கிருபா பதிப்பகம்
53/2 பாண்டியன் தெரு,
கவிமணி நகர்,
நாகர்கோவில் 629 002




படிப்பகம்

padippakam

## நலம் . . . . விசாரித்திடும் ரணம்

அன்பே
நலம்தானே . . .

உன்அன்பின் பரிபூரணத்துவத்தை
உணர்ந்தவனின்
உன்மன விசாரிப்பு
இது.

ஒவ்வொருமுறையும்
உன் பெயரை உச்சரிக்கை நேர்கையில்
எழுதும் சமயங்களில்
பழிடும் சிற்பியின் கவனத்தோடு
கையாள்கிறேன்.

அவை வீணாகுதலுக்குரியது
அல்ல. . .

அன்பே
நலம்தானே . . .
நான் நலம்.
இன்னமும் உள்மனதில்
ஆறாத ரணங்களுடன் . . .

**ஆர். ரத்தினசாமி.**

## தகுதி

அடுக்கடுக்காய்
அலங்கரிப்பாய்
முன்னோர்கள்
சேகரிப்பாய்
தொடுவாரின்றி
இருந்த பலவற்றை
குலைக்க மடைமின்றி
நேற்று வந்த
துண்டுதான்
அச்சடிப்பில்
எந்த நிறம்
சொந்த நிறம்?
நிறமாறி போன
காகிதத்தில்
எழுத்துக்கள்
இடம் மாற
பெற்ற இடம்
புதுசா. . . பழசா?

**கோவி. பரஞ்ஜோதி**

## சுடும் உணர்வு

ரயில்வே ஸ்டேஷனில்
மதிய வேளையில்
மோக முற்றி கோபத்தில்
உன் முலைகளென
முட்டைகளின் முனைகளை கசக்கி
பின் கக்கூஸில் எந்திரயம் வேஸ்டாக்கி திரும்புகையில்
ஆடு மேய்ப்பவன் டிராக்கில் ஆடுகளுடன்
முன்னே பின்னே கவனித்துக் கடக்கையில்
புட்டத்தை ஆட்டி ஆட்டி
தூரத்தில் நகரும் கூட்ஸ் வண்டி
டிபன் பாக்ஸ் தயிர்சாதம் புளிப்பாள்
உள் இறங்க குறி ஈரமுணர்த்தும்
இன்னும்

**எஸ். செந்தில்குமார்**


படிப்பகம்

padippakam

## நூலகத்திலோர் புத்தகம்

முன்னெவராலும் பிரிக்கப்படாமல்
தலைமுறைகளின் அச்சம் சுமந்து
என்னிடம் கொண்டு சேர்ப்பித்தாய்
என் நூலாக மூலையில்
தூசி படிந்தோர் புத்தகம்

புத்தகங்கள் கலைத்தடுக்கப்படுகையில்
இருளின் கருத்த விழிகளால்
அதுவென் முதுகு துளைக்கும்
விழிப்புலன் தீண்டலுக்கேங்கி
பக்கங்கள்தோறும் அலைக்கழியுமோ
சொற்களென-
புணர்ச்சிக்குத் தயாரான
ஆடைக்குள் பொதிந்து வைக்கப்பட்ட
மனிதக் குறியென-
தோற்றங்கொள்ளும் சிலபொழுதில்.

புத்தகம் திறக்கையில்
நொறுங்கிச் சிறவிருக்கும்
நூற்றாண்டு மௌனங்காத்து நான் -
விலங்கிடப்பட்ட கைகால்களுடன்,
அறுபட்ட நாகூடனும்.

வத்சலகுமாரன்

## போனவனுக்கு . . .

மூடிய விழிகளுக்குள்
முட்டி நிற்கிறது உன்முகம்

நெஞ்சவெளியெங்கும்
உன் குரலதிரும்

என்னவானது உனக்கு
வந்ததா என் நினைவு
கயிற்றின் கடைசி
முடிச்சை இறுக்கும்போது
அல்லது
எட்டி உதைத்திருப்பாயே
ஏறிநின்ற நாற்காலியை . . .
அப்போதாவது.
போடா போ
வேறென்ன சொல்ல
விரும்பிச் செத்தவனிடம்

எஸ். அப்பாத்துரை

## காத்திருப்பு!

யாரும் அறியாதப்படாத
இருளின் கௌரவத்திற்காய்
காத்திருப்பு.

எந்த சலனமும் இல்லாத
அதன் சிரத்தில்
உள்ளங்கைகளை விரித்து
அள்ளிக் கொள்ளவும் அலை பாய்கிறது.

முன் காயத்தின் முடிச்சுகளிலிருந்தும்
சுதந்திரம் பேசும் தூக்கணாங் குருவிகளின் முழக்கங்களை
களவாடிக் கொண்டும்-

அலையடிக்கார அலை மீதும்
லகுவாய் கடந்தேனும்



படிப்பகம்

padippakam

செத்த மரக்கட்டைகளின் உயர்வை
மனசுக்குள் போர்த்தியும்

செருப்புகள் தேய்த்த சிராய்ப்புகளிலிருந்து
சூரியன் சுட்ட வெப்பத்திலிருந்தும்
என்றோ வரும் மலையின் துளிர்ப்பிற்காய்
விழித்துக் கிடக்கும், புல்லின் உயிரை
குருதியில் நனைத்தும்
ஒரு காத்திருப்பு-

**கே.வி. ராஜேந்திரன்**

## கடைசி மனிதன்

ரயில்கள் வரும் போகும்;
சக்கரங்களில் பொறி பறக்கும்.
என்னிருப்பை கடக்குமவையேதும் அறியவில்லை.
உயிர் குறித்த சிந்தனை அறிந்திருக்கவில்லை.
தலை கொடுத்து உடல் சிதறி
இரத்தம் தெறிக்கும் நாளிலாவது ஒரு கணம் நிற்குமா?
கடைசிப் பெட்டியில் வெள்ளையுடையணிந்த
மனிதனின் கையில்
பச்சைக் கொடி அசைகிறது.

**சிபிச் செல்வன்**

## என் ஆன்மாவின் ராகங்களே . . .

'ஓ' என்ற இனிய ஸ்ருதியுடன்
கலுங்குத் தண்ணீர் அருவியாய்க் கொட்ட
கெண்டைகளும் உழுவைகளும் சள்ளைகளும்
ஏறிப்பாய,
தோற்க,
தோற்று-
பதுக்கி வைத்திருந்த தூரிகளுள்ளும்
பலதரக் கச்சால்கருடும் பாய்ந்து அலமற . . .
முள் குண்டலமணிந்த ஊமத்தை
நீல மணிகள் மின்னம் தும்பை
பொன் தோய்த்தப் பூவிதழ்க் குருக்கத்து
ஊசித் தாடி முளைத்த நீர்முள்ளி . . .
மௌமாய்க் கரையில் காட்சி நல்க. . .

padippakam

# தேவதேவன் கடிதம்

சென்ற சதங்கை இதழ் 10ல் 'அந்தரத்திலே ஓர் இருக்கை' கவிதைத் தொகுதி மீது எழுதியுள்ள மதிப்புரை குறித்து நான் இங்கே சிலவற்றைக் குறிக்கவேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன். எனது மொழிநடைபற்றி, 'உயர்சாதிக் குழுக்களின் 'சமஸ்கிருதம்' என்று குறைவுட்டுக் கொள்கிறவர், 'அந்தரத்திலே ஓர் இருக்கை'யை– ஒரு இருக்கை என்றும் 'மரம் தனக்குத் தானே ஓர் ஆபரணம்' . . . என்று நான் எழுதியுள்ளதை' ... ஒரு மாலை' என்றும் மொழிவிஷயத்தில் அலட்சியமாக இருப்பது ஒரு முரண் ஆகும். 'வரலாற்றின் வளர்ச்சியில் நிராகரிக்கப்பட்ட உயர்சாதி குழுக்களின் சமஸ்கிருத்தை 'சர்வாம்சம்' 'பரிபூரணம்' 'சஞ்சாரம்' என்று தனது கட்டுரையின் இரண்டாவது பாராவில் தவிர்க்க முடியக்கூடிய இடத்திலும் எழுதியிருப்பதும் ஒரு முரண்.

''கடவுளையே துரத்தியடித்த மனிதப் படைப்பு தொழிலின் வீர்யம் பற்றியும் ஒரு கவிதை பேசுகிறது'' என்றதைப் படித்ததும் திடுக்கிட்டேன். அது எந்தக் கவிதை? முதலிரவுத் தம்பதிகளைப் பார்த்து, தன் படைப்பு துதிக்கப்படுவது கண்டு திருப்தியுடன் தன் பட்டறைக்குள் நுழைந்த கடவுள் அங்கே படைப்புத் தொழில் தானே இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டவர் அன்று முதல் காணாமல் போகிறார் என்பது கவிதையிலுள்ள கதை. கடவுள் கருத்தாக்கத்தைத் தற்கொலைப் பாடுகிற கவிதை இது. இதே போலவே 'சர்வமும் பூர்வமும் சட்டையுரிக்கும் பாம்பும்' என்ற கவிதையில் கும்பல்தனத்துள் அகப்படாத வீர்யமிக்க வாழ்வைக் குறிக்கிற சர்ப்பம் இவருக்கு மிக இழிவான பிராமண சர்ப்பமாத் தென்படுகிறது. 'தனிமரம்' என்ற கவிதையில் தீட்டப்பட்டுள்ள (தனி) மனிதனின் மகத்துவத்தைப் பற்றிய உள்ளார்ந்த சித்திரம் ஏகாந்தம் உயிர்ப்பு என்று மட்டுமே இவருக்குப் பிடிபடுகிறது.

இயற்கை, வாழ்வின் தரிசனம், மனித தரிசனம் போன்றவற்றை என் கவிதானுபவங்கள் மூலம் கூட இவரால் கிரகிக்க முடியவில்லை. 'லயம்' இதழில் தேவதேவனின் 'நக்ஷத்ரமீன்' தொகுப்பை விமர்சித்த சத்யாவிடமிருந்து இவர் அறிந்து கொண்டதே அத்வைதம் என்று தெரிகிறது. மொழிநிலையில் உள்ளதைக் கூட வாசிக்க தெரியாத இவர் பன்முகத்தன்மை பற்றிப் பேசுவதும் நான் / நீ எதிர்வுகள் உள்ளன என்பதும் (நான் / நீ எதிர்வுகளால் என் கவிதை எப்படி மோசமாகிவிட்டது என்று சொன்னால் தான் அது விமர்சனமாகும்) வேடிக்கைகளாகும்.

'சாக்குமூட்டையில் கட்டப்பட்டுள்ள பிணத்துண்டுகள்' என்று எழுதியுள்ளதையும் தைத்கடுக்காய் வரும் பொருத்தமற்ற வசவுகளையும் வாசிக்கையில் தான் விசயம் ஒரு உளவியல் பிரச்னை என்பது தெளிவாகிறது. அறியாமையும் குழுமனப்பான்மையும் தமிழ்ச் சூழலைப் பீடித்துள்ள நோய்கள் என்பதை இந்த இடத்தில் சொல்லிக் கொண்டு தொடர்கிறேன்.

'சர்வமும் பூர்வமும் சட்டையுரிக்கும் பாம்பும்' என்ற அந்தக்



படிப்பகம்

padippakam

கவிதை இவ்விதழில் வாசகர்களின் பார்வைக்காக மறுபிரசுரம் செய்ய வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

*(61-ஆம் பக்கத்தில் வெளியாகி யுள்ளது. - ஆசிரியர்)*

'பிராமணன்' ஆகமுடியவில்லை. அது இங்கே இன்னும் (பிறப்பால் தீர் மானிக்கப்பட்டுக் கொண்டிருப்ப தாலும்) ஆகவே 'முற்போக்கு' என்ற அந்தக் கவிதையின் தொடக்கவரிகள் சாதியவாதிகளை விளாசுவது மட்டு மின்றி முற்போக்காளர்களையும் விமர்சிக்கிறது. 'பிராமணம்' உயர்ந்தது என்ற உரைநடை அர்த்தத்தையும் தாண்டி குறியீடாக, கவிதையாக உயர்ந்து - உயர்ந்தது ஒன்றின் குறியீடாகிறது. இதைத்தான் கேள்விக்குள்ளாக்குவார்கள் கவிதையறியாதவர்கள் என நினைத் திருந்தேன். ஆனால் நிலைமை ரொம்பப் பரிதாபம். கவிதையில் பிராமணன், முற்போக்கு, தலித் ஆகிய எல்லாக் குழுவுக்குள்ளும் பிறப்பெடுக்கிற பிராமணியத்தை 'இங்கேயும் அதே கூத்தா?' 'இங்கேயும் அது வந்ததுண்டா?' என்ற வரிகள் குத்துகின்றன. எச்சரிக்கின்றன. கும்பல்தனத்துள் அகப்படாத வீரிய மிக்க வாழ்வோ அஞ்சுபவர்களின் பிரதிமையாக, சர்ப்பமாக எல்லோரி டமிருந்தும் தப்பித்து ஓடுகிறது. அது கூட தனது 'ஒஸ்தி' என்கிற பிராமணச் சட்டையை நிராகரித்து உரித்துக் கொண்டேயிருக்கிறது. அந்த மகத்துவம் பொருந்திய சட்டையைக் கூட 'யாராலும் எடுத்து அணிந்து கொள்ள முடியாதது' என்றும் எழுதப்பட்டுள்ளது. கவிதைமீது லேசான பரிச்சயமுள்ள வாசக னுக்குக் கூட முதல் வாசிப்பிலேயே அனுபவமாகி விடுகிற கவிதை. விஷயம் இப்படியிருக்க 'சட்டையுரித்த பிராமணச் சர்ப்பம்' 'கொடூரம் செய்கிற பிராமணச் சர்ப்பம்' வழிபாட்டுக்கும்' புனிதத்திற்கும் மட் டுமே உரியதாக' தேவதேவன் எழுதி யிருக்கிறதாகவும் 'கேலிக்கூத்தாகி இருக்கிறதாகவும் எழுதுகிறார்.

பிராமணன் ஆக முடியவில்லை

...................

ஆகவே 'முற்போக்கு'

என்பது எனது கவிதை வரி. இதன் ஆழ்ந்த பொருட்செறிவு ஒரு வாழ்வனுபவம். இதற்கு நேரான முறையில் பதிலளிக்க இயலாததால் விமர்சகர் கத்தியையும் சாக்கையும் தூக்கியுள்ளார். குழுவினால் ஏற்படும் எதிர்மறையான விஷயங்கள் பயங்கரமானவை. நேர்மறையான அம்சங்களுக்காக மட்டுமே ஒருவன் ஒரு குழுவை நேசிக்கவோ அதில் இணையவோ முடியும். 'தனிமரம்' கவிதையில் நான் சித்தரித்துள்ள மனிதனுக்கு நேர்மாறானவனே குழு மனிதன். குழுவைச் சார்ந்தவுடன் இவனுக்குக் கிடைத்துவிடுகிற நிம் மதியும் ஆசுவாசமும் இவனது உணர்வுகளை மழுங்கடித்து விடுகிறது. குழுவின் பெருமையும் ஞானச் செல்வங்களும் குழுவைச் சார்ந்த தனாலேயே இவனும் அறிவான் என்ற அர்த்தத்தில் ஒரு போலிமை உருவாகிறது. இதன் உச்சவளர்ச்சி தங்கள் கருத்துக்களுக்கு எதிரானவர் களை ஒழித்துக் கட்டும் கொலை பாதகச் செயலில் தான் கொண்டு விடும் எனபது அகவியல் விஞ் ஞானம். கவிதையை வாசிக்கக்கூடத் தெரியாதவர் கவிதை விமர்சனத்திற்கு வருவது துணிச்சலான காரியம்தான். குழு மனிதர்களுக்கே உரிய துணிச்சல் இது.

**தேவதேவன்**



படிப்பகம்

padippakam




**கண் சுழற்றும் பறவைகள்** (கவிதைகள்)

ஆ. இளம்பாரதி, மையம் வெளியீடு, 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.20/-

**பொற்கணம்** (கவிதைகள்)

ஆ. அமிர்தராஜ், வெளியீடு விருட்சம், 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.20/-

**கவிதைக்காக** (கட்டுரைகள் மதிப்புரைகள்)

ஞானகூத்தன், விருட்சம் வெளியீடு, 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.50/-

**நானும் – நானும்** (கவிதைகள்)

ஆ. காளிதாஸ், மையம் வெளியீடு, 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.20/-

**ஒற்றை உலகம்** (கவிதைகள்)

எம். யுவன், மையம் வெளியீடு, 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.20/-

**வானிலே ஒரு பள்ளத்தாக்கு**
(கவிதைகள்)

ஷாஆ, மையம் வெளியீடு, 7 ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.30/-

**காமம் செப்பாது** (சிறுகதைகள்)

பொன்னீலன், ஜீவா பதிப்பகம், 36 ஈசானி மூர்த்திகோயில் தெரு, சென்னை - 600 019. விலை ரூ.30/-

**மண் புதிது** (பயணக்கட்டுரை)

சுப்ரபாரதி மணியன், காவ்யா, 16 - 17th E Cross, Indira Nagar, 11 Stage, Bangalore 560 038. Rs. 30/-


**கனவு**

(காலாண்டிதழ்)

8/707C பாண்டியன் நகர்,

கனவு 28

திருப்பூர் - 641 602

நவீனத்துவமும், பின் நவீனத்துவமும் - ஞானி
மார்க்சியமும், தலித்தியமும் - கருணா மனோகரன்
அடித்தட்டு மக்களின் பார்வை விமர்சனம் - அ. மார்ஸ்
மௌனத்தை நோக்கிய நகர்வு - அபி
லண்டன் திரைப்படவிழா - யமுனா ரஜேந்திரன்
இருவர் - ஒரு நண்பனின் சோகப் பாடல்
அசல் : மிஸஸ் டவுட்பயர், நகல் : கமலஹாசன்
காதல்கோட்டை கமலி அல்லது சில்க் சுமிதா
திருவனந்தபுரம் திரைப்படவிழா - எம். பாலசுப்பிரமணியன்

*மற்றும் கவிதைகள், சிறுகதைகள்*

***ஆண்டு சந்தா ரூ. 35***




படிப்பகம்

padippakam

*With Best Compliments from ....*

**HOTEL MASS PVT. LTD.**
**MASS CLASSIQUE BEACH RESORT**

*For Reservations :*

**HOTEL MASS Pvt. Ltd.,**
Near New Bus Stand,
Pondicherry - 605 001.
Ph : 0413-37221 (9 lines)
Fax : 33654.



படிப்பகம்

padippakam

# செருப்பு

தெலுங்கு மூலம் :
மெத்திபோடல சுப்பராமய்யா
தமிழில் : சரஸ்வதி ராம்னாத்

"சார்! கல்கத்தாவில் இத்தனை சுகமான காற்று கிடைக்காது என நினைக்கிறேன்."

திரும்பிப் பார்க்காமாலேயே நான் பதிலளித்தேன்.

"தலைகீழாய் நின்று தவம் செய்தாலும் கூட கிடைக்காது"

இடம் : கிருஷ்ணா நதிக்கரை. நேரம் : மாலை ஐந்தரை மணி.

கண்ணேதிரே கங்குகரையில்லாத நீர் பிரவாகம். தொலைவில் பாலத்தின் மீது ரயில் ஓடிக் கொண்டிருந்தன.

அவர் வந்து என்னருகில் உட்கார்ந்தார். நான் அவரை உற்றுப் பார்த்தேன் . . . அவர் அருகில் ஒரு சிறுமியும் வந்தமர்ந்து கொண்டாள். ஆறு ஏழு வயதிருக்கும்.

இரண்டு நாட்களாய் இது நடக்கிறது. இந்த கனவானும் அந்தச் சிறுமியும் என்னை விடுவதில்லை. என் பின்னாலேயே தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிருஷ்ணாநதியின் அணைக்கு கீழே அதை ஒட்டியுள்ள சத்திரத்தில் கடந்த நாலைந்து நாட்களாக, ஈமச்சடங்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. தர்மசத்திரம் விசாலமானது. அப்பெரிய சத்திரத்திலும் எல்லா இடங்களிலும் உறவினர்களின் பேச்சும், இரைச்சலும் சத்தமும் விரவி நிற்கிறது. இறந்து போனவர் என் உறவினர் . தூரத்து உறவு. ஐம்பது வயதுதான். கடைசி மூச்சு வரை இருகையாலும் நிறைய சம்பாதித்தார் என்று கேள்விப்பட்டேன். வீடு வாசல், நிலபுலன்கள், ப்ளாட் மற்றுமல்ல, ஷேர், மற்றும் பல தொழில்கள், வியாபாரங்களில் சம்பாதித்துக் கொண்டே இருந்தவர் திடீரென போய்விட்டார். சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தாராம். அவ்வளவ ,தான் உயிர் பறந்தோடி விட்டது. அவரைப் பற்றி என் மனதில் அப்படியொன்றும் நல்ல அபிப்பிராயமில்லை. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் வராமலிருப்பது ரொம்பவும் பெரிய தவறு என்று என் மனைவி கூச்சல் போட்டு இங்கு இழுத்துக் கொண்டு வந்திருக்கிறாள். அவர்களில் சிலரை எனக்கு யாரென்று கூடத் தெரியாது. முகத்தைக் கூட கண்டதில்லை. என் மனைவி இருக்கிறாளே, வந்திறங்கியதுமே, யார் எவரென்று விசாரித்துக் கொண்டு, அவர்களோடு ஒண்டிக் கொண்டு விட்டாள். அத்தனை பெரிய சத்திரம், குழந்தைகள், பெட்டி படுக்கைகளினால் சின்னதாகி விட்டது என்று சொல்லலாம். பெரிய ஹாலில், வராந்தாவில், அறைகளில், அங்கே இங்கேயென்று சாமான்களை வைத்துக் கொண்டு எல்லோரும் நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.

இறந்தவர் பெரிய பணக்காரராக இருந்ததால், வெகுதூர சொந்தம் பந்தம் உள்ளவர்கள் கூட எங்கெங்கிருந்தோ வந்து குதித்திருந்தனர். அவர்களில் ஒரு சிலரை எனக்கு அடையாளம் கூட தெரியவில்லை. வந்திருந்தவர்களில் பலரும் ஒருவரையொருவர் நெடுநாட்களுக்குப் பிறகு சந்தித்திருந்தனர். ஒரே சத்தம். இரைச்சல்தான் என் மனைவி நின்ற இடத்தில் நிற்கவில்லை. சமையலறை



படிப்பகம்

padippakam

யிலிருந்து குளியலறை வரை எங்கும் வியாபித்திருந்தாள். எல்லா வேலைகளிலும் உதவி செய்து கொண்டிருந்தாள். குளியல், காப்பி கொடுப்பது இவ்விரண்டைத் தவிர என்னை முற்றிலும் மறந்து விட்டிருந்தாள். இத்தனை பேருக்கு நடுவில் நான் யாருக்கும் அறிமுகமற்றவன் போல் நின்றேன். ராமேசம் இருந்தான். ஆனால் அவனுக்கு என்னுடன் பேச அவகாசம் ஏது? சாமான்களை வாங்கிக் கொண்டு வரவும், ஈமச்சடங்குகளைச் செய்பவர்களுடன் போக வரவும் அவனுக்கு நேரம் சரியாக இருந்தது. ஒழிவே இல்லை.

இத்தனை பேருக்கு நடுவில் இந்த மனிதர் என்னைத்தான் பொறுக்கி எடுத்திருப்பார் போல் தோன்றியது. அவர் அங்கு வந்த நளிலிருந்து என்னிடம் தான் விசாரித்தார். அன்றிலிருந்து என்னுடன் அன்பாகப் பேசிப் பழகுகிறார். எப்பொழுதும் என்னுடனேயே இருக்கிறார். சாப்பாட்டுப் பந்தியில் கூட என்னருகில் தான் உட்காருகிறார். அவரை அடுத்து அவருடைய பெண் இந்த சிறுமி.

இப்பொழுது ஆற்றின் படிக்கட்டில் என்னருகில் அமர்ந்திருந்தவரை நான் உற்றுப் பார்த்தேன். அவரோ எதிரே அகண்டமாய் பரவி நின்ற நீர்ப்பெருக்கைப் பார்த்தவண்ணமிருந்தார். அந்த சிறுமி எப்பொழுதும் போல் அச்சம் விழிகளில் தேங்கி நிற்க உட்கார்ந்திருந்தாள். அவருடைய காலிலிருந்த தேய்ந்து அறுந்து கிடந்த செருப்பு அவரது வறுமையைக் பறைசாற்றிக் கொண்டிருந்தது. அவருக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கலாம். நரைத்த அடர்த்தியில்லாத தலைமுடி, ஒட்டிய கன்னங்கள், கொஞ்சம் வளர்ந்திருந்த வெள்ளைத் தாடி, மீசை, தடித்த கண்ணாடி. எதிர் திசையில் அஸ்தமித்துக் கொண்டிருந்த ஆதவனின் சிவந்த ஒளிப்பிழம்பு அவரது கண்ணாடியில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

நாக்கு நுனிவரை வந்து விட்ட கேள்வியை நான் அடக்கிக் கொண்டேன். இறந்து போனவர் அவருக்கு எந்த வகையில் உறவினர் என்று கேட்க நினைத்திருந்தேன். இதே கேள்வியை அவர் என்னைத் திருப்பிக் கேட்டுவிட்டால் பதில் கூறி விளக்குவது கடினமாகி விடும். அந்த உறவு கிறவெல்லாம் எனக்கெங்கே நினைவிருந்தது? ஏனோ திடீரென அவர் நீண்ட பெருமூச்செறிந்தார். அவர் அருகில் அமர்ந்திருந்த சிறுமி தலையைக் கோதி விட்டு கொண்டு, ''அப்பா! வாப்பா! போகலாம்'' என்றாள்.

''போகலாம்மா. . . போகலாம்...'' என்றார் அவர்.

மறுநாள் பதிமூன்றாம் நாள். அன்றைய பகல் சாப்பாட்டிற்குப் பிறகு உறவினர்கள் யாவரும் புறப்பட்டு விடுவார்கள். அன்றோடு முடிந்தது எல்லாம். புறப்பட வேண்டியதுதான். அதிலும் புறப்பட்டுச் செல்லும் போது சொல்லிச் கொள்ளாமல் போக வேண்டும்.

அந்தப் பெண் நச்சரித்துக் கொண்டிருப்பதால் எழுந்து விட்ட அவர், ''நீங்கள் இன்றும் சற்று நேரம் இங்கே இருப்பீர்களா?'' என வினாவினர். பிறகு சிறுமியின் கரத்தைப் பற்றியவாறு மெதுவாகப் படிகளிலேறி, அணைக்கட்டிலிருந்து இறங்கி சத்திரத்திற்கு மறைந்து போனார்.

கடந்த மூன்று நாட்களாக நானொரு விஷயத்தைக் கவனித்தேன். சத்திரத்தில் குழுமியிருந்த இத்தனை சொந்தக்காரர்களும்,


படிப்பகம்

பந்துக்களும் அரட்டையில் மூழ்கி இருந்தாலும் எவரும் இரண்டொரு வார்த்தைகளுக்கு மேல் இவரிடம் பேசவோ, அக்கறை காட்டவோ இல்லை. அதென்னவோ, இவர் யாரிடம் வலியப் பேசமுற்பட்டாலும், ஆமா . . . அப்படித்தான் . . . சரி . . . சரி. . . என இரண்டொரு வார்த்தைகளுடன் நகர்ந்து போயினர். எனக்கெதுவும் புரியவில்லை. எனினும் இதிலேதோ மர்மம் இருக்கிறதென்று தோன்றியது. சத்திரத்தின் ஒரு அறையின் மூலையில் இரண்டொரு துணிமணிகளை அடைத்திருந்த அவருடைய ஒரு பை மட்டும் தானிருந்தது. அவர் அங்குதான் உட்காருவார். பையிலிருந்த சாமான்களை சரிபார்த்து வைத்துக்கொண்டு, அப்பையைத் தலையணையாக வைத்துக் கொண்டுப் படுத்துவிடுவார். சாப்பிடும்போதோ, டிபன், காபி அருந்தும் வேளையிலோ, எவரும், இவ்விருவரையும் வருந்தி அழைத்தாக எனக்குப் புலப்படவில்லை.

ஆதவன் அத்தமித்துக் கொண்டிருந்தான். 'சரி! இனிக் கிளம்பலாம்' என நினைத்தேன். இதற்குள் ராமேசம் வந்து விட்டான். என்னைத் தேடிக் கொண்டு தான் வந்திருந்த என்னருகில் வந்தமர்ந்து கொண்டான்.

''என்னப்பா? என்ன நடந்து கொண்டிருக்கிறது?'' என்று வினவினேன் நான்.

காத்திருந்தவன் போல் நெடுமூச் செறிந்தவனாய், துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான் - ''இப்பொழுது தான் கடைத் தெருவிற்குப் போய் விட்டு வருகிறேன். உங்களோடு சாவகாசமாய் இரண்டொரு வார்த்தைப் பேசக்கூட அவகாசமில்லை. இன்று சுபகாரியங்கள் முடிந்து விட்டன. நாளை எல்லோரும் புறப்பட வேண்டியது தான். நீங்கள் அம்மணியோடு நம்ப ஊருக்கு வந்து விட்டுப் போகலாமே'' என்றான்.

''வராமலென்ன? தாராளமாய் வரலாம். லீவு கிடைக்க வேண்டும். பணம் வேண்டும். அவ்வளவுதான்'' எனச் சிரித்துக் கொண்டே கூறினேன்.

''அதெல்லாமில்லை. வரவேண்டும் என்ற எண்ணமிருக்க வேண்டும் இல்லாவிடில் பணத்திற்கும் லீவிற்கும் உங்களுக்கென்ன குறைவு?'' என்றான் அவன். சற்று நேரத்திற்குப் பின் சற்றே தயக்கத்துடன் நான் கேட்டேன்.

ராமேசம் முகத்தை எப்படியோ வைத்துக் கொண்டான். பின்னர் சிரித்தவாறே யார்? வெங்கடராவா? விசித்திரமான பிரகிருதியப்பா அவர்''

''என்ன விஷயம்?''

''அவர் எங்கள் எல்லோருக்கும் உறவு முறைதான். நெல்லூர் ஜில்லாவில் ஏதோவொரு குக்கிராமத்தில் ஏதோ வேலை வெட்டி பார்க்கிறார்''

ஏதோ வேலை வெட்டி என்பதில் இளக்காரம் முழுவதும் தொனித்தது. சின்ன வேலையாக இருக்கலாம்.

மேலே அவன் கூறுவதை எதிர்பார்ப்பது போல் நான் தொண்டையை செருமிக்கொண்டேன்.

''வேறென்ன! இப்படித்தான்- கல்யாணம், கல்லெடுப்பு எல்லாவற்றுக்கும் தவறாமல் ஆஜராகி விடுவார். இந்தத் தடவை பெண்டாட்டியைக் கூட்டிக் கொண்டு வரவில்லை. பெண்ணை மட்டும் அழைத்து வந்திருக்கிறார். மூன்று பெண்கள் போலிருக்கிறது. சமீபத்தில் தான் மூத்த பெண்ணிற்கு எப்படியோ தட்டி முட்டி கல்யாணம் செய்திருக்கிறார்.

padippakam

அந்த பெண்ணின் குடித்தனமும் இப்படி அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறதென்று கேள்விப்பட்டேன். மாப்பிள்ளை ஒண்ணாம் நம்பர் லோபராம். இன்னும் இரண்டு பெண்களிருக்கிறார்கள். இந்தப் பெண்தான் எல்லோரிலும் சின்னவள்.''

இதெல்லாம் சாதாரணமான விஷயம் தான். இதனால் . . . இவர் எப்படி விசித்திரமான பிரகிருதியாகி விட முடியும்? நான் யோசனையிலாழ்ந்தேன்.

என் மனத்திலிருந்ததை அறிந்து கொண்டவன் போல ராமேசம் மீண்டும் தொடர்ந்து கூறினான்.

''ஒண்ணாம் நம்பர் திருடன். கல்யாணம், சாவு என்று நாலு பேர் சேருமிடத்திற்கு வருகிறார் இல்லையா? ஏதாவதொரு பொருளை அபேஸ் செய்து கொண்டு போய்விடுவார். இவர் வந்தால் யார் ஜேபிலிருந்தாவது பணம் காணாமற் போய்விடும். அல்லது ஏதாவது வெள்ளிக் கிண்ணமோ, சங்கிலியோ மாயமாய் மறைந்து விடும். இது எல்லோருக்குமே தெரிந்த விஷயம் தான். இதனால்தான் இவர் தலையைக் கண்டதுமே எல்லோரும் எச்சரிக்கையாக இருந்து விடுவார்கள்.''

எனக்கு இது விந்தையாக இருந்தது ''இப்படி கூட மனிதர்கள் இருப்பார்களா?'' என்றேன்.

''அப்படி ஏன் கேட்கிறாய்? இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்'' என்றான் ராமேசம் சற்று அழுத்தமாக.

அன்றிரவு வெகுநேரத்திற்குப் பிறகு என் மனைவி என்னருகே வந்து படுத்துக்கொண்டு இளைப்பாற்றிக் கொள்ளலானாள்.

இந்த நாலு நாள் அலைச்சலில் அவள் மிகவும் சோர்ந்து போய் விட்டதாக எனக்குப்பட்டது.

அவளிடம் மெதுவாகத் தணிந்த குரலில் அந்த விஷயத்தைக் கூறினேன். அவளும் குசுகுசுவென்ற குரலில் ராமேசம் கூறியதை ஆமோதித்தாள். தவிர நிறைய உதாரணங்களும் கூறினாள்.

மறுநாள் எங்கும் ஒரே களேபரம். சாப்பாட்டிற்குப்பிறகு அவரவர்களின் ஊர்களுக்குத் திரும்ப வேண்டும். ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் யாவரும் அவரவர் சாமான்களை சரிசெய்து கொள்ளும் மும்முரத்திலிருந்தனர். அப்பொழுதுதான் நான் கவனித்தேன். என் செருப்பைக் காணோம். புத்தம் புதிய செருப்பு. இருநூறு ரூபாய் கொடுத்து வாங்கி இன்னமும் பத்து நாட்களாகவில்லை.

வார்த்தை ஏன் வாயிலிருந்து நழுவிய சுருக்கில் எங்கும் பரவி விட்டது. ஆனால் எவரும் உரத்து எதுவும் கூறவில்லை. குசுகுசுவென்று பேசிக் கொண்டனர். சில நொடிகளில் விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

''என்ன விஷயம்? ஏதோ கேள்விப்பட்டேனே! உண்மையா?'' என்று கேட்டவாறே ராமேசம் வந்து விட்டான்.

ஆமாம் என்று தலையாட்டினேன் நான், ''இப்பொழுது தான் வாசற்படிக் கருகில் கழற்றிவைத்தேன். குளித்து விட்டு வந்து பார்த்தால் காணோம்'' என்றேன்.

''பொறுங்கள் . . . ஒரு தமாஷ் காட்டுகிறேன்'' என்றவாறே ராமேசம் போய்விட்டான்.

வெங்கட்ராவ் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்தார். தன்


படிப்பகம்

padippakam

பையின் அருகே அமர்ந்து கொண்டு கோபத்துடன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த சிறுமியை நோக்கி "இரம்மா! போகலாம் . . . சாப்பிட்டதும் புறப்பட்டு விடலாம். . . பஸ்ஸில் ஏறிப்போகலாம். கொஞ்சம் பொறு . . ." என்று தழைந்த குரலில் கூறிக் கொண்டிருந்தார்.

பையை சரி செய்துவிட்டு ஜிப்பை இழுத்து மூடி பூட்டிவிட்டார். மறுபடியும் அதை இழுத்துப் பார்த்தார். பிறகு அதனருகேயே அமர்ந்து கொண்டார். கண்ணாடியைக் கழற்றி வேஷ்டி துணியால் துடைத்துப் போட்டுக் கொண்டார்.

இதற்குள் தடதடவென்று ராமேசம் வந்துவிட்டான். வந்ததும் வராததுமே வேங்கடராவை நோக்கி "நீங்கள் சற்று என்னுடன் வரவேண்டும். கடைத் தெருவில் கொஞ்சம் வேலை இருக்கிறது . . . . கிட்டத்தான். முக்கியமாக ஒரு சாமான் வாங்க வேண்டும். வாங்கிக் கொண்டு நீங்கள் அதை ரிக்ஷாவில் எடுத்துக் கொண்டு வந்து விடுங்கள். பதினைந்தே நிமிட வேலைதான். புறப்படுங்கள். எனக்கு வேறொரு வேலையாக ஸ்டேஷனுக்குப் போக வேண்டி இருக்கிறது" என அவரை அவசரப்படுத்தினான்.

வேங்கடராவிற்கு, தன்னையும் பொருட்படுத்தி ஒரு காரியம் செய்யும்படி கூறியதில் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். "இதோ வருகிறேன்' என்றவர், பெண்ணை . . . இங்கேயே உட்கார்ந்திரு" எனக் கூறியதும் அச்சிறுமி அழ ஆரம்பித்தாள்.

"அவனையும் கையோடு கூட்டிக் கொண்டு போங்களேன். ஆட்டோ ரெடியாக உள்ளது" என்றவாறே ராமேசம் அவ்விருவரையும் அழைத்துக் வெளியே சென்றான்.

வெளியே ஆட்டோ புறப்பட்டுச் செல்லும் ஓசை கேட்டது.

சற்று நேரத்திற்செல்லாம் ராமேசமும் இன்னும் சில ஆண்களும் பெண்களும் அறைக்குள் அவசரமாக வந்தனர்.

ராமேசம், வெங்கடராவின் பிளாஸ்டிக் பையைத் தன்னருகில் இழுத்து எல்லோர் எதிரிலும் திறக்க முயற்சித்தான். என் மனம் மிகுந்த வியாகுலமுற்றது. ஆயினும் நான் வாய் திறக்கவில்லை.

"ஆள் பலே ஆள்! பூட்டி வைத்திருக்கிறான் பார் பையை?" என்று ஒருவர் கிண்டலாகக் கூறினார்.

"பூட்டென்ன பூட்டு இது! ஒரு நொடியில் திறந்து விடலாம். பிசாத்து . . . " என்றவாறே ராமேசம் வேறேதோ சாவியைப் போட்டு அப்பூட்டைத் திறந்து விட்டான். ஜிப்பை இழுத்துத் திறந்தான். பையின் மேலாக வேஷ்டி, துணிமணிகள் இருந்தன. அதற்கடியில் காகிதத்தில் சுற்றிவைக்கப்பட்டிருந்த லட்டு, வடை போன்ற தின்பண்டங்கள் இருந்தன.

அதற்கடியில் - எனக்குத் தலை சுற்றியது - காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த செருப்புகள் . . . ஆம் என்னுடைய செருப்புகள் தான்.

ராமேசம் வெற்றி பெருமிதத்துடன் எல்லோரையும் பார்த்தான். பிறகு செருப்புகளை என் மனைவியின் கையில் கொடுத்தான். தின்பண்டங்களிலிருந்த பொட்டலங்களையும் எடுக்க ஆரம்பித்தான். ஆனால் அங்கிருந்த பெரியவர் ஒருவர் "விட்டுவிடப்பா . . . பாவம். அவைகள் பையிலே இருந்து விட்டு போகட்டும். ஏழ்மைப்பட்டவர். குழந்தைகளுக்குக் கொண்டு போய் கொடுப்பான்"


படிப்பகம்

padippakam

என்றார். கண்ணிமைப்பதற்குள் பையிலிருந்தவைகளை முன் போலவே வைத்து, எவருக்கும் சந்தேகம் வராதபடி ராமேசம் பூட்டைப் பூட்டி விட்டான். பை பத்திரமாக அது இருந்த இடத்திலேயே வைக்கப்பட்டது.

செருப்பை எங்கள் சூட்கேஸின் அடிப்பாகத்தில் பத்திரமாக வைத்த பின் தான் என் மனைவி அங்கிருந்து நகர்ந்தாள். இதன் பின் எதுவுமே நடக்காதது போல ஒவ்வொருவராக அவ்விடமிருந்து நகர்ந்து அவரவர் காரியத்தைக் கவனிக்கலாயினர். சற்று நேரத்திற்கெல்லாம் வெங்கடராவ் மகளுடன் திரும்பி வந்தார். நேராக பையினருகே சென்று உட்கார்ந்து கொண்டார். பிடிவாதம் செய்து முரண்டிக் கொண்டிருந்த சிறுமியைப் பார்த்து "சற்று இரம்மா! சத்தம் போடாதே. சாப்பிட்ட பிறகு பஸ்ஸேறி ஊருக்குப் போகலாம்" என்று சமாதானம் செய்யலானார்.

பன்னிரெண்டு மணிக்கு எல்லோருக்கும் சாப்பாட்டிற்கு இலை போட்டார்கள். வழக்கம் போல் பந்தியில் வெங்கடராவ் என்னருகே வந்தமர்ந்து கொண்டார். ஏதேதோ பேசியவாறே அவர் சாப்பிட்டார். பெண்ணைப் பார்த்து " சரியாகச் சாப்பிட்டுக் கொள்! பஸ்சில் ஏறி உட்கார்ந்ததும் நடுவே பசிக்கிறது, அது இது என்று சொல்லக் கூடாது" என்றவாறே அவளை வற்புறுத்தி சாப்பிடச் செய்தார்.

அன்றிரவு நாங்கள் அங்கே தங்கப் போவதில்லை. ஒரு சில முக்கிய மானவர்களைத் தவிர மற்றவர்கள் மனைவி குழந்தைகளுடன் புறப்பட்டு விட்டனர். சத்திரத்திற்கு வெளியே, ஆட்டோ, ஸ்கூட்டர் வண்டி என்று அமர்த்தி கொண்டிருந்ததால் ஒரே இரைச்சலாக இருந்தது. நான் வராந்தாவில் அமர்ந்திருந்தேன். பை சகிதம் வெங்கடராவ் என்னிடம் வந்து "நீங்கள் எப்பொழுது புறப்படுகிறீர்கள்?" என் வினவினார்.

"மாலை வண்டியில் முந்தா நாளே அவர்கள் எங்களுக்கு ரிசர்வ் செய்து விட்டார்கள்" என்றேன் நான்.

"நாள் வரட்டுமா? இனி எப்பொழுது சந்திப்போமோ தெரியாது. தங்களுடன் இருந்ததில் பொழுது நன்றாகக் கழிந்தது" என்றார். இதை அவர் கூறியவிதம் எப்படியோ இருந்தது.

இதன்பின் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டே பையுடன் அவர் கிளம்பிப் போய்விட்டார்.

அவர் தெரு முனையை அடைந்து கண்களுக்கு மறையும் வரையில் நான் பார்த்துக் கொண்டே நின்றேன்.

ஏனோ என் மனம் மிகுந்த வியாகூலமுற்றது.

என் மனைவி விரைந்து வந்தாள்.

"அந்த நல்ல மனுசன் போயாச்சா! இந்தாருங்கள் உங்கள் செருப்பு. போட்டுக் கொள்ளுங்கள்" என்று அச் செருப்புகளை அமர்க்களமாக எடுத்து என் காலருகில் போட்டாள்,

நான் சில நிமிடங்கள் கண்களை மூடியவாறே நின்றேன்.

என் விழித் திரையில் வெங்கடராவின் வறுமைக் கோலமும், நீளமான அந்த உருவம் மெல்ல மெல்லச் சென்று கொண்டிருந்ததும் நிழலாடியது.

அமிர்தம்
ஆசிரியர் : சூர்யா
95-B கல்யாண்புரம்
சென்னை - 39.


படிப்பகம்

padippakam

இருக்கும். அவளிடமிருந்து விடுபட்டு ஓடிவிடுவோமா என்று மனசு துடிக்கும். ஏதோ ஒரு சக்தி அவளிடம் இருந்து விடுபடுவதைத் தடுக்கும். மாதவியிடம் எப்போதும் வற்றாமல் ஒரு சுகந்தவாசனை வந்துகொண்டே இருக்கும்.

அவள், என் தலைக்கு எண்ணை தேய்த்து தலைவாரி விடுவாள். என்னை மடியில் தூக்கி வைத்துக் கொள்வாள். விதவிதமாக பண்ட பலகாரங்கள் வாங்கித் தருவாள்.

ஒவ்வொரு பண்டத்தையும் தின்பதற்கு முன் வானத்தில் இருந்து அம்மாவின் குரல் அசரீரியாக "அடே சண்டாளப் பாவி ... நாஞ்சொன்னதை மறந்துட்டியேடா" என்று சொல்வதைப் போல இருக்கும்.

வாரத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை என்று அப்பா எப்போதாவது ஊருக்கு வருவார். வரும்போதெல்லாம் ஒரு பெரிய பைநிறைய ஹோட்டல் பண்டங்களைக் கொண்டு வருவார். தங்கைக்கு அப்பா வருகிற நாள் எல்லாம் கொண்டாட்டம் தான். இருந்து பண்டங்களை எல்லாம் தின்று தீர்த்துவிட்டுத்தான் எந்திரிப்பாள்.

ராத்திரியில எப்பவும் நான் என் அம்மாவின் மேல் காலைத் தூக்கி போட்டுக்கொண்டுதான் தூங்குவேன். பெரிய பையனாகிறவரை அந்தபழக்கம் என்னைவிட்டுப் போகவில்லை.

அம்மாவின் அருகில் படுத்துக்கிடக்கிற போது, அம்மாவிடமிருந்து ஒரு வாசனை வரும். அழுக்கான சேலையில் இருந்து வியர்வை நெடியும், மாட்டுத் தொழுவின் நாத்தமும் சேர்ந்த சரவாதகலவையான ஒரு வாசனை அது. என்மனம் வெகு நாளாக அந்த வாசனையில் பழகி இருந்தது. அது தாய்மையின் சுகந்தம். அன்றும் அப்படித்தான் அம்மாவின் மேல் காலைத் தூக்கிப் போட்டுப் படுத்திருந்தேன். திடீரென்று அம்மாவின் விசும்பல் சத்தம்கேட்டு கண் விழித்தேன.

ராத்திரியின் மயான அமைதியைக் கிழித்துக்கொண்டு அப்பா கத்தினார். "இன்னொரு வாட்டி அவள் பேச்சை எடுத்தே .... அம்புட்டுத்தான்" என்றார். ஏற்கனவே, அப்பா, அம்மாவை அடித்திருப்பார் போல் இருக்கிறது. அம்மா அழுதுக்கொண்டே அவளை மேலும் மேலும் திட்டிக்கொண்டே இருந்தாள். "பாவம் அம்மா" என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டேன். அப்பா ஒரு முன்கோபி. அவரின் கோவத்திற்கு முன் யாராலும் நிற்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அதன்பின் எப்படியோ தூங்கிப்போனேன்.

காலையில் நான் தூங்கி எழுந்தபோது அம்மா, தன் நீண்ட கூந்தலை காலை இளம் வெயிலில் உலர்த்திக் கொண்டிருந்தாள். இராத்திரி ஏதும் நடக்காதது போல . . .

"அம்மா ... அப்பாவை எங்கம்மா"ன்னு கேட்டேன்.

"அப்பா, கோழிக்கூப்புட முதல் பஸ்ஸுக்கே, தெங்காசிக்குப் போயிட்டார்" என்றாள். அம்மாவின் கண்களில் இப்போது கலக்கமில்லை. முகம் சலனமில்லாமல் இருந்தது.

மாதவியை ஒருமுறை கூட அம்மா நேரில் பார்த்ததில்லை. மாதவியும் அம்மாவைப் பார்த்ததில்லை, அப்பாவுக்கு மட்டும் ரெண்டு உலகங்கள்.

ஒருநாளில் ஆத்தாமை தாங்காமல் அம்மா, என்னை அருகே அழைத்து அணைத்துக்கொண்டு கேட்டாள், "அவ எப்படி இருப்பா? சிவப்பா ... கறுப்பா, ஒல்லியா? தடியா ...? ரொம்ப அழகா இருப்பாளோ ...? மலையாளத்துக் காரியாமே, தமிழ் பேசுவாளா? நாம பேசுறது அவளுக்கு புரியுமா? நம்ம ஊர்ல யாரு மாதிரி இருப்பா?" என்று கேள்வி மேல கேள்வி கேட்டுத் துளைச்சி எடுத்தாள்.

நான் "சீ போம்மா ... உனக்கு வேற வேலை இல்லை. எனக்கு ஒண்ணும் தெரியாது" என்று சொல்லி அம்மாவிட மிருந்து விடுபட்டுத தெருவுக்கு விளையாட ஓடினேன்.

"அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கான். அழுக்கடிக்காரப் பேயல்-வாயைத் திறந்து செல்லுதானோ ...



படிப்பகம்

padippakam

பாரேன்?" என்று அம்மா சொல்வது தெருமுனையில் நான் திரும்பும் வரை என் காதில் விழுந்தது.

எப்போதோ ஒரு முறை டீமாஸ்டர் மேவிலாஸ் மாமா, யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்ததை நான் கூட இருந்து கேட்டேன். "செங்கோட்டையில் அவள் புருசன் செத்துட்டான். அதுக்குப்பிறகு அவளே அரிசி யாவாரம் பார்த்தாள். கடைக்கு அரிசி வாங்கப்போன லெக்குல எப்படியோ எங்க முதலாளிக்கும் அவளுக்கும் தொடுப்பாயிப் போச்சி, பிறகு இங்க கூட்டிக்கிட்டு வந்துட்டாரு. இங்க வந்தும் அவ அரிசியாவாரத்தை விடலை" என்றார்.

என் அம்மாவைப்போல இல்லை அவள். மாதவியின் வீடு எப்போதும் சுத்தபத்தாக இருக்கும். மூணுபத்தி வீடு, செப்புக்கணக்கா. எங்க வீடு குப்பையும் கூழுமாகத்தான் இருக்கும். மாட்டுத் தொழு, கோழிக் கூடு எல்லாம் சேர்ந்தே வீடு நாறும்.

மாதவி மூச்சுக்கு முன்னூறு தடவை "மோனே .... மோனே" என்பாள். யாராவது ஊருக்குப் புதியவர் அல்லது வெளியூர்க்காரர் வந்து "இது யார்னு" கேட்டா கூசாமல் பளிச்சென்று "இது எண்ட மோணாக்கும்" என்பாள். அவள் அப்படிச் சொல்வதைக் கேட்க எனக்கு அருவருப்பாக இருக்கும்.

அப்பா கடையில் ஏகப்பட்ட நஸ்டத்தால் ஏகப்பட்ட கடன் வாங்கி இருந்தார். கடைசியில் அம்மா பேருக்கு இருந்த நிலத்தை விற்றுத்தான் அப்பாவின் கடன்களை அடைக்கவேண்டியதாயிற்று.

அப்பா ஊருக்கு வந்தபின் மாதவி ஒருநாள் கூட அப்பாவைத் தேடிக் கொண்டு வரவில்லை.

"தேவடியா முண்ட எங்க குடும்பத்தக் கெடுத்த செறுக்கி. இன்னேரம் எவனை கைக்குள்ள போட்டுக்கிட்டு ஜாலியா இருக்காளோ?" என்று அம்மா அடிக்கடிப் புலம்பிக்கொண்டே இருந்தாள்.

அம்மா சொல்வதைக் கேட்டும் அப்பா காது கேளாதவரைப் போல இருந்தார். அவரின் முன்கோவம் எங்கோ விடைபெற்று போயிருந்தது.

அப்பா பதில் பேசவில்லை என்றதும் அம்மா மேலும் மேலும் புலம்ப ஆரம்பிப்பாள். "அந்த அவுசாரி முண்ட தான் அம்புட்டயும் உறிஞ்சிட்டு ஆளைமட்டும் அம்போன்னு விட்டுட்டாளே" என்றாள்.

அப்பா பதில் பேசவே இல்லை. தென்காசி கடையை விட்டுவந்தபின் அப்பாவின் கம்பீரம், அந்தஸ்து எல்லாம் போய்விட்டது.

நாலஞ்சி வருசத்தில் அப்பாவும், அம்மாவும் அடுத்தடுத்து போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

எப்போதாவது "மாதவி என்ன ஆனாளோ" என்று நினைத்துக் கொள்வேன். அவள் திருப்திக்காக ஒருநாள் ஒருபொழுதாவது அவளை "அம்மா" என்று வாய்நிறைய அழைத்தோமில்லையே என்று தோணும்.

சாத்தூருக்கு மாற்றலாகி வந்து நாலு மாசமாச்சி. ஊர், ஊரா பெட்டியையும் சட்டியையும் தூக்கிக்கொரண்டு போகிற போலீஸ் உத்தியோகம் வாச்சது எனக்கு.

ஒருநாள் மத்தியானச் சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு குட்டித் தூக்கம் முடிந்து சோம்பல் முறித்தபோது அம்மாவின் நினைப்பு வந்தது. தொடர்ந்து மாதவியின் நினைப்பும் வந்தது.

என் ஆறுவயது மகன் மகேஷ் வந்து "அப்பா வாசல்ல யாரோ ஒரு பொம்பளைச் சாமியார் வந்து நிக்கிறாங்க" என்றான்.

தூக்கக் கலக்கத்தோடு வாசலுக்குப் போன நான் அந்த பொம்பளைச் சாமியாரை கூர்ந்து கவனித்தேன். அவள் மாதவியேதான்.

என்னையும் அறியாமல் "அம்மா" என்றழைத்தேன். அவளும் என்னை அடையாளம் கண்டுக் கொண்டாள். "மோனே" என்றாள்.

கழுத்து நிறைய உத்திராட்சைக் கொட்டையும், நெற்றியில் விபூதிப் பட்டையும் காவிச் சேலையுமாக மாதவியை சன்னியாசினிக் கோலத்தில் பார்த்தது, ஏனோ எனக்கு நிறைவாக இருந்தது.


படிப்பகம்

padippakam

# எய்ட்ஸும் எழுத்தாளர்களும்

**சிவக்குமார்**

எய்ட்ஸ் - இந்த ஆட்கொல்லி நோய் எவரையும் தாக்கலாம். ஒருவர் ''அவர் யாராக இருக்கிறார்'' என்பது முக்கியமன்று. மாறாக ''அவர் நடத்தை முறைகள்'' தாம் முக்கியம் எய்ட்ஸ் வருவதற்கு. எனவே எழுத்தாளர்களும் குடிமக்கள்தாம், அவர்களுக்கும் எய்ட்ஸ் பற்றிய செய்திகளைச் சொல்லவேண்டும். கூடவே எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பணியில் அவர்களையும் படைப்புகள் வழி ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்திய அரசு களவிளம்பர இயக்குநரகத்தின் திருநெல்வேலி அலுவலகம் ''எழுத்தாளர்களுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கம்'' ஒன்றை 22-03-97 அன்று திருநெல்வேலியில் நடத்தியது.

கள விளம்பர அதிகாரி என்ற முறையில் கருத்தரங்கம் பற்றிய முதல் அறிவிப்புக் கடிதத்தைத் தயார் செய்து எழுத்தாளர்களுக்கு அனுப்பியபோது எனக்குக் கொஞ்சம் பயம் இருக்கவே செய்தது. காரணம் ''எய்ட்ஸ்''. எழுத்தாளர்கள் என்ன மோசமானவர்களா? அவர்களுக்கு எய்ட்ஸ் பற்றி சொல்லி திருத்தப் போகின்றீர்களா என கண்டனம் தெரிவிப்பார்களோ என்ற பயம்தான். ஆனால் கடிதம் அனுப்பிய மூன்றாவது நாள் பயம் நீங்கிவிட்டது. கருத்தரங்கிற்கு வருகின்றோம் என ஒவ்வொருவராகப் பதில் எழுதத் தொடங்கிவிட்டனர். ''எய்ட்ஸ்'' பற்றித் தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். நேர்முகமாக என்னைச் சந்தித்துப் பேசிய எழுத்தாளர்கள் பலருக்கு 'எய்ட்ஸ்' பற்றி போதுமான விழிப்புணர்வு இல்லாததையும் நான் உணர முடிந்தது.



எய்ட்ஸ் கருத்தரங்கில் சு. சமுத்திரம் பேசுகிறார்.

கருத்தரங்கத் துவக்கவிழா முதல் நிகழ்ச்சியாக நடைபெற்றது. இதற்கு களவிளம்பர இணை இயக்குநரும் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளருமான சு. சமுத்திரம் தலைமை வகித்துப் பேசினார். இன்றைய நமது கலாச்சாரம் சினிமாவில் சீரழிந்து விட்டது. இன்று வாழ்க்கை சினிமாவாக மாறிவிட்டது;


படிப்பகம்

padippakam

சினிமா வாழ்க்கையாகிவிட்டது என்று துவங்கிய சமுத்திரம் எய்ட்ஸ் பாதித்துள்ள நபர்களில் பாதிக்குமேல் உயர்வகுப்பினர் என்ற தகவலைத் தூக்கிப் போட்டார். இங்கு குழுமியுள்ள நமக்கு எய்ட்ஸ் இல்லை. காரணம் HIV Test நமக்கு செய்யப்பட வில்லை என்பதுதான் என்று அவர் தெரிவித்தார். கருத்தரங்கத் துவக்க வுரையை பாளையங்கோட்டை ஜோசப் மருத்துவமனையின் டாக்டர் ஆக்னஸ் ஆற்றினார். எழுத்தாளர்கள் நினைத்தால் சமூகத்தை மாற்றிவிட முடியும். அவர்களுக்கு சமூகப் பொறுப்புணர்வு அதிகமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட ஆக்னஸ் எய்ட்ஸ் நோயாளியை மணக்க மறுக்கும் உரிமை பெண் களுக்கு வேண்டும் - இதற்கு சட் டப்பூர்வமான உதவி வேண்டும் என்றார்.

துவக்க நிகழ்ச்சியிலேயே நெல்லையின் இருபெரும் மூத்த எழுத்தாளர்கள் தி.க. சிவசங்கரனும் தொ.மு. சிதம்பர ரகுநாதனும் சிறப்புரை ஆற்றினர். தி.க.சி. தனது உரையில் லெனின் போன்றவர் களைப் பயன்படுத்தி எய்ட்ஸ் விழிப்புணர்வு குறும்படங்கள் தயாரிக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். எய்ட்ஸ் நோயாளி களைத் தங்களது அனுபவங்களை எழுதிக் கேட்டு வெளியிடலாம் என்று மற்றுமொரு ஆலோசனையைத் தெரிவித்தார். சமூக நீதியை நிலைநிறுத்துபவர்களாக எழுத்தாளர்கள் விளங்க வேண்டும். சமூகப் பிரச்சனைகளுக்கு எழுத்தாளர் கள் தங்களது படைப்பில் பதில் சொல்லியாக வேண்டும். வாச்சாத்தி யில் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட நிகழ்ச்சி ஏன் பல எழுத்தாளர்கள் மனதைப் பாதிக்க வில்லை என்ற ஒரு முக்கிய கேள்வியையும் அவர் எழுப்பினார்.

அடுத்து தொ.மு. சிதம்பரரகுநாதன் ''எழுத்தாளர்கள் எத்தனைபேர் ஒழுக்கமாக இருக்கிறார்கள், தங்களது சொந்த வாழ்க்கையில்?'' என்ற கேள்வியோடு தனது உரையைத் தொடங்கினார். எய்ட்ஸ் ஒரு பறங்கி நோய். இதற்கு முன் சிபிலிஸ் இருந்தது. புதுமைப்பித்தனின் துன்பக் கேணி கூட அதுபற்றிய கதைதான். எய்ட்ஸ் சுகாதாரப் பிரச்னை மட்டும் அன்று. Moral Degeneration பற்றிய பிரச்சனை என்று அவர் குறிப்பிட் டார்.

துவக்க நிகழ்ச்சிக்கு முதல் அமர்வு நடைபெற்றது. பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக்கல்லூரி அறுவை மருத்துவத்துறைப் பேரா சிரியர் டாக்டர் A. குமாரவேல் எய்ட் ஸ் உண்டாக்கும் HIV கிருமியின் தன்மை, அது பரவும் விதம், தடுக்கும் வழிமுறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். சமூகத்தில் எய்ட்ஸ் நோயாளிகள் ஒதுக்கப்படுகின்றனர்; அலைக்கழிக்கப்படுகின்றனர். எய்ட்ஸ் நோயாளிகளுக்கு நாம் அனைவரும் ஆதரவு தரவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து நேரு யுவகேந்திராவின் மாவட்ட இளையோர் ஒருங்கிணைப் பாளர் இரா. மதிவாணன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தொடர்பியல்துறை முதுநிலை விரிவுரையாளர் வி. நடராஜன் ஆகியோர் உரையாற்றி னர்.

மதிய உணவுக்குப் பிறகு விவாத அமர்வு தொடங்கியது. விவாத ஒருங்கிணைப்பாளர்களாக தோப்பில் முகமது மீரான், கவிஞர் பாலா, சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவர் டாக்டர் தி.சு. நடராசன் செயல்பட்டனர். யுத்தத்தை



படிப்பகம்

எதிர்கொள்வதற்கான முஸ்தீபுக ளோடு எழுத்தாளர்கள் எய்ட்ஸை எதிர்கொள்ள வேண்டும் என தி.சு. நடராசன் கேட்டுக் கொண்டார்.

எழுதுகின்ற மொழி எனதாக இருக்கும்போது எழுதப்படும் கருப் பொருளும் எனதாகவே இருக்க வேண்டும். இந்தப் பொருளில் எழுது என என்னிடம் சொன்னால் அப்படி என்னால் எழுத முடியாது என்றார் தோப்பில் முகம்து மீரான். ஆனால் மனசைப் பாதித்தால் பிறகு என்றாவது அவ்விஷயம் எழுத்தில் வரும் என்றும் சொன்னார்.

எய்ட்ஸ் நோயாளிகள் பிறரோடு உடலுறவு கொள்வதைத் தடுப்பது எப்படி என்றும் எய்ட்ஸ் நோயாளி கள் திருமணம் செய்து கொள்ளலாமா என்றும் அமர்வில் விவாதிக்கப்பட் டது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு Castration செய்து விடலாம் என தொ.மு.சி.பரிந்துரைத்தார். பெண்களுக்கு என்ன செய்வது? என்ற கேள்வியை முன் வைத்தபோது பாலுணர்வு அற்றுப்போக சிகிட்சை செய்ய வேண்டும் என்றார். இக்கருத்தை டாக்டர் A. குமாரவேலு மறுத்து மனிதநேயப்படியும் மருத்துவத் தொழில் தர்மப்படியும் எந்நோயாளிக் கும் பிறர் போலவே வாழும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்; அதை மறுக்கக் கூடாது என்றார். எய்ட்ஸ் நோயாளிகளுக்கு அவர்களது நோய் பற்றி எடுத் துரைத்து கூடுமானவரை அவர்கள் உடலுறவில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அதையும் மீறி உடலுறவு கொண்டால் ஆணுறை யைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தலாம் என்றார் டாக்டர் குமாரவேலு.

எய்ட்ஸ் நோயாளிகள் திருமணம் செய்து கொள்ளலாமா, கூடாதா? என்பது அடுத்து நடந்த முக்கிய விவாதம். ஒரு ஆண் எய்ட்ஸ் நோயாளி நோயை மறைத்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், அப்பெண்ணுக்கும் பிறகு பிறக்கும் குழந்தைக்கும்கூட எய்ட்ஸ் வர வாய்ப்பு இருப்பதால் எய்ட்ஸ் நோயாளிகள் திருமணமே செய்து கொள்ளக்கூடாது எனப் பல எழுத்தாளர்கள் வாதிட்டனர். திருமணம் இனி ஜாதகம் பார்த்து நடக்கக்கூடாது. Blood test ரிப்போர்ட் பார்த்து HIV Negative என்றால்தான் சம்பந்தமே பேச வேண்டும் என்ற ஆலோசனை கூட முன்வைக்கப்பட் டது.

இதற்கும் டாக்டர் குமாரவேல் பதில் சொன்னார் :

"திருமணம் செய்யக்கூடாது என்று சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. எய்ட்ஸ் நோயாளி ஆணாக இருந்தால் மணமுடிக்கப் போகிற தமக்கு எய்ட்ஸ் உள்ளது என்று சொல்லி அவர்கள் சம்மதித்த பிறகே திருமணம் நடக்க வேண்டும். தம்பதிகளுக்கு இடையில் பாதுகாப் பான உடலுறவே (Safer Sex) இருக்க வேண்டும். அவர்கள் கட்டாயம் குழந்தை பெறுவதைத் தவிர்க்க வேண்டும்."

இக்கருத்தரங்கில் கலாப்ரியா, பூமா ஈஸ்வரமூர்த்தி, தளவாய் சுந்தரம், நண்பர் வட்டம் பாக்கியமுத்து - சரோஜினி, மேனகா புஷ்பன், காசி மாரியப்பன், கவிஞர் பாமணி, செல்சேவிஸ், மதுரா, ஆ.இரா. வேங்கடாசலபதி, சதங்கை ஆசிரியர் வனமாலிகை, ஆர். எஸ். ஜேக்கப், கிருஷி, இரா. நாறும்பூநாதன், டிவி. பாலசுப்ரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Edited and Published by Vanamaaligai, 53/2, Pandian Street, Kavimony Nagar, Nagercoil - 629 002 and Printed by Bharathy Press, Chettikulam, Nagercoil - 629 002

padippakam


மண்டபம் : 26974
✆ : வீடு : 23949
மில் : 25916

# சீதா லெட்சுமி திருமண மண்டபம்

இருளப்பபுரம்,

**நாகர்கோவில் - 2.**



உரிமையாளர் : **Dr. S. சதாசிவன்**

திருமண வைபவங்களுக்கு தேவையான சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டது.


படிப்பகம்

padippakam




படிப்பகம்